பக்கங்கள்: 14

Registered as a Newspaper

தரமான
உதிரிப்பாகங்களை
கொண்டு தயாரிக்கப்படும்



நியூரோன்
வாட்டர் பம்புகளை
வாங்குங்கள்

# சஞ்சீவி

அறிவு-ஆக்கம்-அபிவிருத்தி

விலை
ரூ. 5-00

PUMP
With
Standard Accessories
Select



NEWTONE
Water Pumps

மலை: 5 சுக்கில ஷூ பங்குனிமீ 25 உ சனிக்கிழமை ஹிஜ்ரி 1410 றம்ழான் பிறை 10 (07—04—1990) SANJEAVY REGENERATIVE TAMIL WEEKLY சிகரம்: 9

# இனக்கலவரம் இடம்பெற இனி அனுமதிக்கமாட்டோம்!

## விடுதலைப் புலிகள் பிரமுகர் ரூபன் திருமலைக் கூட்டத்தில் அறிவிப்பு

திருகோணமலை, ஏப்ரல் 7

திருகோணமலையில் இனிமேல் இனக்கலவரம் ஏதும் ஏற்படுவதற்கு நாம் அனுமதிக்கமாட்டோம்,

— இப்படி அறிவித்திருக்கிறார் விடுதலைப் புலிகளின் திருகோணமலை மாவட்ட அரசியல் பொறுப்பாளர் திரு. ரூபன். நேற்று முன்தினம் மாலை திருகோணமலை முற்றவெளி அரங்கில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் வைத்து அவர் இந்த அறிவிப்பை விடுத்தார்.

''அரசியல் நீரோட்டத்தில் இறங்குவதற்கு நாம் முன்வந்திருக்கிறோம். இதனைக் குழப்புவதற்கு அரசாங்கமோ அல்லது வேறு சக்திகளோ முயன்றால் தொடர்ந்து ஆயுதங்களை வைத்திருப்பதை தவிர எமக்கு வேறு வழி ஏதும் இல்லை'' என்றும் அவர் சொன்னார்.

இந்தக் கூட்டத்தில் உரையாற்றுகையில் திரு. ரூபன் மேலும் கூறியதாவது:-

சுயநிர்னய உரிமை நாம் பெற்றுக் கொள்ளும் வரை ஆயுதங்களைக் கைவிடமாட்டோம். ஆயுதங்கள்தான் எமது மக்களுக்குப் பக்கபலமாக இருந்துவருகிறது.

எங்களை — எமது மக்களைப் பாதுகாப்பதற்கு— ஆயுதங்கள் முக்கியமானவை என்பதை ஒரு நாட்டிடம் இருந்து தெரிந்து கொண்டோம்.

எமது மக்களின் பாதுகாப்பு மற்றும் அரசியல், பொருளாதார விடுதலையை உறுதி செய்வதற்காகவே இலங்கை அரசுடன் பேச்சு நடத்த நாம் முன்வந்தோம்.

(5 ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியாவில் காட்டு யானை அட்டகாசம்

வவுனியா, ஏப். 7

வவுனியா தெற்கு சிங்களப் பிரிவு உதவி அரசாங்க அதிபர் பிரிவைச் சேர்ந்த மகா கச்சகொடி என்னும் கிராதினுள் புகுந்த காட்டுயானை ஒன்று 8 வீடுகளைத் தாக்கி சேதமாக்கியது.

தெய்வாதீனமாக எவருக்கும் காயம் ஏற்படவோ உயிரிழப்பு ஏற்படவோ இல்லை.

எனினும் வெறிகொண்ட யானையினால் துரத்தப்பட்ட 14 வயது சிறுமியொருத்தி அதிர்ச்சிக்கு உள்ளாகி அதிலிருந்து மீளவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது. [இ-146]

## யுத்தம், கொலைகள், அகதிகள் மீண்டும் நமக்கு தேவைதானா?

### சிந்தித்து செயற்படக் கேட்கிறார் ஜனாதிபதி

கொழும்பு, ஏப் 7

எமக்கு மீண்டும் யுத்தம் வேண்டுமா? நாம் சண்டையிடத்தான்வேண்டுமா? கொலைகள் இடம்பெற வேண்டுமா? மீண்டும் அகதிகள் தோன்ற வேண்டுமா?

இதனை நன்கு சிந்தித்துச் செயற்பட வேண்டும்.- இவ்வாறு ஜனாதிபதி திரு. ஆர் பிரேமதாச தமது கட்சித் தொழிற்சங்க வைபவம் ஒன்றில் பேசுகையில் தெரிவித்தார்.

தீவிரவாதவன் செயல்களின் போது உயிரிழந்த மற்றும் பாதிக்கப்பட்ட ஜாதிகசேவக சங்மய (ஐக்கிய தேசியக் கட்சியின் தொழிற் சங்கத்தின்) உறுப்பினர்களின் குடும்பங்களுக்கு பணமும், பொருள்களும் வழங்கப்பட்டன.

கோட்டே பிதிகோதாவில் நேற்று நடைபெற்ற இந்த வைபவத்தில் ஜனாதிபதிபேசுகையில் மேலும் தெரிவித்ததாவது:-

நாட்டில் இருந்து பீதியை முற்றாக அற்ற இன்னமும் சவாலை எதிர்நோக்க வேண்டியதாக உள்ளது.

மற்றுமொரு வெளிநாட்டு இராணுவம் நாட்டுக்குள் பிரவேசிகாத வகையில் நாம்

(5 ஆம் பக்கம் பார்க்க)

# அரசு - புலிகள் பேச்சு இன்று கொழும்பில்!

கொழும்பு, ஏப்ரல் 7

விடுதலைப் புலிகளுக்கும் அரசாங்கத்திற்கும் இடையிலான அடுத்த கட்டப் பேச்சுக்கள் இன்று கொழும்பில் ஆரம்பமாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்தப் பேச்சுக்களில் பங்குபற்றுவதற்காக விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் தலைவர் திரு. கோபாலசாமி மகேந்திரராஜா (மாத்தயா), செயலாளர் நாயகம் திரு. யோகரட்ணம் யோகி, ஆலோசகர் டாக்டர் அன்ரன் பாலசிங்கம், திருமதி பாலசிங்கம் ஆகியோர் விசேட ஹெலிக்கொப்டரில் இன்று காலை பலாலியிலிருந்து புறப்பட்டுச் செல்வர் என எதிர்பார்க்கப்பட்டது.

இந்தியப் படைகள் ஈழத்திலிருந்து முற்றாகவெளியேறிய பின்னர் அரசு மற்றும் விடுதலைப் புலிகளுக்கு இடையில் நடைபெறும் முதலாவது கட்டப் பேச்சு இதுவாக இருப்பதால், இந்தப் பேச்சுக்களின் போது முக்கியமான பல விடயங்கள் பற்றி பேசி முடிவு எடுக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

கொழும்பு செல்லும் விடுதலைப் புலிகள் பிரதிநிதிகள் ஜனாதிபதி திரு ஆர். பிரேமதாசாவை நேரடியாகச் சந்தித்துப் பேசுவார்கள் என்றும் எதிர்பார்க்கப்பட்டது.

விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் திரு. வே பிரபாகரனும் ஜனாதிபதி திரு.ஆர். பிரேமதாச வும் நேரடியாகச் சந்திப்பதற்கு உள்ள வாய்ப்புக்கள் குறித்தும் இந்தப் பேச்சுக்களின் போது ஆராயப்படும் என எதிர்பார்க்கப்பட்டது. [உ]

## வடக்கு கிழக்கு மாகாணசபை நடத்தும் பட்டதாரிகள் பயிற்சி தொடரும்

### பிரதம செயலாளர் கணேஷ் தகவல்

திருகோணமலை, ஏப் 7

பட்டதாரிகளுக்கு வழங்கப்பட்டுவரும் பயிற்சி நிறுத்தப்படமாட்டாது. பயிற்சி தொடர்ந்து நடைபெறும். பயிற்சி நிறுத்தப்படும் என்று கூறப்படுவதில் எதுவித உண்மையும் இல்லை.

வடக்கு, கிழக்கு மாகாண சபையின் பிரதம செயலாளர் திரு. சொ. கணேசநாதன் இவ்வாறு சஞ்சீவிகுத் தெரிவித்தார்.

மாகாண சபையின் பல்வேறு அமைச்சுக்களில் ஊழியர்களின் வரவு சற்று அதிகரித்துள்ளது. நிர்வாகம் சீராக இயங்குகிறது--

பொதுநலச் சேவைகளைக் கூடுதலாகக் கவனிப்பதற்காக மூலதனச் செலவினங்களைக் குறைத்துள்ளோம்—

ஆயினும் வீடமைப்புப் போன்ற பணிகள்தொடர்ந்து நடைபெறுகின்றன. எவரும் வேலையிலிருந்து நிறுத்தப்படமாட்டார்கள். எனினும் மார்ச் மாதம் முதலாம் திகதி தொடக்கம் வேலைக்கு அமர்த்தப்பட்டவர்களை என்ன செய்வது என்றுதான் இப்போது பரிசீலனை செய்கிறோம்- என்று திரு. கணேசநாதன் மேலும் தெரிவித்

(5 ஆம் பக்கம் பார்க்க)

## நோன்பு திறக்கும் நேரம்

7 - 4 - 90
ஸஹர் முடிவு -4 - 32
நோன்பு திறக்கும் நேரம் - 6 -22

## யாழ் கொழும்பு ரயில் மீது பல இடங்களில் கல்வீச்சு!

யாழ்ப்பாணம், ஏப்ரல் 7

யாழ்- கொழும்பு சேவையில் ஈடுபடும் ரயில்கள் வட பகுதியில் பல இடங்களில் கல்வீச்சுக்கு இலக்காவதாகக் கூறப்படுகிறது.

கடந்த ஒருவாரத்தில் சுன்னாகத்திற்கும் - மாவட்டபுரத்திற்கும் இடையில் வைத்து மூன்று தடவைகள் ரயில்கள் மீது கல்வீசப்பட்டதாக முறையிடப்பட்டுள்ளது.

இதேவேளை அண்மையில் மீசாலைப்பகுதியில் வைத்து ரயில் மீது கல்லெறியப்பட்டதில் புகையிரத கார்ட் ஒருவர் படுகாயமடைந்தார்.

இந்தக் கல்வீச்சினால் ரயில் பெட்டிகள் பலத்த சேதமாகுவதாகவும் கூறப்படுகிறது.

இந்தச் சம்பவங்கள் பற்றி விடுதலைப் புலிகளிடமும் முறையிடப்பட்டுள்ளதாகத் தெரியவந்தது.

இதேவேளை ''ஏப்ரல் முட்டாள்'' தினத்தன்று யாழ்— கொழும்பு சேவையிலீடுபட்ட ரயிலின் பெட்டிகளை நோக்கி மாட்டு சாணம் கரைத்த நீர் வீசப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. (உ.9)

## 4 உதவி அரச அதிபர் பிரிவுகளில் நாளை முதல் 16 ஆம் திகதி வரை காணிக் கச்சேரிகள்

யாழ்ப்பாணம், ஏப். 7

யாழ் மாவட்டத்தில் காணி அற்றவர்களுக்குக் காணி பகிர்ந்தளிப்பது தொடர்பான காணிக் கச்சேரிகள் நாளை எட்டாம் திகதி தொடக்கம் 16ஆம்திகதிவரை காலை 9 மணியிலிருந்துநடைபெறும்.

தெல்லிப்பளை உதவி அரசாங்க அதிபர் பிரிவுக் காணிக் கச்சேரி 8ஆம் திகதி அதன் உ. அ. அதிபர் பணிமனையில் நடைபெறும்.

பருத்தித்துறை உதவி அரசாங்க அதிபர் பிரிவுக் காணிக் கச்சேரி 9ஆம், 10ஆம் திகதிகளில் அதன் பணிமனையில் நடைபெறும்.

வேலணை உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்கான காணிக் கச்சேரி 11ஆம் திகதி மண்டைதீவு மகாவித்தியாலயத்தில் நடைபெறும்.

சாகச்சேரி உதவி அரசாங்க அதிபர் பிரிவில், தென்மராட்சி மத்தி, மேற்கு பகுதியினருக்கு சாவகச்சேரி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் 11ஆம் திகதி காணிக்கச்சேரி நடைபெறும்.

தென்மராட்சி கிழக்கு, மீசாலை வடக்குப் பகுதியினருக்கு கொடிகாமம் பிரதேச சபை காரியாலயத்தில் 16ஆம் திகதி காணிக்கச்சேரி நடை

(5ம் பக்கம் பார்க்க)

## அன்னை பூபதியின் நினைவாக முல்லைத்தீவு நகரில் தினசரி உண்ணாவிரதம்

ஒட்டுசுட்டான், ஏப் 7

அன்னை பூபதி நினைவாக முல்லைத்தீவு நகரில் தினசரியாக சுழற்சிமுறையாக உண்ணாவிரதம் அனுஷ்டிக்கப்பட்டுவருகிறது.

பஸ் நிலையத்தில் விசேடமாக அமைக்கப்பட்டுள்ள பந்தலில் அன்னையின் உருவப்படம் மலர்களால் அலங்கரிக்கப்பட்டு, விளக்கேற்றி வைக்கப்பட்டுள்ளது.

கள்ளப்பாடு மீனவர் மாதிரிக்கிராமத்தில் அன்னையின் நினைவாக மரம் நாட்டு விழா ஒன்றும் இடம்பெற்றது.

மணல்குடியிருப்பு, கள்ளப்பாடு, வண்ணாங்குளம், வட்டுவாள் போன்ற கிராமங்களைச் சேர்ந்த மக்கள் கடந்த நாட்களில் உண்ணாவிரதம் அனுஷ்டித்தனர். (ஒ-113)

## புலிக் கொடி மீது பிறந்த மோகம்

அமெரிக்க, பிரெஞ்சு அதிகாரிகளுக்கு தமிழீழ விடுதலைப் புலிகளின் கொடியில் மோகம் ஏற்பட்டது.

யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்திருந்த கொழும்பில் உள்ள அமெரிக்க, பிரெஞ்சு தூதராலயங்களின் அதிகாரிகள் தம்முடன் ஒவ்வொரு புலிக் கொடியை எடுத்துச் சென்று வைத்திருக்க விரும்புவதாகத் தெரிவித்தனர்.

''இங்கு பார்த்தால் எங்

(5 ஆம் பக்கம் பார்க்க

## திருமலையில் இன்று தேர்

யாழ்ப்பாணம். ஏப் 7

திருகோணமலை ஸ்ரீ பத்திரகாளி அம்மன் ஆலய வருடாந்த இரதோற்சவம் இன்றாகும். அதையொட்டி சிறப்பு மலர் இன்றைய சஞ்சீவியின் மூன்றாம் பக்கத்தில பிரசுரமாகின்றது. [உ]

## பாதிக்கப்பட்ட அரச ஊழியருக்கான நிவாரணம் கொடுப்பனவு மேலும் தாமதமாகும்!

யாழ்ப்பாணம், ஏப்ரல் 7

பாதிக்கப்பட்ட அரச ஊழியர்களுக்கு நிவாரணம் வழங்குவது தொடர்பான பொது நிர்வாக அமைச்சின் சுற்றறிக்கையில் திருத்தம் செய்யப்பட இருக்கிறது. இதனால் இந்த நிவாரணக் கொடுப்பனவு தாமதமாகும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்தகால வன்செயல்களினால் மரணமான, சொத்துக்களை இழந்த அரச ஊழியர்களுக்கு அவர்களது குடும்பங்களுக்கு நிவாரணம் வழங்கும் திட்டங்கள் சம்பந்தமாக பொதுநிர்வாக அமைச்சு 49/89, 59/89 ஆகிய இலக்கங்களைக் கொண்ட இரு சுற்றறிக்கைகளை விடுத்திருந்தது.

இதன்படி, பாதிக்கப்பட்ட அரச, கூட்டுத்தாபன ஊழியர்கள் விண்ணப்பங்களை அனுப்பி இருந்தனர். பல மாதங்களாகியும் எந்த வித நிவாரணமும் வழங்கப்படவில்லை.

தற்போது புனர்வாழ்வு அமைச்சிடம் இருந்து கிடைத்துள்ள பதிலில் பின்வருமாறு தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

''பொதுநிர்வாக சுற்றறிக்கைகளில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட இருக்கின்றன. இது சம்பந்தமாக மாகாண

(5 ஆம் பக்கம் பார்க்க)

## ரூ. 15 லட்சம் பெறுமதியான 'ஹெரோயின்' கடத்திய 9 பிள்ளைகளின் தாய்

கொழும்பு, ஏப்ரல் 7

சென்னையில் இருந்து 15 லட்சம் ரூபா மதிப்பு வாய்ந்த ஹெரோயின் போதைவஸ்தைக் கடத்திக் கொண்டு வந்த ஒன்பது பிள்ளைகளின் தாய் கட்டுநாயக்கா விமான நிலையத்தில் சுங்க அதிகாரிகளிடம் சிக்கினார்.

கடந்த செவ்வாய்க்கிழமை இச் சம்பவம் இடம்பெற்றது.

அழுகின்ற கைக்குழந்தையுடன் சூட்கேஸ் ஒன்றைக் கொண்டுவந்த அப்பெண் சுங்க அதிகாரியின் முன்நின்று குழந்தை அழுவதைக் காட்டி விரைவாக வெளியே செல்ல முயற்சித்தார்.

ஆனால் சுங்க அதிகாரியோ குழந்தை அழுவதைப்பற்றிக் கவனிக்காமல் அப்பெண் வைத்திருந்த சூட்கேஸை பூரணமாகச் சோதனையிட்டார். அதனுள் அருந்து ஹெரோயின் போதைவஸ்து கைப்பற்றப்பட்டது.

அப்பெண் போதைவஸ்து தடுப்புப் பணியக அதிகாரிகளிடம் மேல் விசாரணைக்காக ஒப்படைக்கப்பட்டார். (உ-எ)

## சுப நேரம்

06- 04 -1990

சனிக்கிழமை பங்குனி 25

சுபநேரம்:

03-08முதல் 04-38 வரை

இராகுகாலம்

09 -08 முதல்10-38 வரை

இவை இரவுக்கும் பகலுக்கும் பொருந்தும்

## ராஜீவை தாக்கியவர் விடுதலை: இ.காங்கிரஸின் கண்டன பிரேரணை முயற்சி தோல்வி

### சபையிலிருந்து வெளிநடப்பு

சென்னை, ஏப் 7

ராஜீவ்காந்தியைத் தாக்கிய இலங்கை கடற்படை வீரர் ரோஹன டி சில்வா விடுதலை செய்யப்பட்டதைக் கண்டித்து நேற்று தமிழக சட்டசபையில் இந்திராகாங்கிரஸ் உறுப்பினர்கள் பிரேரணை ஒன்றைக் கொண்டுவர முயற்சித்தனர்.

அதற்கு சபாநாயகர் அனுமதி மறுக்கவே எதிர்க்கட்சி உறுப்பினர்கள் சபையில் இருந்து வெளிநடப்புச் செய்தனர்.

இதேவேளை இலங்கை அரசு ரோஹன டி சில்வாவை விடுதலை செய்ததைக் கண்டித்து தமிழ்நாடு காங்கிரஸ் கட்சி, சென்னையில் உள்ள இலங்கைத் தூதரைச் சந்தித்து அவரிடம் மகஜர் ஒன்றைச் சமர்ப்பித்தது. (இ-தி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

இலந்தைக் குளம் வீதி அம்மன் கோவிலிற்கு அண்மையில் சகலவசதிகளும்கொண்ட 2½ பரப்புக் காணியுடன் வீடும் விற்பனைக்குண்டு. விலை நேரில் பேசித் தீர்மானிக்கலாம். தொடர்பு தி. வசந்தகுமார், 79 ஆனந்தன் வடலி றோட், அரியாலை யாழ்ப்பாணம். (C/4427)

CD 125 T Benly 1987 Model விற்பனைக்குண்டு. தொடர்பு Dr. Rajeswaran Palaly Road, Thirunellvely orth, Jaffna. காலை 10 மணிமுதல் 12 மணிவரை பார்வையிடலாம். (3217)

பூரண விளைத் திறனுடைய பம்பாய் வெண்காய விதை ரம்பூர் சிகப்பு ரகம் விற்பனைக்கு உண்டு. கிலோ 375 ரூபா பிள்ளையார், 259, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். (3215)

நல்ல நிலையில் உள்ள டபின் டோர்[இரண்டு கதவு] G. E C. குளிர் சாதனப் பெட்டி விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி ஈஸ்வரி ஜூவல்லர்ஸ் 177, கஸ்தூரியார் வீதி, [வின்சர் தியேட்டர்முன்பாக] யாழ்ப்பாணம். (3219)

உடுவில் மகளிர்பாடசாலை கிழக்குஒழுங்கையில் ''ஆர்க்'' எதிராக கூரைவரையில் கட்டப்பட்டு முடியாத வீடும் கிணறும் உள்ள 5, பரப்பு. காணி விற்பனைக்குண்டு. தொழிற்சாலை அமைப்பதற்கும் தகுதியானது தொடர்பு கொள்ளவும். C/o117உதயன். (12265)

Hyline சிவப்பு, கறுப்பு பேட்டுக்குஞ்சுகள் (பிலிமத்) கறுப்பு வரிச்சேவல் குஞ்சு, புறொயிலர் குஞ்சுகள் ஒவ்வொரு வாரமும் விநியோகிக்கப்படும். முன் கூட்டியே பதிவு செய்து பெற்றுக்கொள்ளவும். லக்கி பாம் கவுஸ், மதவடிலேன், திருநெல்வேலி. (12288)

இந்தியா, சிங்கப்பூரிலிருந்து தருவிக்கப்பட்ட மணமகளின் அலங்கார நகைகள், பரதநாட்டிய அரக்கு செற் விற்பனைக்குண்டு. தொடர்பு க.தர்மகுலசிங்கம் கணேசவாசா, வாரிவளவு, காரைநகர் C/O 213, சித்தி தங்கமாளிகை கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (3228)

இங்கிலன்ட் றலி துவிச்சக்கரவண்டி இங்கிலன்ட் கியருடன் கூடியது விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு ப.ஆனந்த மகேஸ்வரன் முதலாம் கட்டையடி, உடுவில் என்ற விலாசத்தில் மாலை நேரங்களில்தொடர்பு கொள்ளவும். (C/4434)

### காணி விற்பனைக்கு

மாவிட்டபுரத்தில் யாழ் K. K. S பிரதான வீதியருகே கிணற்றுடன் வீட்டுக்காணி 4 பரப்பு தொடர்பு DINESHET SARAM 27- C DE ROAD, MOUNT LAVINIA. (3229)

### மலிவு விற்பனை

இதோ அரிய சந்தர்ப்பம். ஸ்கேட், பிளவுஸ், லேடிஸ் கவுண், T-சேட், பேபி கவுண், பேபிசூட், மற்றும் றெடிமேட் உடைகளுக்கு விஜயம் செய்யுங்கள் (6 4 90 – 13. 4 90 வரை) Fasheion. Garments, 20,22, கடைச்சாமி வீதி,OFF நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (3230)

### வாங்கலாம்! விற்கலாம்

பழைய புத்தகங்கள் வாங்கப்படும். பழைய ஆனந்த விகடன், குமுதம், கல்கி, கலைமகள், சிவதொண்டன் முதலியன விற்பனைக்குண்டு. வெற்று சீமெந்து, கோழித்தீன் உறைகள், உரப்பைகள் வாங்கப்படும் Second Hand Book House, 13/6, ஸ்ரான்லி றோட், (முரசொலி இலங்கை வங்கிக்கு முன் பட்டப்படிப்புக் கல்லூரி லேன்) யாழ்ப்பாணம். (3225)

### 90 ஆம் ஆண்டுப் பஞ்சாங்கம்

இரகுநாதையர் வாக்கிய, திருக்கணிதபஞ்சாங்கம் வியாபாரிகட்கு தொகையாக விசேட கழிவுடன் விற்பனைக்குண்டு. ஸ்ரீ காந் புத்தக சாலை, மின்சார நிலைய வீதி, பஸ் நிலையம் முன்பாக, யாழ்ப்பாணம். (சி/3487)

### கோழிக்குஞ்சு விநியோகம்

Hyline வெள்ளை சிவப்பு, கறுப்பு, பேட்டுக் குஞ்சுகள் கறுப்பு [புலிமத்] சேவற் குஞ்சுகள், Golden Comet, பிறவுண் பேட்டுக் குஞ்சுகள், சேவற் குஞ்சுகள் HiSex பிறவுண் பேட்டுக் குஞ்சுகள், சேவற்குஞ்சுகள், முறையே ஒவ்வொரு செவ்வாய், புதன் வியாழக்கிழமைகளில் விநியோகிக்கப்படும். முன் கூட்டியே பதிவு செய்க. சற்குணராஜா அன் பிறதர்ஸ், பிரம்படி லேன், கொக்குவில். (3202)

### கோழிக்குஞ்சு விநியோகம் (UPLANDS FARM)

தனிச் சிகப்பு, கறுப்பு, நிற சேவல் (பிலிமத்)கறுப்பு புள்ளி சேவல் (LOHMAN) பிறவுண் சேவல், புறொயிலர்குஞ்சுகள், கறுப்பு, வெள்ளை பிறவுண் பேட்டுக் குஞ்சுகள் 11-4-90 புதன்கிழமை விநியோகிக்கப்படும். முன் கூட்டியே பதிவு செய்க. இல-9 கந்தையா லேன், சுன்னாகம் (புகையிரத நிலையத்திற்கு அருகில்) (3226)

### தேவை

யாழ் மாநகர சபைக்குள் வசிப்பவரும் ஆங்கிலத் தட்டெழுத்தில் அனுபவம்(ENGLISH TYPING) உள்ளவருமான பெண் காசாளர் தேவை. உடன் தமது சொந்தக் கையெழுத்தில் ஆங்கிலத்தில் விண்ணப்பிக்கவும். GLOBE, INDUSTRIES 173, NTHCRQSS STREET, JAFFNA. (12279)

### விற்பனையாளர் தேவை

O/L கணிதம் A/L கணக்கியல் பாடங்களில் சித்தியடைந்த மாநகரசபை எல்லைக்குள் வசிக்கும் பெண் பிள்ளைகள் தேவை. எதிர்பார்க்கும் சம்பளத்துடன் விண்ணப்பிக்கவும். No. 669, C/o உதயன். C/4226)

### மணமகள் தேவை

குருகுலத்தைச் சேர்ந்த 35 வயது பிரபல யாழ். வர்த்தகருக்கு படித்த அழகிய நற்குணமுடைய மணமகள் தேவை. சாதகக் குறிப்புடனும் முழு விபரங்களுடனும் தொடர்பு கொள்ளவும் சீதனம் தடையல்ல. இல.66: C/o உதயன். [3058]

யாழ்ப்பாணம்உயர் வேளாள சைவ குடும்பத்தைச் சேர்ந்த பெருந்தொகையான முதுசம் கொண்ட சனடாவில் கடந்த 8 வருடமாக ஒரே ஸ்தாபனத்தில் வேலை பார்க்கும். படித்த அழகான 31 வயதான ஒரே பிள்ளைக்கு ஓரளவு சீதனத்துடன் படித்த அழகான 25-26 வயதுக்குட்பட்ட பெண்தேவை. குறிப்பு புகைப்படத்துடன் தொடர்பு: வி. இல- 119 C/o உதயன் யாழ்ப்பாணம். (12283)

### மணமகன் தேவை

யாழ்ப்பாணம் இந்து உயர் வேளாளகுலப் பெற்றோர் தமது 32 வயது கேட்டை நட்சத்திரம் 8இல் செவ்வாய் தோசமுள்ள விஞ்ஞான ஆசிரியை மகளுக்கு மணமகன் தேடுகிறார்கள் அரசாங்க தனியார்துறை உத்தியோகத்தர் விரும்பத்தக்கது. சீதனம் கொடுக்கப்படும். சகல விவரங்களுடனும். தொடர்பு: கொள்ளவும். விளம்பர இலக்கம்:116மே /பா உதயன், யாழ்ப்பாணம். (12258)

யாழ் இந்து வேளாள குல 36 வயதுடைய B.A. Dip. in. Ed ஆசிரியைக்கு மணமகன் தேவை. பெறுமதியான வீடு வளவுடன் போதியளவு சீதனம் வழங்கப்படும். சாதகம் பதவி குடும்ப விபரம் ஆகியவற்றுடன் விண்ணப்பிக்கவும். இல 671 C/o உதயன். (3222)

### நாடக நூல்கள்

வானொலி நாடகம் எழுதிப் பழக வேண்டுமா? வாசியுங்கள்கெட்டிக்காரர்கள்ரூபா 25/- முதலாம் பிள்ளை ரூபா 30/- 150வானொலி நாடகங்கள் எழுதிய அராலியூர் சுந்தரம்பிள்ளையின் 19 நாடகங்கள் எங்கும். கிடைக்கும். (12281)

### தாதிப்பயிற்சி

தாதிப்பயிற்சி 1990 91க்கான விண்ணப்பங்கள் ஏற்கப்படுகின்றன. எமது அலுவலகத்தில் கிடைக்கும் மாதிரி விண்ணப்பப் படிவத்தில் மாத்திரம் விண்ணப்பிக்கவும். மகப்பெறுவும், பிணிதீர்மனையும் சங்கானை. (3231)

### கல்வி

o/L தொடக்கம் பல்கலைக்கழகம் வரையுள்ளவர்களுக்கான ஆங்கில வகுப்புகள் இளைப்பாறிய அரசாங்க உத்தியோகத்தரினால் நடத்தப்படுகின்றது. தனிப்பட்ட முறையிலும் கற்பிக்கப்படும். S. ஜெயராஜா கல்யாணி ஆங்கிலகல்வி நிலையம்.204, மானிப்பாய் றோட், ஒட்டுமடம், யாழ்ப்பாணம். (2873)

### புத்தக ஓடர்

மங்கை, அம்புலிமாமா, ஆனந்தவிகடன், கல்கண்டு, கோகுலம், இரத்தினபாலா, பாலமித்திரா, சுமங்கலி, யூனியர்விகடன், யூனியர் போஸ்ட், இதயம், குங்குமம், இந்தியா ருடே, (தமிழ்- ஆங்கிலம்)பொறின்லைன், ஸ்போட்ஸ்ரார், ஏனைய எல்லா இலங்கை இந்திய சஞ்சிகைகளும். மீண்டும். பதிவு செய்யப்படுகின்றன. V.P. யிலும் பெறலாம். ஸ்ரீகாந் புத்தக சாலை. இல 165, மின்சார நிலைய வீதி, பஸ் நிலையம் முன்புறம் யாழ்ப்பாணம். (சி/4227)

### Numerology Centre

நியுமரோலொஜி கலையின் அதிஷ்ட இரகசியங்களை அறிந்து கொண்டு நீங்களும் அதிஷ்டசாலிகள் ஆகலாம். உங்கள் சகல பிரச்சினைகளும் நீக்கி வைக்கப்படும். உங்கள் பிரச்சினைகள் என்ன? விபரத்திற்கு சுயவிலாசமிட்ட முத்திரை ஒட்டிய கடித உறையுடன் விண்ணப்பிக்கவும். Numerology Master, C. K. Srirajarajeaswaran, Vaitheeswara Veethi, Valvettiturai. [2887)

### Marriage Centre

Master Numerology Marriage Centre திருமணம் ஆகாத ஆண், பெண் இருபாலாரும் சுயவிலாசமிட்ட முத்திரை ஒட்டிய கடித உறையுடன் விண்ணப்பிக்கவும். நியூமரோலஜி சோதிட முறையில் பொருத்தம் பார்த்து அதிஷ்டகரமான திருமணம் செய்து வைக்கப்படும். Numerology Master, C. K. Srirajarajeaswaran Vaitheeswaran. Veethi, Valvettiturai [2888]

### தவறிவிட்டது

து. யோகராஜா 32/2, 3 ஆம்குறுக்குத்தெரு, கொழும்புத்துறை, என்ற விலாசமிடப்பட்ட அடையாள அட்டை 10 2 1990இல் யாழ்ப்பாணத்திற்கும் நவாலிக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து உதயன் காரியாலயத்தில ஒப்படைக்குமாறு கேட்டுக் கொள்கிறேன். (12285)

### வாடகைக்கு

இந்தியா, சிங்கப்பூரிலிருந்து தருவிக்கப்பட்ட மணமகளின் அதி நவீன அலங்கார நகைகளையும் பரதநாட்டிய அரங்கேற்ற அரக்கு செற் நகைகளையும் வாடகைக்கு பெற்றுக் கொள்ள நாடுங்கள் கனகசபை தர்மகுலசிங்கம், கணேசவாசா, வாரிவளவு, காரைநகர். C/o 213 சித்தி தங்கமாளிகை, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்,(3227)

### Typewriters

Typewriters வாங்கவும், விற்கவும், சிறந்த முறையில் திருத்திக்கொள்ளவும், நாடுங்கள் FUDO, 39/17 மின்சார நிலைய வீதி, 3ஆம் ஒழுங்கை யாழ்ப்பாணம். (Shabra-Samy & Co அருகாமையில்) (சி/4209)


# T.V TRAVELS & TOURS

## SAUDI ARABIA

| | | |
|---|---|---|
| 1. | Drivers | 600 S.R. |
| 2. | Cleaners | 400 S. R. |
| 3. | Cleaners [ஆங்கிலம் பேசத் தெரிந்தவர்கள் மட்டும்] | 500 S. R. |
| 4. | Mason | 550 S. R. |
| 5. | Carpenter | 550 S. R. |
| 6. | Welder | 550 S. R. |
| 7. | Painter | 550 S R. |
| 8. | Electrician | 600 S. R. |
| 9. | Plumber | 600 S. R |
| 10. | Civil Engineer | 1200 S. R. |
| 11. | Electrical Engineer | 1800 S. R. |

மேற்காணும் வெற்றிடங்களுக்கு உடன் ஆட்கள் தேவைப்படுவதாலும் நேர்முகப் பரீட்சை இம்மாத முடிவில் நடைபெறவிருப்பதாலும் எமது காரியாலயத்துடன் அனுபவச் சான்றிதழுடன் நேரில் தொடர்பு கொள்ளவும்.

வயது 21- 49 வரை

(FRONT OF RAILWAY STATION)

Brown Road,
Kokuvil.

[சி/4253)

# ★ பிள்ளையார் ★




முற்றிலும் குளிரூட்டப்பட்ட
★ வர்ண தொலைக்காட்சிப் பெட்டி [T.V] ★
பொருத்தப்பட்ட பஸ்

## யாழ்ப்பாணம் - கொழும்பு - யாழ்ப்பாணம்

தினசரி இரவு 7 மணி

கட்டணம் - ரூபா 150

ஆசனங்களை முன் கூட்டியே பதிவு செய்யும் இடம்:

**பிள்ளையார் ஸ்ரோஸ்,**
31, மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம்.
T. Phone:-

வெள்ளவத்தை
தபாற்கந்தோர் அருகாமை
இல. 4 லில்லி அவெனியூ,
கொழும்பு.
T. Phone: 585 188

(C/4246)

## பிரத்தியேக வகுப்புக்கள்
## G. C. E. A/L 1990

இரசாயனவியல்
பௌதிக இரசாயனம்

ஆரம்பம் 07-04-1990 3.00 - 4.00
ஆசிரியர் D, சிவசோதி

57/48ஸ்ரான்லி வீதி,
(இலங்கை வங்கி முன்பாக)
யாழ்ப்பாணம்.

(சி/4249)


## யாழ்ப்பாணம் - கச்சேரி

(புனர்வாழ்வு, புனரமைப்புப் பிரிவு)
சேதமாக்கப்பட்ட கட்டிடங்கள் விற்பனைக்கான

## கேள்வி அறிவித்தல்.

யாழ்ப்பாணம் காங்கேசன்துறை வீதியில் அமைந்துள்ள சேதமுற்ற யாழ்ப்பாணம் பிரதம அஞ்சல் அலுவலக இருமாடிக் கட்டிடம் (நிலம் தவிர்ந்த கட்டிடம் சம்பந்தமான சகல பொருட்களும்) விற்பதற்கான கேள்விப்பத்திரப் படிவங்கள் யாழ்ப்பாணம் அரசாங்க அதிபரால் 1990 ஆம் ஆண்டு சித்திரை மாதம் 24 ஆம் திகதி நண்பகல் 12.00 மணிவரை வழங்கப்படும்.

இக்கட்டிடத்தைப் பார்வையிட விரும்புகிறவர்கள் யாழ்ப்பாணம் புனர்வாழ்வு புனரமைப்புப் பகுதித் திட்டப்பணிப்பாளர் (தொழிநுட்பம்) அவர்களுடன் தொடர்பு கொள்ளவும்.

அன்ரன் அல்பிரட்,
யாழ்ப்பாணம் - அரசாங்க அதிபர்.

செயலகம், யாழ்ப்பாணம்.
1990-04-04 (C/4252)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



செல்வி.
**நவமணிதேவி [விஜிதா] சிவஞானம்**

பிறப்பு: 03 - 02 - 1963 இறப்பு: 08 - 09 - 1990

எமது உயிருக்குயிரான விஜியே!
என்றுமே எம்மால் உம் பிரிவைத் தாங்கமுடியாதம்மா-

★அன்னாரின் வீட்டுக்கிருத்தியம் 7-4-90 சனிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும். உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் கலந்து கொண்டு அன்னாரின் ஆத்ம சாந்திக்கு பிரார்த்திக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

உம் நினைவால் துயருறும்:
தந்தை தாய், அன்புச்சகோதரர்கள்,
அன்புச்சகோதரி, உற்றார், உறவினர்கள்.

விதானையார் லேன்,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில். (12290)

## 5 ஆம் வருட நினைவு அஞ்சலி



என்றும் வாடாத எங்கள் இதயமலர்
**திருமதி மேரி பற்றிமா புவிராசசிங்கம்**
(முல்லைத்தீவு பிரபாகர் பார்மஸி முன்னாள் உரிமையாளர்.)

தோற்றம்: 22 - 10 - 1951 மறைவு: 07 - 04 - 1985

இன்று உறவு நாளை பிரிவு
மனிதன் வாழும் நாட்டிலே
என்றும் அழியா உறவு உண்டு
இறைவன் வாழும் வீட்டிலே

இவரது ஆன்ம இளைப்பாற்றிக்காக 07 - 04 - 90 சனிக்கிழமை காலை 6 - 15 மணிக்கு முல்லைத்தீவு புனித மரியாள் ஆலயத்திலும், 07 - 04 - 90 சனிக்கிழமை மாலை 5 - 15 மணிக்கு சில்லாலை புனித யாகப்பர் ஆலயத்திலும் ஒப்புக்கொடுக்கப்படும் இரங்கற் திருப்பலிகளிற் பங்குபற்றி அன்னாரின் ஆன்ம சாந்திக்காகப் பிரார்த்திக்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.

இவரின் பிரிவால் துயருறும்
கணவர்: J. சென் ஜோண் புவிராசசிங்கம்
பிள்ளைகள்: சுதாகர், பிரபாகர், நிருபாகர்
சகோதரி: றஞ்சினி

( 3139 )

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருக்கோணமலை ஸ்ரீ பத்திரகாளி அம்மன் தேர்த்திருவிழா சிறப்பிதழ்

# அற்புதங்கள் புரிந்துவரும் ஆதிபராசக்தி!

"திருக்கோணமலைக்குப்போ அங்கே கடற்கரை ஓரத்தில் ஒரு தொங்கு செவ்வரத்தை மரம் நிற்கிறது. அதன் வேர் அடியில் உள்ள மண்ணைத் தோண்டு. கிடாரம் ஒன்றைக் காண்பாய். அக்கிடாரத்திற்குள் ஒரு காளி விக்கிரகம்-மணி-தீபங்களுண்டு. அவற்றை பிரதிஷ்டை செய்து தினம்தினம் பூஜைகளைச் செய்.

இப்படி ஒரு கனவு.

இக்கனவைக் கண்டவர் 'மதுரை ஐயர்' என அழைக்கப்பட்டவர். இவர் மதுரையிலிருந்து துறவியாக வேண்டுமெனக் காசிக்குச் சென்றார். செல்கின்ற வழியிலே 'இல்லறமன்றித் துறவறமில்லை' எனும் நினைப்பு அவர் உள்ளத்தில் எழுந்தது. இதன் காரணமாக அவர் இராமேஸ்வரம் சென்று இல்லறவாழ்வில் ஈடுபட்டுக்கொண்டிருக்கும் போது இக்கனவைக் கண்டார்.

இந்தக் கனவின் விளைவுதான் திருகோணமலை பத்திரகாளி அம்மன் கோயிலின் தோற்றம்.

**பேசும் சக்தி மீண்டது**

கணவனுக்கு கடும் சுகவீனம். பல மாதங்கள் நோய் வாய்ப்பட்டிருந்தார். ஈற்றில் பேசும் சக்தியே இழந்து இருந்தார். இதனால் மனமுடைந்து புலம்பினார் மட்டக்களப்பு ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியின் ஓய்வுபெற்ற விரிவுரையாளரான அப்பெண்மணி.

மருத்துவர்கள் கைவிட்ட நிலையில் மாற்றுவழி தெரியாது அழுதழுது புலம்பினார். அப்போது அவரைச் சந்தித்த காளியாச்சியின் அடியார்கள் இக்கோயிலின் அற்புதங்களை எடுத்துச் சொன்னார்கள்.

'காளியம்மையின் சந்நிதியில் கேதாரகௌரிவிரதத்தை பக்தி சிரத்தையுடன் அனுஷ்டியுங்கள். உங்கள் கணவர் மீண்டும் பேசும் சக்தியை பெறுவார். இது உறுதி'— இப்படி அழுத்திச் சொன்னார்கள்.

அந்தப் பெண் விரிவுரையாளருக்கு காளி ஆச்சியின் மீது நம்பிக்கை பிறந்தது. அவரது சந்நிதிக்கு வந்து கேதாரகௌரி நோன்பு நோற்றார். அம்பாளை இரந்து வேண்டினார்.

காளி ஆச்சி கருணையின் வடிவம் — தாயன்பு நிறைந்தவள்.

'நானோ எனது கணவரோ பாதகமேதும் செய்வதில்லை. எமக்கேன் இப்படி ஓர் அவலத்தைத் தந்தாய்? மீண்டும் என் கணவர் பேசமாட்டாரா? அவரின் குரலை மீண்டும் கேட்க அருள் புரிவாய்' —என்று பசித்திருந்து, விழித்திருந்து, தனித்திருந்து மனதால், மெய்யால், வாக்கால் காளியாச்சியை இரந்து இரந்து வேண்டினார்.

என்னே அதிசயம்!

ஒரு முறை காளி கோயிலில் கேதாரகௌரி நோன்பு பூசையில் ஈடுபட்டு காப்பையும் பிரசாதத்தையும் கொண்டு வீடு செல்கின்றார். கணவன் அவரை எதிர்நோக்குகிறார்.

'பூசை முடிந்து விட்டதா?' என்று கேட்கிறார் கணவன். குரல்கேட்டு துள்ளிக் குதித்தார் மனைவி. காளியாச்சியின் கருணையை நினைந்து நினைந்து கண்ணீர் உகுத்தினார். இத்தகவலை திருகோணமலையை பிறப்பிடமாகக் கொண்ட பிரபல சிறுகதை எழுத்தாளர் திருமதி பாலேஸ்வரி நல்லரட்ணசிங்கம் சொல்லக்கேட்டு எமது நம்பிக்கை வலுவடைகிறது.

**கோயிலின் தொன்மை**

இக்கோயில் கி. பி. 11ம் நூற்றாண்டின் தொன்மை



வாய்ந்தது என்பது வரலாற்று அறிஞர்களின் நம்பிக்கை. இன்றும் கோயிலில் உள்ள செப்புக்கிடாரத்தை, அதன் வடிவத்தை, அதன் உலோக வார்ப்பு முறையை ஆராய்ந்த அறிஞர்கள் இதன் தொன்மையை குறிப்பிடத் தவறவில்லை.

அம்மன் விக்கிரகத்தை ஆராய்ந்தவர்கள் அது 11 ஆம், 12 ஆம் நூற்றாண்டு காலத்தில் தமிழ் நாட்டுக் கோயில்களில்வழிபடப்பெற்ற அம்மன் விக்கிரகங்களை ஒத்ததாகக் கருதுகிறார்கள். இவற்றில் இருந்து கோயிலின் தொன்மை நமக்குப் புலனாகிறது.

இக்கோயிலிலேயுள்ள அழகிய சிங்கவாகனம் பழமை வாய்ந்தது. அம்பாளுக்குரிய அந்த வாகனம் இக்கோயிலுக்கு கிடைத்தமை ஓர் அற்புதமாகும். தென்னிந்தியாவில் இருந்து கடல்மார்க்கமாக வந்த கப்பல் திருகோணமலை துறைமுகத்தில் நங்கூரமிட்டிருந்தது. அலுவல் முடிந்து கப்பல் புறப்பட்ட போது கப்பல் இயங்கி நகர மறுத்தது. அந்த வேளையிலே இக்கப்பலிலே சிங்கவாகனம் இருந்தது. கப்பலில் சென்றவர்கள் இந்த வாகனத்தை அம்பாளுக்கு உவந்து அளித்து வழிபாடு செய்த பின்னர் இக்கப்பல் இயங்கிச் சென்றது. இந்த சிங்கவாகனம் உற்சவகாலங்களில் அம்பாள் அமர கம்பீரமாக உலா வருவதை இன்றும் காணலாம்.

**கல்வெட்டுச் சான்றுகள்**

கோயிலிலே 'உல்' என்று அழைக்கப்படுகின்றதேங்காய் உடைக்கப்பயன்படும் கல்லிலே ஒரு கல்வெட்டு காணப்படுகின்றது. அதில் பின்வருமாறு காணப்படுகின்றது.

உ. காளி அம்மனுக்கு
அயி செம்புலிங்கம்
செய்து கொடுத்தது
1878 தை ஆசாரி.

இக்கோயிலிலே காணப்பட்ட கற்றூண் ஒன்றில் ஒரு கல்வெட்டு காணப்படுகின்றது. 15 அடி உயர 10 அங்குல அகலமான இக்கற்றூணில் மூன்று பக்கங்களில் கல்வெட்டு காணப்படுகிறது.

இக்கல்வெட்டு முதலாம் இராஜராஜ சோழனின் மகனாகிய இராஜேந்திரனின் காலத்தைச் சேர்ந்தது என்பது வரலாற்றுஆசிரியர்களின் துணிபாகும். இது கி. பி. 1012—1044 காலத்தைச் சார்ந்தது எனலாம்.

எழுத்துப் பொறிக்கப்பட்ட இத்தூண் இக்கோயிலின் மிகத்தொன்மைக் காலத்தில் நிகழ்ந்த அழிபாடுகளில் ஒன்றாக இருக்கலாம்.

அல்லது—

இக்கோயிலின் நிர்மாண வேலைகள் நடைபெற்ற போது பிறிதோர் இடத்தில் இருந்து இங்கு எடுத்துவரப்பட்டு கோயிலின் அமைப்

## அபிராமி வரதன்

பிற்கு இத்தூண் நிறுத்தப்பட்டிருக்கலாம் என இரு வேறுவகைப்பட்ட விளக்கங்கள் முன்வகைப்படுகின்றன.

எது எப்படி இருப்பினும் கல்வெட்டு காணப்படும் மிகத்தொன்மை வாய்ந்த இத்தூண் இக்கோயிலின் பழமையை இன்றும் பறைசாற்றிக் கொண்டிருக்கின்றது



என்பதை யாரும் மறுக்க முடியாது.

**நாக சாபம்**

இக்கோயிலின் திருப்பூசையை நடாத்தி வந்த பரம்பரையில் வந்த ஒரு பெண், ஒரு பெண்பிள்ளையும், ஒரு நாகத்தையும் பெற்றெடுத்தாள். அவள் பிள்ளையும் நாகத்தையும் மிக அருமையாகப் பேணி வளர்த்து வந்தாள். ஒருநாள் வீட்டில் ஒரு விருந்து நடந்து கொண்டிருந்தது. யாரோ ஒருவர் கிடாரமொன்றை தவறுதலாக பாம்பின் மேல் வைக்க, அது இறந்து விட்டது. இறக்கும்தறுவாயில் அந்தப் பாம்பு 'உனக்கு ஆறு சந்ததிகளுக்கு ஆண்குழந்தைகள் பிறக்கமாட்டார்கள்' - எனச் சாபமிட்டது.

இதனைத் தொடர்ந்து இக்கோயிலைச் சார்ந்தவர்களின் ஆறு சந்ததியினருக்கு புத்திரர்கள் பிறக்கவில்லை.

ஏழாவது சந்ததியிலே ஒரு புத்திரன் பிறந்தான். இப்படி ஆலயப் பணிகளில் ஈடுபடும் பல முதியவர்கள் இன்றும் நமக்குக் கூறுவதுண்டு.

**மறக்கருணை**

நீண்ட காலத்திற்கு முன்னர் கோயிற் பூசகர் ஒரு நாளிரவு தனது ஆண்மகனைக் காணாது தேடிப்பார்த்தார். எங்கும் மகன் கிடைக்கவில்லை. மனம் வருந்தினார். காளியிடம் தனது கவலையைத் தெரிவிக்க கோவிலுக்குள்ளே சென்றார். அங்கே மூலஸ்தானத்தில் பேச்சொலி கேட்டது. தனது மகனார் யாருடனோ கலந்துரையாடுவது தெளிவாகக் கேட்டது. குழந்தையைக்காண மூலஸ்தானத்தை திறக்க விரும்பினார்.

ஆனால் கோயில் விதி நினைவுக்கு வந்தது இரவு வேளை பூசை முடிந்தால் அடுத்தநாள் பூசையின் போது தான் கோயில் திறக்கப்பட வேண்டும் என்பதே அந்த விதி.

ஒருபுறம் விதி மறுபுறம் புத்திர பாசம். இது இரண்டிற்குமிடையே அவருடைய மனம் தடுமாறியது வைரவர் கோவிலிருந்த திறவுகோலை எடுத்தார், அப்போது இரச பல்லி குரல் கொடுத்தது. பல்லி சொன்னதைக் கேட்டதும் கதவைத் திறப்பதா? விடுவதா? எனத் தயங்கினார். ஆனாலும் புத்திர பாசம் விஞ்சி நின்றது. திறவுகோலோடு வயிற்கதவை நோக்கி நடந்தார்.

'கதவைத் திறவாதே! திறவுகோலைத் திரும்பவும் கீழே வை! உனது மகன் எம்முடன் நலமேயுள்ளான், நாளை காலைவேளை அவனை நீ அழைத்துச் செல்லலாம்.' - இப்படி ஓர் அசரீரி கேட்டது.

இருந்தும் பூசகருக்கு புத்திர பாசமே தலை தூக்கியது. இதனால் விரைந்து சென்று கதவினைத் திறந்தார், கதவு திறந்ததும், 'ஒரு பாதி உனக்கு! மறுபாதி நமக்கு'-

(4 ஆம் பக்கம் பார்க்க)

## இன்று சித்திரத்தேர்

திருக்கோணமலை அருள்மிகு ஸ்ரீ பத்திர காளி அம்பாள் ஆலய இரதோற்சவம் இன்று காலை 8 மணிக்கு சிறப்பாக நடைபெறுகிறது. அதையொட்டி இச்சிறப்பு மலர் வெளியிடப்படுகிறது.

சிற்பசாஸ்திர விதிகளுக்கு அமைய அமைக்கப் பெற்ற அழகிய சித்திரத் தேர்களில் விநாயகரும், முருகனும் முன்னேவர அம்பாள் இன்று காலை 8 மணிக்கு அழகிய சித்திரத் தேரில் பவனி வந்து அடியார்களுக்கு அருள் பாலிக்க எழுந்தருளி வீதியுலா வருவார்.

நாளை உதயத்தில் சமுத்திர தீர்த்தம் நடைபெறும். சுவாமி அதிகாலை 5 மணிக்கு தீர்த்தோற்சவத்திற்காக கோவிலிலிருந்து புறப்படும்.

நாளை மறுதினம் இரவு பூங்காவனத் திருவிழா நடைபெறும்.


# நீங்களும் பஜாஜ் ஒன்றை வாங்கலாம்.







விரும்பிய நேரத்தில் விரும்பிய இடத்திற்கு இலகுவாகப் பயணம் செய்ய நவீன காலத்திற்கு உகந்த வாகனம்......பஜாஜ். நீங்களும் இந்த அற்புதமான பஜாஜ் வாகனம் ஒன்றைச் சொந்தமாக வாங்கி மாதாமாதம் நல்ல இலாபம் சம்பாதிக்க இதுவே சிறந்த வாய்ப்பு.

றிச்சர்ட் பீரிஸ் நிறுவனமும் வங்கிச் சேவையும் இணைந்து வகுத்திருக்கும் சுயதொழில் வாய்ப்பு ஆதாரத் திட்டத்தின் கீழ் பஜாஜ் வாகனம் ஒன்றை வாங்குங்கள். சாரதி அனுமதிப் பத்திரம் கொண்டுள்ள 21 வயதிற்கு மேற்பட்ட அனைவருக்கும் பஜாஜ் வாகனத்தின் விலையில் 60 சதவீதம் கடனாக வழங்கப்படும்.

எனவே, குறைந்தபட்சம் உங்களுக்கு ரூ 35,000 செலவிட முடியுமானால் புத்தம் புதிய பஜாஜ் வாகனம் ஒன்றை உரிமையாக்கிக் கொள்ள முடியும். கடனைத் திருப்பிச் செலுத்துவதற்கு 4 வருடகால அவகாசம் வழங்கப்படும்

பஜாஜ் வாகனம் உங்கள் தொழிலுக்கு மட்டுமல்ல உங்கள் குடும்பத்தினரின் தனிப்பட்ட பயணங்களுக்கும் உகந்தது. சந்தை... பாடசாலை... கோவில்... உறவினர் இல்லம் ...இப்படி எங்கு வேண்டுமானாலும் பஜாஜில் உல்லாசமாகச் சவாரி செய்யலாம்.

இந்த அரிய வாய்ப்பைப் பயன்படுத்தி பஜாஜ் ஒன்றை வாங்குங்கள். நிச்சயமாக நீங்கள் நன்மையடைவீர்கள்.

**றிச்சர்ட் பீரிஸ் மோட்டோர் கம்பனி லிமிட்டெட்**
60, ஹைட்பார்க் கோர்னர்
கொழும்பு 2
தொலைபேசி: 25701/2, 422149, 549480

**பஜாஜ் பயணம் கோடி பெறும்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இன்று கதாப்பிரசங்கம்

யாழ்ப்பாணம், ஏப். 7 சங்கரத்தை பிட்டியம்பதி பத்திரகாளி அம்பாள் ஆலயத்தின் 9 ஆவது திருவிழாவில் இன்று சனிக்கிழமை இரவு "தாயும் சேயும்" என்ற தலைப்பில் வட்டு. கலா நிலைய முதல்வரும் முன்னாள் அதிபருமான திரு. க. கைலாயநாதன் கதாப்பிரசங்கம் நிகழ்த்துவார். (க)


## தாதிப் பயிற்சி நெறி

பிரபல்ய விரிவுரையாளர் குழுவினால் நடத்தப்படும் பயிற்சி நெறி

**ஆரம்பம்: 10 th April 1990**

- உள்நாட்டு வெளிநாட்டு வேலை வாய்ப்பு
- பிரபல்ய தனியார் வைத்தியசாலையில் செய்முறைப் பயிற்சி
- சிறந்த ஆங்கில வகுப்புகள்
- பாமலி பயிற்சியுடன் முதலுதவி பயிற்சியுடன் கூடியது.

விபரங்கட்கு:

**North Ceylon Technical Institu.e**

14, St Peters Lane,
Hospital Road,
Jaffoa.

[சி/4432]


# குடியேற்றப் பிரச்சினை தீரும்வரை இனப்பிரச்சினைக்குத்தீர்வு இல்லை!

## திருமலை அரசியற் பொறுப்பாளர் ரூபன் கூறுகிறார்

கொழும்பு ஏப் 7

திருகோணமலை மாவட்டத்தில் சிங்களக் குடியேற்றப் பிரச்சனைக்குத் தீர்வு காணும்வரை அங்கு இனப் பிரச்சனைக்குத் தீர்வு காண முடியாது.

- இவ்வாறு கூறினார் விடுதலைப் புலிகளின் திருகோணமலை மாவட்ட அரசியல் பிரிவுத் தலைவர் திரு. ரூபன்.

கொழும்பு ஆங்கிலப் பத்திரிகை ஒன்றுக்கு அளித்த பேட்டியிலேயே அவர் இப்படித் தெரிவித்திருக்கிறார். அவர் மேலும் கூறியிருப்பதாவது:-

அரசினாலும் அரசின் உதவியுடனும் நடத்தப்படும் குடியேற்றத் திட்டங்களே திருகோணமலை மாவட்டத்தில் பிரச்சினையாக என்றும் இருந்து வருகிறது. சரியான தீர்வு ஒன்று இதற்குக் காணப்படவேண்டும். அதுவரை இப் பிரச்சினை தொடரும்.

கேள்வி: திருகோணமலை மாவட்டத்தில் உள்ள வீதாசாரத்துக்கு ஏற்ப திருகோணமலையில் இவ்வளவு சிங்களவர் தான் வசிக்கமுடியும் என்று வரையறுக்கப் போகிறீர்களா?

பதில்: இது ஒரு சிக்கலான விஷயம், இதற்கு விரிவான பதில் அளிக்கப்படவேண்டும்.

1827 இல் திருகோணமலை மாவட்டத்தில் 250 சிங்களவரே வாழ்ந்தனர். அப்போது 19 ஆயிரத்துக்கும் அதிகமான தமிழர் வாழ்ந்து வந்தனர். இன்று சிங்களவர் 35 சதவீதமும் தமிழர் 32 சதவீதமும் வாழ்கின்றனர். இப்பாரிய மாற்றம் ஏற்படுவதற்கான காரணம் எது? இதற்கு யார் பொறுப்பு?

காலத்துக்குக் காலம் அரசு இயந்திரம் திருகோணமலையைசிங்களமாவட்டமாக்க முனைந்து வந்திருக்கின்றது. இதனை திருமலை மாவட்டத்தின் 50 சத வீதத்துக்கு அதிகமான பிரதேசத்தில் சேருவில தொகுதியை உருவாக்கியதில் இருந்து நாம் உணர முடியும்.

கேள்வி: திருமலையில் அரசு உதவியுடன் நடத்தப்பட்ட குடியேற்றத்திட்டங்கள் தான் மாவட்டத்தின் இ.ன மோதல்டாந்தர நிலைக்கு குறைக்கும் களுக்குக் காரணம் என்று கருதுகிறீர்களா?

பதில்: ஆம். வடக்கு-கிழக்கு மாகாணத்தின் முக்கிய இணைப்பாக திருகோணமலை இருக்கிறது.

வடமாகாணத்துடன் திருகோணமலை மாவட்டத்தை இணைக்கும் எல்லைப் புறப் பகுதிகளில் அரச ஏற்பாட்டில் குடியேற்றத் திட்டங்கள் அமைக்கப்பட்டு உள்ளன.

இதன் மூலம் இரண்டு நோக்கங்களை அடையலாம் என்று அரசு நம்புகிறது

ஒன்று, வடக்கு - கிழக்கு இணைப்பைத் துண்டிப்பது.



இரண்டாவது, திருமலை மாவட்டத்தில் உள்ள தமிழரின் எண்ணிக்கைப் பலத்தைக் குறைப்பது.

திருகோணமலைக் கரையோரப் பகுதி மீன் வளம் கொண்டது. இதனைப் பயன்படுத்தி வேறு பகுதிகளில் இருந்து ஆட்களைக் கொண்டு வந்து திருமலைக்கரையோரப் பகுதிகளில் அரசு குடியேற்றியது.

இதன் மூலம் பாரம்பரிய தமிழ்ப் பெயர்களை மாற்றி சிங்களப் பெயர்களை அப் பகுதிகளுக்கு சூட்டும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வந்தது. அதன் மூலம் சரித்திரத்தை அழிக்க முயற்சிக்கப் படுகிறது.

வெவ்வேறு அரசாங்கங்கள் இந்த மோசடி நடவடிக்கைகள் மூலம் தமிழரை, தமிழரின் தாயகத்திலேயே இரண் நோக்கத்துடன் செயற்பட்டன.

ஆகவே தான் நாம் இது விஷயத்தில் மிகவும் கவனமாக இருந்து வருகிறோம். 1958 இல் இருந்து தொடர்ந்து வந்த இன வன்செயல்கள் குடியேற்றத் திட்டங்களினால் ஏற்பட்டவை என்பதை எமக்கு உணர வைக்கின்றன.

கேள்வி: 1987 ஆம் ஆண்டு வரை குடியேறி, தற்போது இடம் பெயர்ந்துள்ள சிங்கள அகதிகள் மட்டுமே திருமலை மாவட்டத்தில் மீளக் குடியமர அனுமதிக்கப்படுவர் என்று கூறுவது சரியா?

பதில்: இடம் பெயர்ந்த அனைவரையும் மீளக் குடியமர்த்த முடியும் என்று கூற முடியாது. இவர்களுள் தொழில் விஷயமாக வந்து தற்காலிகமாக வசித்து வந்தவர்கள் அடங்கியுள்ளனர்.

''சுயநிர்ணய உரிமை தரப்பட்டுள்ளது. அதனை அனுபவிக்கும் நிலமை ஏற்பட்டுள்ளது'' - என்று எப்போது சிறுபான்மையினர் உணருகிறார்களோ அன்று தான் ஒவ்வொருவரும் நீண்ட கால நன்மைகளைப் பெறமுடியும். - என்றார்.

## அற்புதங்கள் புரிந்து...

[3 ஆம் பக்கத் தொடர்ச்சி]

என்று குரல் கேட்டது.

குழந்தை இரண்டு துண்டங்களாகக் கிடந்தது. இச் சம்பவத்தை எமக்கு சிறுவயதில் விளக்கி, இதனை அம்பாளின் 'மறக்கருணை' என்று விளக்கம் தருவார் அம்பாள் உபாசகி திருமதி சிவகாமி அம்மா.

### அகந்தை போக்கும் மருந்து

அழகிய பெண்ணொருத்தி அகந்தை தலைக்கேற, ஆசாரம் பேணாமல் தலைவிரி கோலமாக இக் கோயிலைத் தாண்டிச் சென்றாள். 'திங்கு வரும் கூந்தலை சீவி முடி' என்று பலர் அறிவுரை கூறினார்கள் ஆனால் அந்த அறிவுரைகள் செவிடன் காதில் ஊதிய சங்காயிற்று. அவ்வாறு அவள் கோவிலைத் தாண்டிச் செல்ல, அவளுடைய கழுத்து ஒருபுறம் திரும்பிவிட்டது. இதனால் அப்பெண்மணி மிகவும் வருந்தினாள் உடல் வேதனையடைந்தாள்.

பின்னர் அவள் தனது இறுமாப்புக்கு மனம் நொந்து உள்ளம் கவலை அடைந்து தன் தவறை உணர்ந்து மனம் வருந்தினாள், காளியை இரந்து வேண்டினாள். தனது கூந்தலையே காளியம்மனுக்கு காணிக்கையாக வழங்கினாள். அதைத் தொடர்ந்து அவளுடைய கழுத்து செம்மையுற்றது. அவள் சுகமடைந்தாள்.

### அம்பாள் திருவுருவம்

கையிலே காப்பு அணிந்திருப்பாள். திருக்கரங்களிலே வேப்பங்குழைக் கொத்தும் வெள்ளிப் பிரம்பும் துலங்கும். காலிலே சிலம்பு கலகல என ஒலிக்கும். அவளை நாம் கூப்பிட்டழைத்தால் குறைகள் தீர்ப்பாள். இப்படி அவள் திருவுருவை எம் அகக்கண் முன்னே அழகாக நிறுத்துகிறார் கழகப்புலவர் பெ.பொ. சிவசேகரனார் அப் பாடல் இதோ:-

'வேப்பங் குழைக்கொத்தும் வெள்ளிப்பிரம்பும் விளங்குகையில்.
காப்புமணிந்து கடைக்காற் சிலம்பு கலகலவென
மூப்பும்பிணியு முடையார் பணிந்து முறையிடுவார்
கூப்பிட்டழைக்கக் குறை தீர்ப்பாள் காளி குலதெய்வமே.

## வர்த்தகர் சங்க கூட்டம்

யாழ். வலிகாமம் நிர்வாகப் பிரிவுக்கு உட்பட்ட சகல தொழில் நிறுவனங்களுக்குமான கூட்டமொன்று இன்று சனிக்கிழமை பி.ப. 3 மணியளவில் யாழ். மத்திய கல்லூரியில் நடைபெறும். தமிழீழ விடுதலைப் புலிகள் இக்கூட்டத்தை ஏற்பாடு செய்துள்ளனர்.

வர்த்தகர்களையும், தொழிலதிபர்களையும் இக்கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு விடுதலைப் புலிகள் அழைப்பு விடுத்துள்ளனர். (இ)

## பாடசாலை விளையாட்டு போட்டிகள்

மட்டக்களப்பு. ஏப். 8

செட்டிபாளையம் கொத்தணிப் பாடசாலைகளுக்கிடையிலான வருடாந்த விளையாட்டுப்போட்டி அண்மையில் களுதாவளை மகாவித்தியாலயத்தில் நடைபெற்றது. களுதாவளை. ம. வி முதலாம் இடத்தையும் செட்டிபாளையம். ம. வி இரண்டாம் இடத்தை யும்குருக்கள் மடம். ம. வி மூன்றாம் இடத்தையும் பெற்றுக் கொண்டன. (க)

## இணக்கசபை நியமனங்கள்

தமிழீழ விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியினர் முல்லைத்தீவு செல்வபுரம் இணக்க சபைக்குத் தலைவராக திரு. அ. சி. மொறைஸ், செயலாளராக திரு. எம். ஏ எம். போருட் பொருளாளராக திரு. செ. திருச்செல்வம் ஆகியோரையும் ஒரு பெண் உட்பட மேலும் 8 உறுப்பினர்களையும் நியமித்துள்ளனர்.

இணக்க சபையில் விசாரணைகள் ஞாயிற்றுக்கிழமைகளில் காலை 10 மணி முதல் மாலை 6மணி வரை நடைபெறும் என சபையின் செயலாளர் உதயனுக்குத் தெரிவித்துள்ளார். (க)


## Make up and Hair Dressing Classes

வகுப்புக்கள் அடுத்த கிழமை ஆரம்பமாக இருக்கிறது. விரும்பியவர்கள் தொடர்பு கொள்ளவும்.

**YOGI BEAUTY PARLOUR**

71 B, NAYANMAR ROAD,
(Off Kachcheri Nallur Road)
NALLUR,
JAFFNA.

(12286)


## நினைவஞ்சலியும் சபிண்டீகரண அழைப்பும்



திருவாட்டி
**பொன்னையா மீனாட்சிப்பிள்ளை**

மண்ணில்: 8 - 8 - 1903
விண்ணில்: 9 - 3 - 1990

எம் குடும்ப ஒளிவிளக்காய், தாயாய், தந்தையாய், எம் உயர்வுக்குழைத்த அருமைத் தெய்வமே, தங்கள் ஆத்ம சாந்திக்கு அனுதினமும் பிரார்த்திக்கின்றோம். பங்குனி மாதம், 26 ஆம் திகதி 8-4-1990 - ஞாயிற்றுக்கிழமை அதிகாலையிலிருந்து எமதில்லத்தில் நிகழவிருக்கும் சிவப்பிராப்தி வைபவத்திலும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள், மாணவர்கள் அனைவரையும் அன்புரிமையுடன் அழைக்கின்றோம்.

பொ. வேலாயுதம் (மகன்)
குடும்பத்தார் சார்பாக.

''துரை- பொன்வாசம்''
சன்னதி றோட்,
உடுப்பிட்டி.

(C/4435)

## 5 ஆவது ஆண்டு நினைவஞ்சலி



**திரு. பொன்னம்பலம் சுப்பிரமணியம்**

மலர்வு 11- 07 - 1935
உதிர்வு 07 - 04 - 1985

மனைவி, பிள்ளைகள்,
உறவினர்.


செட்டிகுறிச்சி,
பண்டத்தரிப்பு.

( 3133 )


## சிக்மா பம்ப்ஸ்



**CEYGMA PUMPS**



உங்கள் தேவைகளுக்கேற்ற
மின் மோட்டர்கள்
**ELECTRIC MOTOR PUMPS**
½ HP, 1HP, 1½ HP

நீர் இறைக்கும் இயந்திரம்
ENGINE DRIVEN PUMPS

- இந்தியன் விலியர்ஸ் பொருத்தப்பட்டது
Indian Villiers MK 12
- இங்கிலன்ட் விலியர்ஸ் பொருத்தப்பட்டது
England Villiers C 12

இப்பொழுது கையிருப்பில் உண்டு.

உங்கள் தேவைகளுக்குத் தொடர்பு கொள்ளுங்கள்:

**UNITED AGRO ENGINEERING**

274/1, ஆஸ்பத்திரி வீதி - யாழ்ப்பாணம்.
(பெரியாஸ்பத்திரி முன்பாக)

தொழிற்சாலை:
நாவற்குழி - கைதடி

(சி-4235)


## அணைந்த தீபத்தின் 180 ஆம் நாளில்...



அமரர்
**செல்வன் தி. சிவநாதன்**

மலர்வு: 17 - 09 - 1963
உதிர்வு: 12 - 10 - 1989

ஈர்பத்தேழில் 'இஸ்சலோன்' நகரில்
இடியென மறைந்த சிவநாதா!
இவ்வுலகின் சீவநாதமென நின்றனையே
இன்று சிவநாதமாயொலிக்க வெண்ணினையோ!
சமூக நேயர்களின் நாதனென நிறைவனே- நீ
சாகாவரம் பெற்றனையே நாதா!
உன்னிழப்புக்கள் இதயத்தைச் சுமையாக்க
உன்னினைவுகளின் பசுமையுடன்
வாழ்கின்றோம் இவ்வுலகில்.

பிரிவாலுழலும்
குடும்பத்தினர்.

கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.

(3138)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### யுத்தம். .

(1 ஆம் பக்கத் தொட ச்சி)

செயலாற்றவேண்டும். ர

சகல சமூகத்தவருக்கும் இடையேசகோதரத்துவத்தை வலுப்படுத்த வேண்டும்.

இந்திய இராணுவம் இலங்கை வருவ ை த நாம் முன்னர் எதிர்த்தது தனிப்பட்ட கொள்கை காரணமாக அல்ல; ஒரு வெளிநாட்டு இராணுவம் வருவதால் ஏற்படும் தாக்கங்களை நன்கு உணர்ந்ததனாலேயே அதன் வருகையை எதிர்த்தோம்.

எமக்கு மீண்டும் யுத்தம் வேண்டுமா? நாம் சண்டையிடத்தான் வேண்டுமா? கொலைகள் இடம்பெற வேண்டுமா? மீண்டும் அகதிகள் தோன்ற வேண்டுமா?

இதை நன்கு சிந்தித்து செயற்பட வேண்டும் – என்று அவர் கூறினார். (அ-எ)

### வடக்கு---

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தார்.

#### 75 பேருக்கு கல்வி அமைச்சர்

இதே வேளை மாகாண சபை நிர்வாகத்தின் கீழ் இப்போது 350 பட்டதாரிகள் பயிற்சிபெற்று வருகிறார்கள். அவர்களில் 75 பேரை எந்தப் பகுதிக்கு அனுப்புவது என்று ஆராய்ந்து கொண்டிருந்த வேளை மாகாண கல்வி அமைச்சு இவர்களைப் பொறுப்பெடுக்க முன்வந்துள்ளது— என்று கல்வி அமைச்சின் செயலாளர் திரு. ஈ. ஜே. சற்குணராசா தெரிவித்தார். (அ-150]

### இனக்கலவரம்---

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வடக்கு, கிழக்கில் உள்ள முஸ்லிம், தமிழ் மக்கள் ஒற்றுமையுடனும், ஐக்கிய உணர்வுடனும் அணைந்து வாழ வேண்டும். அதற்காக விடுதலைப்புலிகளின் மக்கள் முன்னணி முன்னின்று உழைக்கும்.

கிழக்கில் வாழும் முப்பது சதவீதமான முஸ்லிம்களுக்கு அவர்களின் விகிதாசாரத்திற்குரிய முறையில் தொழில் வாய்ப்பு மற்றும் சலுகைகளை பெற்றுக்கொடுப்பதை தமிழர்களாகிய நாம் உறுதி செய்ய வேண்டும்—என்றார்.

விடுதலைப் புலிகளின் முக்கிய பிரமுகர்கள் பலர் இக் கூட்டத்தில் உரையாற்றினர். (உ)

<u>புத்தாண்டை யொட்டி</u>

## வர்த்தக வங்கியில் கூடுதல் வட்டிச் சலுகைகள்

யாழ்ப்பாணம் ஏப்ரல் 7

தமிழ்ப் புத்தாண்டு தினத்தை ஒட்டி இலங்கை வர்த்தக வங்கி பல சலுகைகளை வழங்கவிருக்கிறது. வர்த்தக வங்கி யாழ் கிளை முகாமையாளர் திரு. செ. இராகவன் நடத்திய பத்திரிகையாளர் மாநாடொன்றில் இத்தகவலைத் தெரிவித்தார்.

புத்தாண்டு தினமான எதிர் வரும் 14 ஆம் திகதி சனிக்கிழமை காலை 8 மணிக்கும் 9 மணிக்கும் இடையில் வர்த்தக வங்கியின் யாழ்ப்பாணக் கிளையில் நடைபெறும் புத்தாண்டு தின நிகழ்ச்சியின் போது வாடிக்கையாளருக்கான புதிய சலுகைகள் வழங்கப்படும் அந்தச்சலுகைகள் வருமாறு:-

★ சேமிப்புக் கணக்கில் ஓர் ஆண்டுக்கு 500 ரூபாவுக்கு மேல் வைப்பில் இடுபவர்களுக்கு கைவிஷேசமாக ஒரு பெறுமதியான புதிய நாணயம் வழங்கப்படும்.

★ நிலையான வைப்புக்களில் ஆண்டுக்கு 10, 000 ரூபாவுக்குமேல் வைப்பில் இடுபவர்களுக்கு வழமையைவிட கூடுதல் வட்டி விகிதம் வழங்கப்படும்.

★ நிலையான வைப்புக்களில் ரூபா ஒரு லட்சம் ரூபாவுக்கும்அதற்கு மேலும்வைப்பிலிடுபவர்களுக்கு வழமையாக வழங்கப்படுவதை விட மிகக் கூடுதலான (அதிவிசேட) வட்டி வழங்கப்படும்.

இன்னல் மலிந்த கடந்த காலத்தில் வாடிக்கையாளருக்கு இடையறாது சேவை புரிந்து தமது வர்த்தகவங்கி அதன் சேவைகளை மேலும் விருத்தி செய்வதற்காக மிக விரைவில் அதன் அலுவல்கள் அனைத்தையும் கொம்பியூட்டர் மயப்படுத்த நடவடிக்கை எடுத்து வருகின்றது எனவும் முகாமையாளர் இராகவன் தெரிவித்தார். (அ-க)

### சைவசமய பாடசாலை திறப்புவிழா

யாழ்ப்பாணம், ஏப் 06

வட்டக்கச்சியில் கரைச்சி சைவ பாடசாலை அண்மையில் திறந்துவைக்கப்பட்டது.

இவ் வைபவத்துக்கு கிளிநொச்சி செயலக தலைமைப் பீட உதவி அரசாங்க அதிபரும், கரைச்சி சைவ வித்தியா விருத்திச் சங்கத் தலைவருமான திரு. க. துரைராசா தலைமை வகித்தார். பளையைச்சேர்ந்த சிவ அன்பர் திரு. க. குமாரசாமிப் புலவர் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றினார்.

கிளிநொச்சி கச்சேரி கணக்காளரும், கிளிநொச்சி மாவட்ட இந்து இளைஞர் மன்றத் தலைவருமான திரு கா. விரசிங்கம் சிறப்புரையாற்றினார். மேலும் சமூக சேவை உத்தியோகத்தர். கா. பொன். நித்தியானந்தன் உரையாற்றினார். 30 சைவச் சிறார்கள் இப்பாடசாலையில் கல்விகற்க சேர்க்கப்பட்டனர். (க)

### நாளை முதல் . . .

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பெறும்.

காணிகோரி விண்ணப்பித்தவர்கள் மேலே தெரிவிக்கப்பட்ட திகதிகளில் தேசிய அடையாளக்கார்ட், ஜனசக்தி உருத்தாவணம், உணவு முத்திரை ஆகியவற்றுடன் சமூகம் அளிக்குமாறு கோரப்பட்டுள்ளனர். [இ-3]

### புலிக்கொடி---

(1 ஆம் யக்கத் தொடர்ச்சி)

கும் புலிக் கொடிகள் பறக்கின்றனவே. அவற்றைப் பார்த்ததும் நாமும் ஒன்று எடுத்துச் செல்ல வேண்டும் போலத் தோன்றுகிறது'' என்று அவர்கள் தெரிவித்தனர்.

அமெரிக்க தூதராலய அதிகாரியான திரு. டீ.ஏ. ஹரி, பிரெஞ்சுத் தூதராலய அதிகாரி திரு.டீ ஹேல் பீம் ஆகிய அந்த அதிகாரிகள் கடந்த இரண்டு நாட்களாக யாழ்ப்பாணத்தின் பல இடங்களையும் பார்வையிட்டுச் சென்றனர்.

காரைநகர், ஊர்காவற்றுறை, பருத்தித்துறை, யாழ் நகரப் பகுதி, யாழ் கோட்டை ஆகிய இடங்களில்அதிகநேரம் செலவிட்டுப் பார்த்தனர். [அ-3]

### அரச---

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

சபையுடனும், பொதுநிர்வாக அமைச்சுடனும் பேச்சுநடத்தி மாற்றம் வரும் வரை விண்ணப்பங்களைப் பரிசீலனைக்காக வைத்திருப்போம். இதனால் காலதாமதம் ஏற்படுவதைத் தவிர்க்க முடியாது.''

இப்படித் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-3)


## அன்னை பூபதிக்கு எமது அஞ்சலி!

மாணவ மாணவிகளுக்கு அச்சமற்ற அமைதியான சூழ்நிலையில் வரும்
✶ இனிய தமிழ்ப் புத்தாண்டில் ✶
ஓர் நற்செய்தி

இலவச சலுகை அடிப்படையில்

# ★ கொம்பியூட்டர் கல்வி ★

## (OSCO COMPUTER CENTRE)

PP, VVT, KKS, TELLIPPALAI

DIPLOMA IN DATAPROCESSING & COMPUTER PROGRAMMING IN BASIC LANGUAGE

அந்நிய இராணுவ ஆக்கிரமிப்பின் கஷ்டத்தின் மத்தியிலும், 1988, 1989 ஆம் ஆண்டில் G. C. E. O/L, A/L பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களுக்கு கீழ்க் காணும் சலுகை அடிப்படையில் கொம்பியூட்டர் கல்வி கற்பிக்கப்படும்.
சேரவிரும்புவோர் (இருபாலாரும்) 15-04-1990 ஆம் திகதிக்கு முன் விண்ணப்பிக்கவும்.

| G. C. E. பரீட்சை பெறுபேறு (O/L) | (A/L) | செலுத்தவேண்டிய கட்டணம் |
|---|---|---|
| 7D | 4A | இலவசம் |
| 6D | 3A | ரூபா 300/- மட்டும் |
| 5D முதல் 3D + 3C | 2A | ரூபா 600/- மட்டும் |
| 3Dக்கு குறைவு சித்திரை 90இல் G. C E· பரீட்சை எடுத்தவர்க்கும் 2Aக்கு குறைவு | | ரூபா 750/- மட்டும் |

ஏனையோர் முழுக் கட்டணமும் இரண்டு தவணைகளில் கட்டலாம். சேரும் போது கட்டுவது ரூபா 600/- (காலம் 3 மாதம்)

### வகுப்பு ஆரம்பமாகும் விபரம்

| இடம் | ஆரம்ப திகதி | நேரம் | நாட்கள் |
|---|---|---|---|
| 1. வல்வைக் கல்வி மன்றம் (வல்வெட்டித்துறை) | 15-04-1990 ஞாயிறு | காலை 8 மணி | சனி, ஞாயிறு |
| 2. வேலாயுதம் மகாவித்தியாலயம் முன்பாக (பருத்தித்துறை) | 15-04-1990 ஞாயிறு | மாலை 2 மணி | சனி, ஞாயிறு |
| 3. தெல்லிப்பழை (புகையிரத நிலையத்திற்கு அருகாமையில்) | 16-04-1990 திங்கள் | காலை 8 மணி | திங்கள், செவ். |

### மேலும் பின்வரும் சலுகைகள் வழங்கப்படும்

1. ஏதேனுமொரு தொழிற் கல்வித் துறையில் சான்றிதழ் இருப்பின் ரூபா 300/- குறைக்கப்படும்.
2. அந்நிய இராணுவத்தின் அட்டூழியத்தின் போது குடும்பத்தலைவர்களை இழந்தவர்களுக்கு இலவசம்.
3. 1983 ஆம் ஆண்டு கலவரத்தின் பின் வேலையிழந்தோரது, இராணுவ அட்டூழியத்தின் போது வீடு முற்றாக சேதமாக்கப்பட்டோரது, பாரிய இழப்புடையோரது அல்லது யாதொரு வருமானமுமற்றோருடைய பிள்ளைகட்கு, தற்போதைய குடும்ப சூழ்நிலைக்கேற்ற சலுகை வழங்கப்படும். இதற்கு விண்ணப்பங்களை அனுப்ப வேண்டிய விலாசம்.

(அ) S. MAHA, OSCO COMPUTER CENTRE, V V T (Or Point Pedro or Kankesanthurai)

(ஆ) இடைக்காடு, உடுப்பிட்டி, தொண்டமனாறு, பொலிகண்டி, நவிண்டில், வல்வை மாணவர், வல்வை கல்வி மன்றத்தின் பதிவாளர், திரு. N. இராமகிருஷ்ணனிடம் விபரமறிந்து தங்கள் பெயர்களை பதிவுசெய்து கொள்ளலாம்.

மேற்குறிப்பிட்ட யாதொரு சலுகைக்குமுட்படாதவர் முழுக்கட்டணமும் செலுத்த வேண்டும்.

## I. B. M (PG) COMPATIBLE இல்

பயிற்சி வழங்கப்படும்.

பயிற்சி முடிவில் தகுதிகாண் மாணவர்களுக்கு சான்றிதழ் வழங்கப்படும்.

[3117]



## TENDER FOR FURNITURE

Reference to the above advertisement on 30-03-90 the closing date of the Tender is extended upto 24-04-90 Last date for collection of Tender Form is extended upto 11 - 04 - 90.

Tenders will be opened at 2.30 p m. on 24-04-90 in the Board Room of the university of Jaffna.

**Registrat University of Jaffna.**



பகிரங்க ஏல விற்பனை

## அறிவித்தல்

விற்பனை அபிவிருத்தித் திணைக்களத்திற்குரிய பழுதடைந்ததும், பாவிக்கக்கூடியதுமான சகல விதமான தளபாடங்கள், தராசுகள், அலுவலக உபகரணங்கள் மற்றும் பொருட்கள்; கீழ்க் குறிப்பிட்ட முகவரியில் அமைந்துள்ள அலுவலகத்தில் 18. 4. 1990ம் திகதி அன்று மு. ப. 9. 00 மணிக்கு ஏல விற்பனைக்கு விடப்படும். பொருட்களைப் பார்வையிட விரும்புவோர் 17. 4. 1990 ம் திகதி முற்பகல் 9. 00 மணி தொடக்கம் பிற்பகல் 3. 00 மணிவரை பார்வையிட்டுக் கொள்ளலாம்.

பிராந்தியக் கணக்காளர்,
(வ. பி)
ஆணையாளருக்காக.

விற்பனை அபிவிருத்தித் திணைக்களம்,
பிராந்தியக் காரியாலயம்,
வடபிராந்தியம்,
250, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

(C/ 4438)



## பிறந்த நாள் வாழ்த்து



### றோய் கபில் ராஜ்

தமிழ்ஈழத்தில் உள்ளமுல்லைத்தீவு நியூசென்பீற்றேஸ் பேக்கறி உரிமையாளரும், உதயன் விற்பனையாளரும் அ. ஞானேந்திரன் – மதி தம்பதிகளின் புதல்வன் றோய் கபில் ராஜ் இன்று 7-04-90 ம் திகதி தனது மூன்றாவது பிறந்ததினத்தைக் குதூகலமாகக் கொண்டாடுகிறார். இவரை அப்பா, மம்மி அம்மா, ஆசை மாமா கடை அப்பா, பெரியப்பா குடும்பத்தினர், சித்தப்பா குடும்பத்தினர், பெரியமாமி, சின்னமாமி குடும்பத்தினர் ஜெர்மனியிலுள்ளவதனிச்சித்திகுடும்பத்தினர், கனடாவில்உள்ள லோகம் அத்தை குடும்பத்தினர், அராலியில் உள்ள அம்மாச்சி குடும்பத்தினர், மயிலிட்டியில்உள்ள அப்பம்மா, குணம்மாமா, லிங்கம்மாமா, குமார்மாமா குடும்பத்தினர், சுந்தர்மாமா, ரவிமாமா, செல்வன் மாமா, பிரேமகுமார்மாமா, றோய்மாமா, சோதி மாமா, ராமலிங்கம்மா, ஜெபாலயப்போதகர் குடும்பமும் விசுவாசிகளும், நியூசென்பிற்றேஸ் பேக்கரி ஊழியர்கள், G. R. K. ரான்ஸ்போட் ஊழியர்களும், இவர்களுடன் சுசிலன்மாமா, வடைக்குட்டிமாமா, சந்திரன் மாமா, ரகுமாமா, குமார்மாமா, மனோமாமா, ஆகியோர் கர்த்தராகிய யேசுவின் கிருபைபெற வாழ்த்துகிறார்கள்.

(C/4421)



## ECALOM

(மனோகரா சந்தி)

அளவையியலும் விஞ்ஞானமுறையும்


### திரு. கேசவன்

பகுதி II ஆரம்பமாகியுள்ளது
சனி, ஞாயிறு — 5 மணி
(வினா-விடை வகுப்புக்களும் ஆரம்பமாகின்றது)

(சி4250)



# ஐயனார் திருவடிக்கு அர்ப்பணம்



## சுன்னாகம், தாளையடி

ஸ்ரீ அரிஹரபுத்திர ஐயனார்
கவின்மிகு தேரில் பவனி வரும் இந்த நன்னாளில்

அடியார்கள் அனைவரும்

அருளும் அமைதியும் சகல சிறப்புக்களும் பெற்று
மண்ணில் நல்ல வண்ணம் வாழ நீள நினைந்து, கரம்கூப்பி,
சிரம்தாழ்த்தி எமது இதயக் கமலத்தை, பூரணை புட்கலை சமேத
★ ஐயன் திருவடிகளில் அர்ப்பணிக்கின்றோம் ★



1. தயா மரக்காலை, சுன்னாகம்.
2. பாலன் ஸ்ரோர்ஸ், சுன்னாகம்.
3. துர்க்கா ஸ்ரேஷனேர்ஸ், சுன்னாகம்.
4. நாகம்ஸ் சினிமா, சுன்னாகம்.
5. பல நோ. கூ. சங்கம், சுன்னாகம்.

[சி-4437]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மட்டுவில் பன்றித்தலைச்சி அம்மன் பங்குனி இறுதித்திங்கள் பொங்கல் நாளாம் 9 - 4 - 1990 ந் திகதி

அன்று ஆலயவீதியில் மில்க்வைற் விற்பனை வாகனம், அபிமான பாவனையாளர்களுக்கு உற்பத்திகளை மலிவாக விற்கவும் சேகரித்த மேலுறைகளுக்கான பரிசில்களை வழங்கவும், காத்திருக்கும்.
சந்தர்ப்பத்தை தவறவிடாதீர்கள்.

மில்க்வைற், யாழ்ப்பாணம்.

சஞ்சீவி

07—04—1990 சனிக்கிழமை

14 - 4 - 1990 ந் திகதி மானிப்பாய் மருதடி விநாயகர் பிரமோதுத வருடப்பிறப்பன்று, அடியார்க்கு அருள் வழங்கத் தேரோடி வீதிவரும் நாள்.

அபிமான பாவனையாளர்களுக்கு மில்க்வைற் உற்பத்திகளை மலிவு விலையில் விற்கவும், சேகரித்த மேலுறைகளுக்கு உரிய பரிசில்களை வழங்கவும், மில்க்வைற் வாகனம் ஆலய வீதியில் தங்களைக் காத்திருக்கும்.

மில்க்வைற், யாழ்ப்பாணம்.

## வவுனியா, மன்னாரிலும் நகைகள் மீளளிக்கப்படும்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 7
வவுனியா, மன்னார் மாவட்ட வங்கிகளில் நகை அடகு வைத்தவர்களின் நகைகள் மீளளிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

வவுனியா மக்கள் வங்கிக் கிளையில் அடகு வைத்து 1989 செட்டெம்பர் 21 ஆம் திகதி வரை பணம் செலுத்தியவர்களின் நகைகள் இம்மாதம் 2 ஆம், 3 ஆம் கிழமைகளில் வவுனியா பொலிஸ் நிலையத்தில் வைத்து வழங்கப்படும்.

மன்னார் மாவட்டக் கிளையில் அடகு வைத்து இதே திகதி வரை பணம் செலுத்தியவர்களின் நகைகள் மேமாத முதற்பகுதியிலும் —

முருங்கன் கிளையில் அடகு வைத்தவர்களின் நகைகள் இம்மாதம் மூன்றாம் கிழமையிலும் வழங்கப்படும்.

யாழ்- பிரதேச முகாமையாளர் இந்ததகவல்களைத் தெரிவித்துள்ளார். (உ-3)

## விஸா இன்றிச் சென்ற இளைஞர்கள் விசாரணையில்

கொழும்பு, ஏப். 7
பங்களாதேஷ் செல்வதற்கான விஸா இல்லாத காரணத்தால் 14 இலங்கை இளைஞர்கள் இந்திய குடியகல்வு அதிகாரிகளால் கல்கத்தா விமான நிலையத்தில் தடுத்து நிறுத்தப்பட்டனர்.

இவர்களில் பெரும்பாலோர் வட பகுதியைச் சேர்ந்தவர்கள் என்று கூறப்படுகிறது.

டாக்கா செல்லும் விமானத்தில் ஏறியிருந்த 15 இலங்கை இளைஞர்களை இந்திய அதிகாரிகள் விசாரித்த போது அவர்களிடம் பங்களாதேசுக்கு செல்ல விஸா இல்லை என்பது தெரிய வந்தது.

நீண்ட விசாரணையின் பின்னர் ஓர் இளைஞர் மட்டுமே டாக்காவுக்கு அந்த விமானத்தில் செல்ல அனுமதிக்கப்பட்டார். ஏனையோர் விமானத்தில் இருந்து இறக்கப்பட்டனர். (உ-எ)

## செல்வபுரம்: பதற்றம் தணிவு

முல்லைத்தீவு ஏப். 7
செல்வபுரத்தில் அரச காணிச் சுவீகரிப்பு முயற்சி தொடர்பாக ஏற்பட்ட பதற்றநிலை முல்லைத்தீவு உதவி அரசாங்க அதிபர் திரு. வே. கந்தசாமியின் தலையீட்டால் தணிந்தது.

செல்வபுரம் கிராமசேவையாளர் பிரிவு எல்லைக்குள் உள்ள அரசாங்கக் காணி தொடர்பாக செல்வபுரம் சனசக்திக் குழுக்களுக்கும் அயல் கிராமமான வட்டுவாகலை சனசக்திக் குழுவுக்கும் இடையில் பிரச்சினை ஏற்பட்டதாகக் கூறப்படுகிறது.

இதன் எதிரொலியாக வட்டுவாகல் கிராமத்துக்குள் சீவச்சென்ற சீவல்தொழிலாளர்கள் தடுக்கப்பட்டனர் என்றும் கூறப்படுகிறது. (இ-92)

## 2 எம்பிக்களுக்கு எதிராக சி. ஐ. டி. விசாரணை!

கொழும்பு ஏப்ரல் 7
அரசாங்க கட்சி எம். பிக்கள் இருவர் மீது விசாரணை நடத்தும்படி இரகசிய பொலீஸார் பணிக்கப்பட்டுள்ளனர்.

இத்தகவலை அமைச்சரவைப் பேச்சாளர் ரஞ்சன் விஜேரத்னா நேற்று முன்தினம் செய்தியாளர் மாநாட்டில் வெளியிட்டார்.

அந்த எம். பிக்கள் மீதான குற்றச் சாட்டுக்கள், அவர்களின் பெயர் விவரங்களை அமைச்சர் வெளியிடவில்லை.

நான்கு ஆளும் கட்சி எம். பிக்களை பதவியில் இருந்து விலகும்படி கேட்கப்பட்டுள்ளதாகக் கூறப்படும் செய்தி பற்றி அமைச்சரிடம் செய்தியாளர்கள் வினவினார்.

''நான் கட்சியின் செயலாளராக உள்ளேன். அதுபற்றி எனக்கு ஒன்றுமே தெரியாது''- திரு. விஜேரத்தினா சொன்னார்.

திருவாளர்கள் காமினி திஸநாயக்கா, சமரவீர, வீரவன்னி, வின்செண்ட் பெரேரா, டாக்டர் சிறில் ஆகியோரே அந்த நான்கு எம். பிக்களும் என்று செய்தியாளர்கள் குறிப்பிட்ட போது -

அமைச்சர் விஜேரத்தினா, ''இவர்களில் இருவருக்கு எதிராக முக்கிய குற்றச்சாட்டுக்கள் உள்ளன. அவை பற்றி இரகசியப் பொலீஸார் விசாரணை நடத்தி வருகின்னர்'' - என்று சொன்னார்.

## நெல்லியடிக் கிளையில் இன்று, நாளை நிவாரணம்

யாழ்ப்பாணம், ஏப். 7
கரவெட்டி உதவி அரசாங்க அதிபர் பிரிவைச் சேர்ந்த 2 ஆயிரத்து 286 குடும்பங்களுக்கு இன்றும், நாளையும் மீளக்குடியமர்தல் நிவாரணம் நெல்லியடி மக்கள் வங்கிக் கிளையூடாக வழங்கப்படவிருக்கிறது.

இன்று கரவெட்டி கிழக்கு (ஜே 190) அல்வாய் மேற்கு (ஜே. 195), துன்னாலை தெற்கு (ஜே. 191) ஆகிய கிராம சேவையாளர் பிரிவுகளைச் சேர்ந்தோருக்கும் -

நாளை கரவெட்டி மேற்கு (ஜே. 188), கரவெட்டி வடக்கு (ஜே. 194), துன்னாலை மேற்கு (ஜே. 193), கரணவாய் (ஜே. 186) ஆகிய கிராம சேவையாளர் பிரிவுகளைச் சேர்ந்தோருக்கும் நிவாரணம் வழங்கப்படவிருக்கிறது. (உ - 3)

எமது நேற்றைய வெளியீடு

கார்த்திக் - சித்ரா - S.S சந்திரன் - செந்தில்
★ மிஸ்டர் கார்த்திக் ★
சரத்பாபு - சில்க்சுமிதா - சிராஜ்
★ மாய ராணி ★
சுப்பஸோ வீடியோ, ஓடியோ சென்ரர்
யாழ் வீதி, யாழ்ப்பாணம்
(12166)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிக்கேஷன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம், நாவலர்வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 07 - 04 - 1990 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

## ★ வடக்கில் அடகு வைக்கப்பட்ட 34,000 நகைப் பொதிகள் கொழும்பில் தேக்கம்!

### மீளப்பெற பணம் செலுத்தப்படவில்லையாம்

யாழ்ப்பாணம், ஏப் 7
வடபிராந்தியத்தில் உள்ள மக்கள் வங்கியின் 16 கிளைகளிலும் அடகு வைத்து மீளப்பெறுவதற்காகப் பணம் செலுத்தப்படலாம் சுமார் 34 ஆயிரம் நகைப்பொதிகள் தற்போது கொழும்பில் வைக்கப்பட்டிருக்கின்றன.

மக்கள் வங்கி அதிகாரி திரு. எஸ். சிவசிதம்பரம் இத்தகவலை சஞ்சீவிக்குத் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தாவது:-

இதுவரை நகைகளை மீளப்பெற பணம் செலுத்தியவர்களின் 36 ஆயிரத்து 800 நகைப்பொதிகள் உரியவர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. மேலும் பணம் செலுத்திய 2 ஆயிரத்து 200 பேரின் நகைகள் விரைவில் மீளளிக்கப்படவிருக்கின்றன.

கொழும்புக்கு கொண்டு செல்லப்பட்ட சுமார் 73 ஆயிரம் நகைப்பொதிகளில் மீளப்பெற பணம் செலுத்தப்படாததால் சுமார் 34 ஆயிரம் பொதிகள் கொழும்பில் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளன.

இந்த நகைகள் மீளளிக்கப்பட்டபின்பே குடாநாட்டில் அடகு பிடிக்கும் வேலைகள் வங்கிகள் மீண்டும் ஆரம்பிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

—இப்படி அவர் கூறினார். (உ-3)

## லொறிகளில் பயணம் செய்ய அனுமதி

கொழும்பு, ஏப். 7
நேற்றுமுதல் இம்மாதம் 30ஆம் திகதிவரை தீவின் எப்பகுதிக்கும் பயணிகளை ஏற்றிச் செல்ல லொறிகளுக்கு அனுமதிவழங்கும்படி போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் விஜேபால மெண்டிஸ் பொலீஸாரைக் கேட்டிருக்கிறார்.

புத்தாண்டின் முன்னரும் பின்னரும் விடுமுறையைக் கழிக்கும் மக்களின் தேவையைப் பூர்த்திசெய்யும் அளவுக்கு அரசு பஸ்கள் கிடையாததே இந்த அனுமதிக்குக் காரணமாகும். (இ-எ)

## யாழ் கல்வித்திணைக்களத்துக்கு மூன்று மாடிக்கட்டடம்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 7
யாழ் - கல்வித்திணைக்களத்துக்கு என மூன்று மாடி அலுவலகக் கட்டடம் ஒன்று அமைக்கப்படும். இதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

யாழ் - மாவட்ட கல்விப் பணிப்பாளர் திரு. இ. சுந்தரலிங்கம் இத்தகவலை வெளியிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நல்லூர் ஆசிரிய பயிற்சிக் கலாசாலை இயங்கிய கட்டடங்களில்தான் இன்னும் கல்வித்திணைக்களம் இயங்கிவருகிறது. இந்த பழைய கட்டடங்களுக்குப்பதிலாக மூன்று மாடிகள் கொண்ட அலுவலகம் அமையவிருக்கிறது.

முதற்கட்டமாக கனேடிய உதவியுடன் மூன்று மாடிக் கட்டத்தின் முதல் அடுக்கு அமைக்கப்படவிருக்கிறது.

இந்த கட்டடம் அமைப்பதற்கான மாதிரிப்படங்களை தயாரிக்கும் வேலைகள் தற்சமயம் நடைபெற்றுவருகின்றன. (ε - ச)

## செயலக ஊழியருக்கு முற்பணம்

யாழ்ப்பாணம், ஏப் 7
யாழ்- அரசாங்க செயலக ஊழியருக்கு புதுவருடத்தையொட்டி1500 ரூபா முற்பணம் நேற்று வழங்கப்பட்டது.

பண்டிகைக் கால முற்பணம் ஆயிரம் ரூபாவில்இருந்து 1500 ரூபாவாக உயர்த்தும் சுற்றறிக்கை செயலகத்துக்கு வந்துசேராத போதும் முற்பணம் 1500 ரூபா வழங்கப்பட்டது. [இ 3]

## புதுவருடத்திற்கு முன்னர் உணவுமுத்திரை விநியோகம்

யாழ்ப்பாணம், ஏப் 7
புதுவருடத்துக்கு முன் புதிய உணவு முத்திரைகளை வழங்கி முடிக்க துரித நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளன.

யாழ். சமூக சேவைப் பகுதியில் இருந்து உணவு முத்திரைகளை தற்போது அந்தந்தப் பகுதி உதவி அரசாங்க அதிபர்கள் எடுத்துச் சென்றுள்ளனர்.

அவர்கள் தமது பணிமனைகளில் வைத்து விரைவாக அவற்றை உரியவர்களுக்கு வழங்க நடவடிக்கை எடுப்பார்கள்.

அடுத்த வாரத்தில் உணவு முத்திரை விநியோகம் கிராம சேவையாளர்கள் மூலம் நடைபெறும் என எதிர்பார்க்கப்படுகிறது. (உ-3)

## கோப்பாயில் சேவை விழா

யாழ்ப்பாணம், ஏப் 7
கோப்பாய் மக்கள் நலன் காக்கும் பிரிவினரின் சேவை விழா இன்று சனிக்கிழமை மாலை ஐந்து மணிக்கு இருபாலைச் சந்தியில் நடைபெறும்.

இந்த விழாவில் பேராசிரியர் கா. சிவத்தம்பி முதன்மை விருந்தினராகவும், திரு. இ. ஜெயராஜ் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்வார்கள்.

கலை நிகழ்ச்சிகளும் இடம் பெறும். [இ-3]

## 69 கிராம சேவையாளர் பதவி யாழ்.மாவட்டத்தில் வெற்றிடம்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 7
யாழ். மாவட்டத்தில் வெற்றிடமாகவுள்ள 69 கிராம சேவையாளர் பதவிகளுக்குப் புதியவர்களை நியமிக்க மாகாண சபையின் உள்துறை அமைச்சுச் செயலாளர் நடவடிக்கை எடுத்துள்ளார்.

யாழ். மாவட்டத்தில் கிராம சேவையாளர் பிரிவுகள் மறுசீரமைக்கப்பட்டபோது 69 இடங்களுக்கு வெற்றிடங்கள் ஏற்பட்டன.

முன்பு கிராமசேவையாளர் பதவிக்கு விண்ணப்பித்தவர்களின் விண்ணப்பங்களுடன் புதிய விண்ணப்பங்களும் கோரப்பட்டு அவற்றிலிருந்து தகுதியானோர் தெரிவுசெய்யப்பட்டு இப்பதவிக்கு நியமிக்கப்படுவார்கள்.

இது சம்பந்தமாக விரைவில் விண்ணப்பங்கள் கோரப்படும் என தெரியவந்தது. [உ-3]

## உண்ணா நோன்பு

யாழ்ப்பாணம், ஏப். 7
அன்னை பூபதி நினைவாக மயிலிட்டிக்கரை, கண்ணகை அம்மன் ஆலய முன்றலில் இன்று 7 ஆம் திகதி ஓர் உண்ணா நோன்பு இடம் பெறுகிறது. [இ]

## புன்னாலைக்கட்டுவனில் அடையாள உண்ணாவிரதம்

யாழ்ப்பாணம், ஏப் 7
புன்னாலைக்கட்டுவன் சந்தி விநாயகர் ஆலய முன்றலில் அன்னை பூபதி நினைவாக கடந்த வியாழக்கிழமை அடையாள உண்ணாவிரதம் ஒன்று நடத்தப்பட்டது.

புன்னாலைக்கட்டுவன் மக்கள் விடுதலை முன்னணி பொறுப்பாளர் டொச்சர், வலிகாமம் பொறுப்பாளர் ஆஞ்சநேயர் ஆகியோர்கலந்து கொண்டு உரையாற்றினர்.

அவர்களுடன் அவ்வூர் பிரமுகர்களும் உரையாற்றினர்.

மாலை 4 மணியளவில் பழரசம் கொடுத்து மறைந்த போராளி அமுதனின் தந்தையார் உண்ணாவிரதத்தை முடித்து வைத்தார். ]இ]

## இருவருக்கு பதவி உயர்வு

யாழ்ப்பாணம் ஏப். 7
யாழ்- கல்வித்திணைக்களத்தில் இரு கல்வி அதிகாரிகளுக்கு பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது.

கல்விப் பணிப்பாளராக பதவியேற்றபின் திரு. இ. சுந்தரலிங்கம் முதலில் இந்த பதவி உயர்வை வழங்கியுள்ளார்.

திரு.ஏ. தங்கராசா பிரதம கல்வி அதிகாரி (பொது நிர்வாகம்) யாகவும் திரு. எஸ் நடராசா கல்வி அதிகாரி (கல்வி நிர்வாகம்) யாகவும் பதவி உயர்வு [illegible] டுள்ளனர். (இ- 3)

## முன்னாள் செயலர்கள் கூறிய கருத்தை மறுக்கிறார் நளின்

திருகோணமலை, ஏப். 7
வடகிழக்கு மாகாண சபையின் முன்னாள் செயலாளர்கள் தாங்கள் பதவி இழந்ததற்குக் கூறும் காரணம் சரியல்ல. அவர்கள் ஏன் வேலை விட்டுச் சென்றார்கள் என்பது அவர்களுக்கே நன்றாகத் தெரியும். உண்மையான [illegible] தைரியமில்லாதவர்கள் இப் [illegible] தவறான செயலாகும்.—

இவ்வாறுகூறினார் வடக்கு, கிழக்கு மாகாண ஆளுநர் லெப்டினண்ட் ஜெனரல் நளின் செனிவரத்தின.

கடந்த 29ஆம் திகதி உதயன் பத்திரிகையில் பிரசுரமான 'ஆளுநரைக் குறை கூறும் பதவி இழந்த செயலாளர்கள்' என்ற செய்திகுறித்து [illegible] செய்தியாளர்களிடம் கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார். (உ-150)

## பிறப்பு, இறப்பு சான்றிதழ்: 10 முதல் விண்ணப்பம் ஏற்பு

யாழ்ப்பாணம், ஏப்ரல் 7
பிறப்பு, இறப்பு, விவாக சான்றிதழ்கள் பெறுவதற்கான விண்ணப்பங்கள் எதிர்வரும் 10 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முதல் ஏற்கப்பட இருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

விண்ணப்பங்களை கட்டுப்பாடாக ஏற்கும் வகையில் காலை 9 மணி முதல் 11 மணி வரையே விண்ணப்பங்கள் ஏற்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது. (இ-3)

## அமைச்சரவையை மாற்றி அமைத்தது எப்படி?

### ஜனாதிபதியே விளக்குகிறார்

அமைச்சரவையை மாற்றி அமைத்தபோது, தாம் எப்படி நியமனங்களைச் செய்தார் என்பதை ஜனாதிபதி திரு பிரேமதாசா நேற்று ஸ்ரீ கோதாவில் நடந்த கூட்டத்தில் விவரித்தார்.

அவர் கூறியதாவது:-

கட்சி வேறுபாடுகளுக்குப் பதிலாக நிலச்சுவாந்தார் காலத்தில் இருந்த வர்க்க பேதங்கள் மீண்டும் தலைதூக்க ஆரம்பித்துள்ளன.

சுயமாகச் சிந்தித்து எது சரி எது பிழை என்று தீர்மானிக்கக் கூடிய சமூகத்தில் வாழ்வதால் மக்களை தவறான வழியில் இலகுவாக இட்டுச்செல்ல முடியாது.

அமைதிப்படை

அமைதிப்படையைத் திருப்பி அனுப்புவது; அமைதிப் படை வந்ததால் தென்இலங்கையில் ஏற்பட்ட பீதி இவை இரண்டையும் கருத்திற் கொண்டே 1989 ஆம் ஆண்டு அமைச்சரவையை அமைக்கவேண்டியதாயிற்று. அமைச்சரவை அதற்காக முக்கிய பங்காற்றியது.

#### நீக்கப்பட்டது ஏன்?

இந்த நோக்கங்களை அடைவதற்கு முட்டுக்கட்டையாக இருந்தவர்கள் இம்முறை நீக்கப்பட்டிருக்கிறார்கள்.

அமைச்சரவைக்கு உறுப்பினர்களை நியமிக்கும் போது, அவர்கள் தமது நாட்டை நேசிக்கிறார்களா? தாம் பெறக்கூடிய பொருளாதார வருவாய்க்காக நாட்டுக்குத் துரோகமிழைப்பார்களா? என்பன கவனத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட்டன.

#### சந்தேகம் இருந்தால்...

இவ்வாறானவர்களில் எள்ளளவு சந்தேகம் இருக்குமாகில் நான் அவர்களுடன் கடமையாற்றத் தயாராக இல்லை இதை நான் தேர்தல் விஞ்ஞாபனத்தில் தெட்டத் தெளிவாகக் கூறியிருந்தேன்.

அமைச்சர் பதவிகளுக்கு நியமிக்கப்பட்டவர்கள் மக்களின் அபிலாஷைகளை நிறைவேற்றக்கூடிய திறமையுள்ளவர்களாக இருக்கவேண்டும்.

நட்புறவை மாத்திரம் வைத்து இந்த முக்கிய பணியைத் தொடரமுடியாது — என்றார் ஜனாதிபதி (அ-எ)

## ஆசிரியர் கூட்டம்

யாழ். மாவட்டத் தொண்டர் ஆசிரியர் சங்கத்தின் விஷேட கூட்டம் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை (பத்தாம் திகதி) யாழ்ப்பாணம் வேம்படி மகளிர் உயர்தர பாடசாலையில் காலை 10-00 மணிக்கு நடைபெறவுள்ளது.

மேற்படி தொண்டர் ஆசிரியர்களின் வேண்டுகோளினை ஏற்று, விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் யாழ். மாவட்டப் பொறுப்பாளர் திரு. ஸ்ரான்லி டொமினிக், கல்விப் பொறுப்பாளர் திரு. அருண் ஆசிரியர் ஆகியோர் இக்கூட்டத்தில் கலந்துகொள்ளவுள்ளனர்.

தனியார் கல்விநிறுவன ஒன்றியம்
யாழ், மாவட்டம்

விசேட அறிவித்தல்

க. பொ. த. உயர்தரம் 92 பிரிவு

நடைபெற்று முடிந்த க. பொ. த. சாதாரணதரப் பரீட்சையில் தோற்றிய மாணவர்களுக்கான க. பொ. த. உயர்தர வகுப்புகளை எக்காரணம் கொண்டும் பரீட்சைப் பெறுபேறுகள் வெளியாகும் முன்னர் ஆரம்பிக்க வேண்டாமென சகல தனியார் கல்வி நிறுவன இயக்குனர்களையும் பிரத்தியேக வகுப்புக்குரிய ஆசிரியர்களையும் வேண்டிக் கொள்கின்றோம்.

தனியார் கல்விநிறுவன ஒன்றியம்
யாழ். மாவட்டம்.
[12168]

## மரண அறிவித்தல்

### மோனிக்கா செபஸ்ரியன்

மோனிக்கா செபஸ்ரியன் காலமாகிவிட்டார்.

இவர் காலஞ்சென்ற செபஸ்ரியனின் (ஓய்வுபெற்ற நீர்ப்பாசன இலாகாவின் பிரதம லிகிதர்) அன்பு மனைவியும், பேளி, காலஞ்சென்ற றூபி, டயமன். பிலோ, அன்ரன், ஜெயா, கெஸ்டன் ஆகியோரின் அன்புத் தாயாரும், ஜோர்ஜ், வர்ணகுலசிங்கம், பயஸ், அரியம் லாசறஸ், செல்வம் கனகரத்தினம், பாக்கிய சௌந்தரி, இருதயராணி ஆகியோரின் அன்பு மாமியும், வசந்தி, ஜெயந்தி, சாந்தி. யூட், சிந்தி, லக்ஸ்மன், சஞ்சீவ், அலிஸ்டன், றொஷானி, றொஷான், பிறியாந்தி, றஜிப், ஹரிசோபஸ், லெரிசோபஸ் ஆகியோரின் அன்புப் பேத்தியும், டிலோஜினி, சலோமி, டிவானா ஆகியோரின் அன்புப் பூட்டியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் 07-04-90 இன்று பி.ப. 3-30 மணிக்கு பரிசுத்த கொஞ்சேஞ்சிமாதா சேமக்காலைக்கு நல்லடக்கத்துக்காக எடுத்துச்செல்லப்படும்.

தகவல்:
கஸ்டன் பெனடிக்ற் செபஸ்ரியன்
61, ஸ்ரேசன் றோட்,
யாழ்ப்பாணம். [3151]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**SKYLINES**

For Quality Photostat Copying,
Electronic Typewriting
and
Roneo works
281 B, CLOCK TOWER ROAD,
JAFFNA.



சஞ்சீவி சஞ்சிகை

07-04-1990 சனிக்கிழமை



தரமான
★ போட்டோ ஸ்ரற்
★ றோனியோ
★ எலக்ரோனிக் ரைப்பிங்

வேலைகளுக்கு

**ஸ்கைலைன்ஸ்**
281 பி, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.


# பூமியைச் சுத்தம் செய்யும் பணி எவரெஸ்ட் உச்சியில் ஆரம்பம்

இங்கிலாந்தின் முடிக்குரிய இளவரசர் சார்ள்ஸ் ஒரு படம் தயாரித்து வருகிறார்.

பொதுமக்களிடம் இருந்து திரட்டப்படும் பணத்தில் இப்படம் தயாரிக்கப்படுகிறது.

இது ஒரு டெலிவிஷன் படம். படத்தின் பெயர் 'பூமி' என்பது.

இளவரசர் படம் எடுக்கும் அளவுக்கு 'பூமி'க்கு என்ன ஆபத்து நேர்ந்து விட்டது?

பூமி இருந்தால்தானே நாடுகள், அவற்றை ஆள சக்கரவர்த்திகள், அரசர்கள், ஜனாதிபதிகள், பிரதமர்கள் எல்லாரும் தேவை.

'பூமி'க்கே ஆபத்து என்றால்... ...

ஆம்! பூமிக்கு உண்மையிலேயே ஆபத்து வந்து விட்டது. பூமிக்கு பூமியால் ஆபத்து வரவில்லை; பூமியில் வாழும் மனிதர்களால் தான் ஆபத்து வந்திருக்கிறது.

நுனிமரத்தில் இருந்து கொண்டு அடிமரத்தை வெட்டுபவன் நிலை தெரியுமல்லவா!

அவனின் நிலையில்தான் இன்று மனிதன் பூமியில் வாழ்கின்றான்.

அவன் மரத்தை வெட்டுவதுதான் பூமிக்குத் தோன்றியுள்ள ஆபத்துக்களின் முதன்மையானது.

மரங்கள் வேகமாக வெட்டப்பட மண் அரிவு ஏற்படுகின்றது. சுற்றாடல் பாதிக்கப்படுகிறது.

பூமிக்கும் அதில் வாழும் மனித இனத்துக்கும் தேவையற்ற நச்சுவாயுக்கள் வளிமண்டலத்தை மாசுபடுத்துகின்றன.

இதனால் மனித இனமே பூமியில் இருந்து மறைந்து விடுமோ என்ற பயங்கர நிலையும் ஏற்படுகின்றது.

இப்பேரழிவுகளில் இருந்து பூமியைக் காப்பாற்ற மனிதனால்தான் முடியும்.

இதை உணர்த்துமுகமாக 'பூமி தினம்' உலகெங்கும் கொண்டாடப்படவிருக்கின்றது. இளவரசர் சார்ள்ஸும் இதனை வலியுறுத்தவே 'டெலி' படம் ஒன்றைத் தயாரித்து வருகின்றார்.

கழிவுப் பொருட்களாலும் பூமி மாசடைகின்றது. வளிமண்டலத்தைப் பாதிக்கும் நச்சுவாயு பரவ இப்பொருட்களும் ஒரு காரணம் என்று கண்டறியப்பட்டுள்ளது.

ஆகவே பூமி சுத்திகரிக்கப்படவேண்டும். இப்பணியில் எதிர்வரும் 22ஆம் திகதி உலக நாடுகள் அனைத்திலும் அந்தந்த நாட்டு அரசுகள் இயக்கங்களை நடத்த ஏற்பாடுகள் செய்து வருகின்றன.

**எவரெஸ்ட்டில் சுத்திகரிப்பு**

உலகின் உயர்ந்த சிகரம் எவரெஸ்ட். அதன் உச்சியை பல மலையேறும் கோஷ்டிகள் எட்டிப்பிடித்துள்ளன.

இப்போது ஒரு மலையேறும் கோஷ்டி எவரெஸ்ட் உச்சியை நோக்கி சென்று கொண்டு இருக்கிறது.


இந்தக் கோஷ்டியில் அமெரிக்கா, சீனா, சோவியத் யூனியன் ஆகிய நாடுகளைச் சேர்ந்த மலையேறும் நிபுணர்கள் இடம்பெற்று உள்ளனர்.

இக்கோஷ்டியின் நோக்கம் எவரெஸ்டின் உச்சியை சென்றடைவது அல்ல!

இதுகாலவரை எவரெஸ்ட் உச்சிக்குச் சென்ற மலையேறும் கோஷ்டிகள், உச்சியில் கொட்டிவிட்டு வந்த கழிவுப்பொருட்களை அகற்றி உச்சியை சுத்தம் செய்வதே இக்கோஷ்டியின் நோக்கமாகும்.

இம்மாதம் 22 ஆம் திகதி இக்கோஷ்டியினர் எவரெஸ்ட் உச்சியைச் சுத்திகரிக்கும் பணியைத் தொடங்குவர்.

ஆகவே பூமியைச் சுத்திகரிக்கும் பணி, எவரெஸ்ட் உச்சியில் ஆரம்பமாகிறது.



சுழலும் உலகம்

என்று கூறுவது பொருத்தமாக இருக்கும் அல்லவா!

**பூமியைச் சுத்திகரிப்பது எப்படி?**

குப்பைகூளங்களைக் கூட்டி எரிப்பது மட்டும் பூமியைச் சுத்திகரிக்கும் பணியாகி விடுமா?

பூமியின் 'வாழ் நாளை'ப் பாதிக்கக்கூடும் என்று கருதப்படும் பொருட்களின் உற்பத்தியைக் கட்டுப்படுத்தவும் திட்டம் தீட்டப்பட்டுள்ளது.

புகை கக்கிக்கொண்டு செல்லும் கார்கள் மற்றும் மோட்டார் வாகனங்களால் காற்று மண்டலம் அசுத்தமடைகின்றது.

வீதி ஓரங்களில் பாவித்த டோர்ச் லைட் பட்டரிகளை எறிகிறோம்! பொலிதின் பைகளை வீசுகிறோம். உடைந்த வெற்றுப்போத்தல்களை எறிந்து விடுகிறோம்.

இவை எல்லாம் சுற்றாடலை வெகுவாகப் பாதிக்கின்றன.

1970 இல் முதலாவது 'பூமி தினம்' கொண்டாடப்பட்டபோது, அமெரிக்காவில் மாணவர்கள் புகை விட்டுச் சென்ற கார் ஒன்றை நிலத்தில் கிடங்கு ஒன்றை வெட்டி அதனுள் போட்டு புதைத்து விட்டார்கள்.

> 'பூமி தினம்' இம்மாதம் 22ஆம் திகதி உலகம் முழுவதும் அனுஷ்டிக்கப்பட உள்ளது.
>
> 'பூமி'யை அழிவில் இருந்து காப்பாற்ற வேண்டும் என்பதை வலியுறுத்தவே இத்தினத்தை உலக சுற்றாடல் பாதுகாப்புச் சம்மேளனம் ஒழுங்கு செய்துள்ளது.
>
> இக்கட்டுரையில் இது பற்றிய விவரங்கள் தொகுத்துத் தரப்பட்டுள்ளது.

வீதி ஓரத்தில் குவிக்கப்பட்ட குப்பைகளை அள்ளிக் கொண்டுபோய் அந்த ஊர் நீதிமன்றத்தின் வாசலில் வைத்து தங்கள் எதிர்ப்பைத் தெரிவித்தனர்.

பிளாஸ்டிக் கொள்கலன்களில் வரும் பொருள்களைப் பாவித்த பின்னர், வெற்றுக் கொள்கலன்கள் தூக்கி எறியப்படுகின்றன.

அப்படித் தூக்கி எறியாமல் அதனை மீண்டும் வேறு ஒரு பொருளைத் தயாரிக்கத் (Re Cycle) பயன்படுத்த வேண்டும்.

மேலை நாடுகளில் உள்ள தொழில் நிறுவனங்கள் இப்படியான உற்பத்திகளில்தான் இப்போது நாட்டம் காட்டி வருகின்றன.

பாவிக்கப்பட்ட கடதாசித் துண்டுகளைச் சேகரித்து, அவற்றைக் கொண்டு மீண்டும் தயாரிக்கப்பட்ட கடதாசியைப் பாவிக்க அமெரிக்காவில் உள்ள சில நிறுவனங்கள் ஆரம்பித்துள்ளன.

கடதாசி உற்பத்திக்காக காடுகள் அழிக்கப்படுவதைத் தடுப்பதற்கு இந்த உத்தியை மேலைநாடுகள் கடைப்பிடிக்க ஆரம்பித்து உள்ளன.

பார்படோஸ் நாடு இந்த விஷயத்தில் இன்னொரு படி முன்னேறியுள்ளது.

போத்தல்களில் குளிர்பானம் மற்றும் திரவப் பதார்த்தங்களை அடைத்து விற்பனை செய்யும் நிறுவனங்கள் அவற்றைக் கடைக்காரர்களிடமிருந்து திரும்ப வாங்கி விடவேண்டும் என்று பார்படோஸ் அரசு உத்தரவு பிறப்பித்துள்ளது.

**- தீபன்ராஜா -**

போத்தல்களைத் திருப்பி வாங்காத விற்பனை முறைக்கு பார்படோஸ் அரசு தடை விதித்துள்ளது.

**முதலாவது 'பூமி தினம்'**

முதலாவது 'பூமி தினம்' 1970 ஆம் ஆண்டு ஏப்ரல் 22 ஆம் திகதி உலகில் அனுஷ்டிக்கப்பட்டது.

பிரதானமாக அமெரிக்காவில் இத்தினத்துக்கு அன்று முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது.

இயற்கை அன்னையின் கொடியின் கீழ் இரண்டு கோடிக்கு மேற்பட்ட அமெரிக்கர்கள் திரண்டு அழிவில் இருந்து பூமியைப் பாதுகாக்கும் வழிமுறைகளை உருவாக்கினர்.

காற்றைச் சுத்தமாக வைத்திருக்கும் சட்டம் அந்த ஆண்டில் தான் அமெரிக்காவில் கொண்டு வரப்பட்டது.

சுற்றாடல் பாதுகாப்பு நிறுவனம் ஒன்றும் அமெரிக்காவில் 1970 இல் தான் உருவானது.

'1970 பூமி தினம்' இயக்கத்தில் ஒரு தொண்டராக அமெரிக்க ஹவார்ட் பல்கலைக் கழக சட்ட மாணவனாக அப்போது இருந்த டென்னிஸ் ஹெய்ன்ஸ் சேர்ந்தார்.

**இரண்டாவது 'பூமி தினம்'**

1990 இல் இரண்டாவது 'பூமி தின' இயக்கம் பரந்த அளவில் கொண்டாட ஏற்பாடாகியுள்ளது.

இதற்காகச் சர்வதேச சபை ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

33 நாடுகள் இந்த அமைப்பில் அங்கம் வகிக்கின்றன.

முன்னாள் உலக வங்கித் தலைவர் றொபேர்ட் மக்நமரா, யுனெஸ்கோ இயக்குநர் நாயகம் பிரெட்ரிக்கோ மேயர் பொது நலவாய அமைப்பின் செயலாளர் நாயகம் ஸ்ரீதத் ரம்பால்,



எவரெஸ்ட் உச்சியில் டெலிவிஷன் படப்பிடிப்பாளர்

நோர்வே முன்னாள் பிரதமர் திருமதி குறோ ஹாலம் பிரண்ட்றலாண்ட் ஆகியோரும் இச்சபையில் இடம் பெற்றுள்ளனர்.

'1990 பூமி தினம்' இயக்கத்தின் சர்வதேச அமைப்பின் தலைவராகத் திரு. டென்னிஸ் ஹெய்ன்ஸ் இருக்கிறார்.

**ஐ.நா. வில் 'பூமி தின' வைபவம்**

பூமி தினத்தை ஒட்டிய வைபவம் வருகிற 22 ஆம் திகதி ஐ. நா. பொதுச்பைக் கூட்டத்தில் நடைபெற உள்ளது.

ஐக்கிய நாடுகள் சுற்றாடல் திட்டக்குழு இதனை ஒழுங்கு செய்கிறது.

இந்த நிகழ்ச்சியில் விண்வெளி வீரர்கள் பங்குபற்ற உள்ளனர்.

விண்வெளியில் சஞ்சரித்த சமயம் பூமி எப்படிக் காட்சியளித்தது, விண்வெளியில் சஞ்சரித்தபோது ஏற்பட்ட அனுபவங்களை அந்த வைபவத்தின் போது விண்வெளி வீரர்கள் விவரிப்பர்.

உலக சாரணர் பணியகமும் தனது 120 உறுப்பு நாடுகளுக்கு 'பூமி தினம்' இயக்கம் சம்பந்தமாகச் சுற்று நிருபம் ஒன்றை அனுப்பி வைத்து உள்ளது.

உலக சாரணர் சுற்றாடல் ஆண்டின் ஒரு பகுதியாகப் 'பூமி தினம்' நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளும்படி உலக சாரணர்கள் அழைக்கப்பட்டுள்ளனர்.

மலேசியாவைத் தலைமையாகக் கொண்டியங்கும் சர்வதேச பாவனையாளர் யூனியன், 'பூமி தினம்' இயக்கத்தில் பூரணமாகப் பங்குபற்றும்படி தனது 85 உறுப்பு நாடுகளை அழைத்துள்ளது.

**1990 பூமி தின இலட்சியம்**

இவ்வாண்டு 'பூமி தினம்' கொண்டாட்டம் பல நோக்கங்களைக் கொண்டு இருக்கிறது.

அவற்றில் முக்கியமானது, சுற்றாடல் பாதுகாப்பு இயக்கத்தை மேல் மட்டத்தவர்க்கு மட்டுமே உரியது என்ற எண்ணத்தைத் தவிர்த்து, உலகில் சகல இன, மத, கலாசார, பிற்படுத்தப்பட்ட மக்களும் பங்குபற்றக் கூடிய ஒன்றாக மாற்றவேண்டும் என்ற நோக்கமேயாகும்.

**நாம் செய்ய வேண்டியது என்ன?**

நாம் ஒவ்வொருவரும் 'பூமி தினம்' அன்று என்ன செய்யவேண்டும்?

வீட்டைச் சுற்றிச் சுத்தம் செய்யவேண்டும். உடைந்த போத்தல்கள், பழைய டோர்ச் பட்டரிகள் வெற்று பிளாஸ்டிக் கொள்கலன்கள், பழைய டயர்கள் வளவுகளில் குவிந்து கிடக்காமல் நாம் பார்த்துக் கொண்டால் போதும்.

மரங்களை அனாவசியமாக வெட்டுவதைத் தவிர்த்துக் கொள்ளவேண்டும். இடவசதியிருப்பின் புதிதாக மரங்களை நட்டு வைக்க வேண்டும்.

இப்படி நாம் ஒவ்வொருவரும் செயற்பட்டால் முதலில் வீடு, வளவு சுத்தமாகும். பின்னர் ஊர் சுத்தமாகும், தொடர்ந்து நாடு சுத்தமாகும்.

இறுதியில் பூமியே சுத்தமாகி விடாதா? ★

---

## கருத்துக் கலசம்

மயூரா

### சிறு குளங்கள் எமது வளங்கள்

நீர் உயர நெல் உயரும்

தண்ணீரின் அத்தியாவசியத்தை நான்கு சொற்களில் அற்புதமாக விளக்கும் வாசகம் இது.

நெல்வயலில், மற்றும் விவசாய விளை நிலத்தில் தண்ணீர் உயர்வதற்கு, நீர் நிலைகளில் தண்ணீர் வற்றாது தாராளமாய் பெருக வேண்டும். விசும்பு நீராம் மழை தப்பாது, சிறுக்காது தாராளமாகப் பெய்தால் மட்டுமே நதிகள், அருவிகள், ஓடைகள், குளங் ளில் தண்ணீர் தாராளமாக ஊற்றெடுக்கும். பெய்யும் மழையை வீணாக்காமல் விவசாயத்துக்குப் பயன்படுத்த உதவுபவை குளங்கள், பொய்கைகள் போன்ற நீர்த்தேக்கங்களே.

மலையும் நதியும் இல்லாத வெறும் வானம் பார்த்த (யாழ்ப்பாணக் குடாநாடு போன்ற) பூமிகளுக்கு, தண்ணீர் வளம் நல்குபவை குளங்களே. அதனால் தான் நமது முன்னோர் ஊருக்கு ஊர் குளங்களையும், கேணிகளையும் தோண்டினார்கள்.

பெய்யும் மழைத்துளி ஒவ்வொன்றையும், அது கடலில் சென்று உப்புக் கரைசலாக கரைந்து விடாமல் தடுத்து, தேக்கி வைத்து தேவையான நேரத்தில் உதவி, நாட்டு வளத்துக்கு உதவும் பரோபகாரிகள் அந்தக் குளங்களும், கேணிகளுமே,

ஆனால் எமது பிரதேசத்தில் நம்முன்னோர் பாடுபட்டுத் தோண்டிய குளங்கள், கட்டிய கேணிகள் பலவும், இப்போது தூர்ந்து மண் மேடுகளாக மாறிவிட்டன. புதிதாகக் குளங்களைத் தோண்டி, விவசாயத்தைப் பெருக்க வேண்டிய மக்கள், ஏற்கனவே முன்னோர் தோண்டித் தந்த குளங்களை பராமரித்து பேணிக்காத்துப் பயன்படுத்துவதில் அக்கறை கொள்ளாதிருக்கும் அவலம் தொடர்கிறதே! நமது பகுதியில் விவசாயம் என்னாவது அது எப்படிப் பெருகுவதோ?

எல்லாவற்றையும் அரசாங்கம் செய்து தரும் என்று எதிர்பார்த்து இலவு காத்த கிளிகளாக நாம் மாறுவதா? எமது பகுதியில் உள்ள உள்ளூராட்சி சபை கிராம முன்னேற்றச் சங்கங்கள், சனசமூக நிலையங்கள் இதில் கவனம் செலுத்தல் ஆகாதா? நினைத்தால், மனம் வைத்தால், சிரமதான அடிப்படையில் பணிசெய்து குளங்களைத் தூரவிடாமல் பராமரிக்கலாமே!

சிறுதுளி பெரு வெள்ளம். ஊருக்கு ஊர் உள்ள சிறு குளங்கள் எமது பிரதேசத்தின் பெரும் நீர் வளங்கள். இதனை மறந்தால் இங்கு விவசாயம் பெருக்காது; சிறக்கவும் மாட்டாது. சிறு குளங்களை வருடாந்தம் முறைப்படி பராமரித்தால் அவை தூர்ந்துபோகும் அபாயத்தை அகற்றலாம்.

அதனைச் செய்ய நாம் மறந்தால், யு. எஸ். எயிட்ஸ் போன்ற வெளிநாட்டு நிறுவனங்களின் உதவியுடன் சிறு குளங்களைப் புனரமைக்க வேண்டிய நிலை உருவாகி உள்ளது. இல்லையேல் மாவட்டத்துக்கு ஒரு பாரிய புதிய குளத்தைப் புதிதாகத் தோண்டுவிக்க நிதிஉதவி நிறுவனங்களின் உதவியைப் பயன்படுத்த வாய்ப்பு ஏற்பட்டிருக்கும்.

ஒரு நாட்டுக்கு வாழ்வும் சிறப்பும் அந்த நாட்டு மண்-நிலம். நிலத்துக்கு வளம் தருவது நீர். இதனை மறந்தோமாகில் வாழ்வுக்குப் பதில் தாழ்வையே எதிர்நோக்க நேரிடும். ★

---

# குந்தியின் கதை கூறுவது என்ன?

இலக்கியம்

மணமாகாத குந்தியை துர்வாச முனிவர் சந்திக்கிறார்:

நீ இஷ்டப்பட்ட தெய்வத்தை நினைத்து, நான் சொல்லிக்கொடுத்துள்ள மந்திரத்தை ஜெபித்தால், அந்தத் தெய்வாம்சம் உள்ள பிள்ளை உனக்குப் பிறக்கும் என்று துர்வாசர் கூறுகிறார்.

உடனே அது நிஜம்தானா என்று பரீட்சிக்க விரும்புகிறாள் குந்தி.

உடனே சூரியபகவானை நினைத்துக்கொண்டு மந்திரத்தை ஜெபிக்க, கர்ணன் அவளுக்கு மகனாகப் பிறக்கிறான்.

ஆனால் மணமாகாத பெண் குழந்தையை வைத்துக்கொள்ள முடியுமா? அதனால் குழந்தையை ஒரு பெட்டியில் வைத்து அதைக் கங்கையில் விடுகிறாள்.

அது தேரோட்டி அதிரதன் கையில் அகப்பட, அவன் கர்ணனை வளர்க்கிறான்.

வீரத்திலும் கொடையிலும் நன்றியுணர்ச்சியிலும் மிகச் சிறந்து விளங்குகிறான் கர்ணன்.

இருந்தும் எத்தனையோ சம்பவங்களில் அப்பா, அம்மா தெரியாதவன் என்று அவமானப்படுத்தப்படுகிறான்.

குந்தி செய்த தவறு காரணமாக இவன் தலைகுனிய வேண்டி இருக்கிறது.

பாரத யுத்தம் ஆரம்பிக்கும் முன் அவன் தன் மகன் தான் என்றும், அதனால் அவன் பாண்டவர்களுடன் சேர வேண்டும் என்றும் குந்தி சொல்கிறாள்.

ஆனால் துரியோதனனுக்கு நன்றிக்கடன்பட்ட அவன் இணங்குவானா? இணங்க மறுக்கிறான்.

ஆனால் குந்தியை ஒன்று கேட்டுக்கொள்கிறான்.

'நான் யுத்தக்களத்தில் உயிர் இழந்தால், நீதான் என் தாயார் என்று பகிரங்கமாகச் சொல்லிக்கொள்ள வேண்டும்'— என்று கேட்கிறான் கர்ணன்.

குந்தியின் கதை இரண்டு முக்கிய உண்மைகளைத் தெரிவிக்கிறது.

ஒன்று — தகுதியில்லாமல் ஒரு பொருளை அடைந்தால் அந்தப் பொருளுக்கும் கேடு; அதை அடைந்தவர்களுக்கும் கேடு. துர்வாசர் சொல்லிக்கொடுத்த மந்திரத்தைச் சொல்லத் தனக்குத் தகுதியில்லை என்பதைக் குந்தி நினைத்துப்பார்க்கவில்லை. அதனால் அவளும் கஷ்டப்பட்டாள், கர்ணனும் கஷ்டப்பட்டான்.

இரண்டாவது — தவறு செய்வதில் ஆணும் பெண்ணும் ஒன்று என்று நினைப்பது தவறு.

ஆண் தவறு செய்தால், அது அவன் ஆயுளோடு மறைகிறது.

பெண் தவறு செய்தால், அது அடுத்த தலைமுறையையும் பாதிக்கிறது.

அதனால்தான் தவறு செய்யும் விதத்தில், ஆண்களைவிடப் பெண்கள் விழிப்பாக இருக்கவேண்டும்.

இதுவே குந்தி சொல்லித் தந்த பாடம். ★

**- புலவர் கீரன் -**

---

## ரமழான் சிந்தனை



"சுவர்க்கத் தலைவாசல்களில் மேலான தலைவாசல் தந்தையாவார். நீ விரும்பினால் அதைப் பாதுகாத்துக் கொள். இன்றேல், அதை இழந்துவிடு" என்று அருமை நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:-

"நிச்சயமாக ஒருவன் தன் பிள்ளைகளுக்கு நல் ஒழுக்கத்தைப் போதிப்பதானது ஒரு மரக்கால் தானியத்தைத் தர்மஞ் செய்வதைவிட நன்மையானதாகும்."

"ஒருவன் தன் தந்தை காலமான பிறகு அவருடைய நண்பரோடு நட்புடன் பழகுதல் பெற்றோருக்குச் செய்யும் நன்மைகளில் சிறந்ததாகும்" என பெருமானார் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

மேலும் பெருமானார் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:- "ஒரு தந்தை தன் குழந்தைகளுக்கு நற்குணத்தைக் கற்றுக் கொடுப்பதைக் காட்டிலும் மிகச் சிறந்த ஒன்றை அக் குழந்தைக்குக் கொடுத்து விட முடியாது." ★


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அவள் ஒரு சுமைதாங்கி



நேரமோ பத்தரை. எல்லோரும் நித்திரை. அவள் மட்டும் உறங்கவில்லை. உறங்கமுடியவில்லை. அவளின் உள்ளம் மட்டும் அறிந்த உண்மை. அவள் வாழ்க்கை அவளுக்கு மட்டும் தெரிந்த அந்தரங்க இரகசியம்.

அவளால் மட்டும் அனுபவிக்க முடியாத வேதனை. சுருங்கக் கூறின் அவள் ஒரு சுமைதாங்கி. எல்லாவற்றையும் சுமந்த அந்த நெஞ்சின் வேதனை தாங்காமல் அவள் விட்ட பெருமூச்சின் வெப்பத்தில் அவளின் அறை மூழ்கிக் கிடந்தது. படுக்கையோடு படுக்கையாக அவள் உடல் ஒட்டிக்கிடந்தது.

வாழ்க்கையை வெறுத்த எத்தனையோ பேர்களில் அவளும் ஒருத்தி. இந்த நிலைக்கு காரணம் யார்?

உலகத்தை விட்டு ஓடிக் கொண்டிருந்த அவளை டாக்டர் சிவராசா தடுத்து நிறுத்தி இன்பப் பாதையின் வாயிலைக் காட்டினார்.

அத்துடன் நின்றிருந்தால் கதை முடிந்திருக்கும். ப்போ எந்த இடத்திலிருந்து அழைத்து வந்தாரோ அந்த இடத்திற்கு மீண்டும் கொண்டுபோய் விட்டுவிட்டு டாக்டர் சிவா சென்றுவிட்டார்.

அவள் அவரை எதிர்பாராதவிதமாகச் சந்திக்க நேர்ந்தது. சுய நினைவற்ற நிலையில் நோயாளியாக அங்கு எடுத்துச் செல்லப்பட்டாள். மயக்கம் ஓரளவுக்கு தெளிந்து நினைவு திரும்பிக் கொண்டிருக்கும் நிலையில் அந்த மருத்துவ மனையில் அவள் டாக்டர் சிவராசாவை முதன் முறையாகக் கண்டாள்.

வெள்ளை உடை, கையில் 'ஸ்ரெதஸ்கோப்புடன்' புன்முறுவல் கொண்ட அவரின் தோற்றம், அவளின் உள்ளக் கண்ணாடியில் நிலையாக நிலைத்துக் கொண்டது.

ஓர் இரவு முழுவதும் அவளின் உயிரை மீட்கப் போராடினார். அவளுக்கு புரியாத புதிராக இருந்தது. அவர் செய்தது வெறும் கடமையானால் மறு நாளும் அதே அக்கறை.

''நேர்ஸ், அந்த நோயாளியை நன்கு கவனித்தாயா?'' ஏன் அந்தக் கேள்வி? அந்தக் கேள்வி தான் அவளின் காதில் தேன் துளிகளாகச் சொரிந்தன.

'நடக்க முடியவில்லையே டாக்டர்' என்றாள் வாசுகி.

'நடந்து பாருங்கள் நான் விழாமல் பிடித்துக்கொள்கிறேன்' வாசுகி நடக்க முயன்றாள். ஆனா அவளால் உதவியின்றி நடக்க முடியவில்லை. அவளை விழாது டாக்டர் பிடித்துக் கொண்டார். ஆனால் இன்று வாழ்வில் நடக்க முடியாமல் விழுந்துவிட்ட அவளைத் தாங்கிக் கொள்ள அவர் இல்லையே.

நேரம் நகர்ந்து கொண்டேயிருக்கின்றது. நினைவும் தொடர்ந்து கொண்டே இருக்கிறது. கண்ணீரும் பாய்ந்து கொண்டேயிருக்கின்றது. அதே மருத்துவ மனையில் அவள் இப்போது வெளி நோயாளி.

சுவர் மணிக்கூடு பத்துத் தரம் அடித்தது. நோயாளிகள் சென்றபின் இருவரும் பேசத் தொடங்குகின்றனர். அவள் இடைஇடையே மயக்கம் அடையும் காரணத்தை அறிய விரும்பிய டாக்டர் பல கேள்விகளைக் கேட்டார்

'உங்களுக்கு எப்படியான கதைகள் பிடிக்கும்?'

'பழந் தமிழரின் வீரத்தையும், தியாகத்தையும், கொடையையும் எடுத்துக் காட்டும் கதைகள்'

'ஏன் 'றோமியோ யூலியற்' ஆங்கிலக் காதல் ஓவியம் பிடிக்காதோ?'

'டாக்டர் நீங்கள் என்னிடம் என்னத்தை அறிய விரும்புகிறீர்கள் என்பது எனக்குத் தெரிகிறது. என் வியாதிக்கு காரணம் என்ன? காதல் தோல்வியாக இருந்திருக்கும் என்று எண்ணுகிறீர்கள். அப்படித் தானே? என்னுடைய வயதோ என்னவோ?' என்று கூறியவாறு மயங்கி வீழ்ந்தாள்.

அவளைப் பழைய நிலைக்கு கொண்டு வருவதற்கு அவன் பெரும் முயற்சி எடுக்க வேண்டியதாயிற்று. அவள் துன்பங்களைத் தாங்கி முறிந்து போன சுற்தாண் என்பது மட்டும் அவருக்கு புரியக் கூடியதாயிருந்தது.

இருவரும் அடிக்கடி சந்தித்து வந்தார்கள். அவள் துன்பப் படும் பொழுது,

'வாசுகி, துன்பம் உனக்கு மட்டும்தான் என்று நினைக்க வேண்டாம். நான் ஓர் அநாதை. எனது வாழ்வில் பல கஷ்டங்களை அனுபவித்துள்ளேன். இந்த சமுதாயத்திலே ஆண்களுக்கு அழ உரிமையில்லையே' என்றார் டாக்டர்.

அன்று பெரதேனியா மருத்துவ பீடம் சுகாதார இலாகாவோடு இணைந்து நடாத்திய பொருட்காட்சிக்கு இருவரும் சென்றார்கள். குழந்தைகள் கண்காட்சி சிறப்பு நிகழ்ச்சிகளில் ஒன்றாக அமைந்தது. டாக்டர் சிவராசா மத்தியட்சகர்களில் ஒருவராகக் கடமையாற்றினார்.

'இருபது வயசுக் குழந்தைக்கும் பரிசுண்டா?' என்று வாசுகி கேட்டாள்.

ஆம் உண்டு, பற்களைப் பிடுங்கிவிட்டு தொட்டிலில் படுத்துக் கொள்ள வேண்டும். அது ஒன்றுதான் நிபந்தனை' என்று சிரிப்பை அடக்கியபடி கூறினார் சிவா. அனைவரும் சிரித்தனர்.

பொருட்காட்சி முடிவுற்றதும் இருவரும் காரில் சென்றனர். இறங்குமிடம் வந்துவிட்டது. டாக்டர்

**- கோண்டாவிலூர் பூ. க. இராசரத்தினம் -**

சிவா, சுகாதார விழாவில் தனக்குப்போட்ட மாலையை வாசுகியிடம் கொடுத்தார்.

ஒரு ஆடவன் ஒரு பெண்ணிடம் ஒரு மாலையைக் கொடுத்தால் அதற்கு என்ன பொருள்? அவள் மனம் சிலிர்த்துக் குளிர்ந்தது. வேறொரு நாள் இனிமையான மாலை நேரம் டாக்டர் சிவாவின் அறைக்குள் செல்கிறாள் வாசுகி. அங்கு டாக்டர் இல்லை. அறையைப் பார்வையிடுகிறாள். சுவாமிப் படங்களுடன் காந்தியின் படமும் தொங்குகிறது. காலடி ஓசை கேட்கிறது. டாக்டர் வருகிறார்.

கையில் இரண்டு தாமரை மலர்கள். அவளின் புன்முறுவல் அவளை மேலும் அழகு படுத்துகிறது. புன்முறுவல் சிரிப்பாக மலர்கிறது.

'ஏன் சிரிப்பு, நீ வருவாயே காட்டலாம் எனக் குழந்தை வாட்டிலிருந்த மலரை எடுத்து வந்தேன்'.

'இது என்ன விளையாட்டு, நான் தாமரை மலரைப் பார்த்ததில்லையா?'

'இதோ, பார்த்தாயா எவ்வளவு மென்மையான இதழ்கள்? இவற்றைத் தாங்குவதற்கு வன்மையான தண்டு. இல்லாவிட்டால் 'இந்த இதழ்களின் கதி என்னவாகும்?'

'போங்கள் டாக்டர், இன்னும் நான் நோயாளி என்ற நினைப்பு போகவில்லை உங்களுக்கு' அவள் தொடர முடியவில்லை. டாக்டருக்கு அழைப்பு வந்தது. விடை பெற்றுச் செல்கிறார்.

'வாசுகி நீ அநாதையில்லையெடி. உன்னை அழகுபடுத்த, துணையாக நிற்க ஒருவர் இருக்கிறாரடி' என்று அவள் உள்ளம் துள்ளியது.

புரண்டு படுத்துக் கொள்கிறாள். கண்ணில் நிறைந்த நீர் வழிந்து காதுகளை நனைக்கின்றது. இறைவா நடந்தவையெல்லாம் கனவாக இருக்கக் கூடாதா என்று எண்ணுகிறாள். பின்பு மேசை விளக்கின் ஆணியை அமத்துகிறாள்.

இரண்டாவது சினிமாக் காட்சி பார்த்துச் சென்று கொண்டிருப்பவர்களின் பேச்சுக் கேட்கிறது. சென்ற பொங்கல் ஞாபகம் அவளுக்கு வருகிறது. தான் டாக்டர் சிவாவுடன் பேசியதை நினைவு கூர்ந்து பார்த்தாள்.

தான் வரைந்த பொங்கல் அட்டையையும் தான் எழுதிய சிறு கதைக்குக் கிடைத்த பரிசையும் சிவாவிடம் அவள் கொடுத்த போது,

'ஒரேயடியாகப் பல இன்பங்களைச் சொல்லி என்னைத் திணறவைக்காதே, வாசுகி. உன்னைத் திருமணம் செய்து வாழப் போகிறவர் அதிர்ஷ்டசாலி' என்றார் டாக்டர் சிவா.

'டாக்டர், நான் வாழமுடியாது. எனக்கு வாழ்வு வேண்டாம்' என்று அழுது கொண்டே கூறினாள்.

'வாசுகி நீ பிறந்த குலத்தையிட்டுக் கவலைப்படவேண்டாம். அழுக்கடைந்த சிற்பிக்குள் தான் அருமையான முத்துக்கள். ஒரு சிறு துன்பச் சொல்லைக்கூட தாங்கிக் கொள்ள முடியாமல் இருக்கிறாயே. இடுக்கண் வருங்கால் நகுக, என்று தான் வள்ளுவர் சொன்னாரே தவிர, நகருக என்றா சொன்னார்?'

'வள்ளுவனுக்கே வேறு வேலை கிடையாது. அவர் மட்டும் தனது மனைவி வாசுகி இறந்தபோது 'என் துஞ்சும் கண்கள் இனி' என்று பாடவில்லையா?' என்றாள் வாசுகி.

மாதங்கள் மறைகின்றன. தேர்வு நெருங்குகிறது. அவருக்காகப் படிக்கிறாள். அடிக்கடி சந்திக்க முடியாமல் கடமைகள் தடை போடுகின்றன. தேர்வு நாட்கள் நெருங்கின. அவரிடம் ஆசி பெற விரும்பினாள் சென்றாள்.

'பரீட்சைக்குப் படிக்கும் நேரத்திலும் அழகாகச் சோடித்து வருகிறாயே. கண்ணாடிக்கு முன் மினைக்கெட்ட நேரத்திலே இரண்டு மாதிரி வினாக்களுக்கு விடை தேடியிருக்கலாமே? அழகு இராணிப் போட்டியில் பங்கு கொள்ளலாமே? என்று சிரித்துக் கொண்டே கூறினார்.

'ஆம் போட்டியில் கலக்கப் போகிறேன்' என்று கூறிக் கொண்டு ஓடினாள்.

நாட்கள் உருண்டோடின.

பரீட்சை முடிவுகள் வெளிவந்தன. வாசுகி சித்தியடைந்தாள்.

'வாசுகி, அடுத்தபடியாக என்ன செய்யப்போகிறாய்? சமூக சேவையா அல்லது...?'

'சுயநலம் பிடித்த வாழ்வு எனக்கு வேண்டாம். மற்றவர்களுக்காக வாழப்போகின்றேன். அதற்கு உங்கள் ஆசி தேவை'

அம்மா, பொது நல ஜோதியே! எந்தத் திரியும் முதலில் எண்ணெயில் மூழ்கிய பிறகுதான் ஒளிகொடுக்க முடியும். வரட்டுத்திரி விரைவில் அணைந்துவிடுவதோடு புகை நாற்றத்தையும் கொடுத்து மற்றவர்களையும் தொல்லைப்படுத்தும். ஆகவே யோசித்து முடிவு செய்! என்று டாக்டர் சிவா கூறிவிட்டு அமைதியாக இருந்தார்.

'வாசுகி, நான் என்ன சொன்னாலும் கேட்பாயா'

'இது என்ன கேள்வி இந்த உயிர் நீங்கள் காப்பாற்றியது தானே. கட்டளையிடுங்கள் செய்கிறேன்'

ஒரு பேப்பரை எடுத்து ஏதோ எழுதி அவளிடம் டாக்டர் கொடுத்தார்.

அவள் உள்ளத்தில் ஓராயிரம் இன்பப் பூக்கள் மலர்ந்தன. யாரோ ஊஞ்சலில் வைத்து வேகமாக ஆட்டியது போலிருந்தது. மேலே மேலே போவதான உணர்வு ஏற்பட்டது. தேவலோகத்திலிருந்து பன்னீர் தெளிக்கப்பட்டது போல்தோன்றியது. மெல்லக் கண்விழித்தாள். எதிரே தண்ணீர் ரம்ளருடன் டாக்டர் சிவா நின்றார்.

'இது என்ன. வாசுகி விழுந்துவிட்டாய், விருப்பமில்லையென்றால் வேண்டாம். உன்மனம் புண்பட எழுதியிருந்தால் மன்னித்துவிடு'

'இல்லை, இல்லை, அப்படிச் சொல்லாதீர்கள். துன்பத்தையே தாங்கித் தாங்கி, மரத்துப்போன என் இதயத்தால் இந்த இன்பத்தைத் தாங்க இயலவில்லை. நான் பெரிய அதிர்ஷ்டசாலி' என்று கூறிக் கண்களை முடிக் கொள்ளுகிறாள்

'நான் குறுகியகால இடமாற்றம் பெற்று போதனா வைத்தியசாலைக்குப் போகிறேன். எனது பிறந்தமண் என்னை அழைக்கின்றது'

வாசுகி திகிலடைந்தாள். உள்ளத்தை உறுதிப்படுத்தினாள்.

'வாசுகி, என்னுடைய காலணிகள் எங்கே? இங்கே தானே வைத்தேன்'

வாசுகி, காலணிகளை எடுத்துக் கொடுத்துவிட்டு அவன் பாதங்களையே பார்த்தபடி நின்றாள். பின்பு பாதங்களின்மேல் தன் இதழ்களைப் பதித்தாள். பின்பு எழுந்தாள்.

'வாசுகி, எனக்காக இவ்வளவு சிறப்பு ஏன்? உங்களுடைய நெற்றியிலிட்ட திலகம் அழிந்துவிட்டதே'

அவருடைய கால்களில் குங்குமம் நல்ல சிவப்பாக இருந்தது. சிறிதுநேரம் இருவரும் பேசவில்லை.

'வாசுகி, அச்சப்படுகிறாயா? நான் என்ன போர்முனைக்கா போகிறேன், மருத்துவப்பணி தானே புரியப்போகிறேன் அதுவும் என் இனத்துக்கு. நம்ம நாட்டிலேயே படித்து பட்டம்பெற்ற பல டாக்டர்கள் பல காரணங்களுக்காக நாட்டைவிட்டு ஓடிவிட்டார்கள். மூன்று மாதங்கள் தானே. விரைவில் வந்துவிடுவேன். நான் போர்முனைக்குச் செல்லவில்லையே' என்று கூறி மீண்டும் தேற்றினார். அவள் சமாளித்துக்கொள்கிறாள்.

டாக்டர் சிவராசா பணி புரிந்துகொண்டிருந்த மருத்துவமனை தாக்குதலுக்குள்ளாகியது. சன்னங்கள் டாக்டரின் உடலைத் துளைத்தன. டாக்டர் சிவராசா இறக்கும் பொழுது, வாசுகி, வாசுகி' என்று கத்திய சத்தம் காற்றோடு மறைந்தது.

தனது மக்களுக்கு சேவை செய்யச் சென்றவன் விண்ணுலகம் எய்துவிட்டார். அவள் இன்னும் அழுது கொண்டேயிருக்கிறாளே.

அவள் அநாதை இல்லத்தைச் சேர்ந்து சேவை செய்யத் தொடங்கினாள். அந்த வாடாமுகங்களைக் கண்டு ஆறுதல் அடைகிறாள்.

(யாவும் கற்பனை)

# தமிழ் மரபைப் பேணிவரும் கிராமப் புற மக்கள்

ஒரு மாதத்திற்கு முன்னர் பாவேந்தருடைய கவிதைத் தொகுப்பு நூலொன்றைப் படிக்க நேரிட்டது. கீழ்க்காணும் தெவிட்டாத வரிகள் எனது நெஞ்சில் எண்ணங்கள் சிலவற்றைத் தூண்டிவிட்டதோடு சில பாரிய தாக்கங்களையும் ஏற்படுத்திவிட்டன. அவற்றின் வெளிப்பாடே இக்கட்டுரையாகும்.

'உலகியலின் அடங்கலுக்கும்
துறைதோறும் நூற்கள்
ஒருத்தர் தயை இல்லாமல்
ஊரறியும் தமிழில்
சலசலென எவ்விடத்தும்
பாய்ச்சிவிட வேண்டும்'—

என்னும் பாவேந்தரின் எதிர்பார்ப்பு, தமிழை நினைக்குந்தோறும் என் நினைவில் பளிச்சிட்டுக் கொண்டிருக்கிறது.

தமிழில் அகமுண்டு, புறமுண்டு ஆன்ற தமிழ்ப்பண்பாடும் அழகின் சிரிப்பாக விளங்குகின்ற அருங்காப்பியங்களுமுண்டு; ஆன்பாலும் தேன்பாகும் வேர்ப்பலாவின் விழுச்சுளையும்போல் நித்தம் தித்திக்கும் முத்தமிழின் பத்திப்பனுவல்கள் பலவுண்டு; இவைபோன்ற பண்டைப் பனுவல்கள் பலவுண்ட கடல்கோளும் உண்டு!

அனலுக்கும் புனலுக்கும் உணவாகி, ஒழிந்தனவும் அழிந்தனவும்எண்ணிறந்தன. இவற்றுக்கும் அயலாரின் கழுகுப் பார்வைக்கும் தப்பி வாழ்ந்த தண்டமிழின் செல்வங்கள் எண்ணிக்கை அன்புத் தேன் வருக்கைபோல் இனிக்கும். ஆனாலும் நல்ல தமிழுக்கு நலிவும் நசிவும் தோன்றியதே என்பதனை எண்ணும்தோறும் நம்மனம் தாங்கொணாத் துயர் கொண்டு நலிவுறுகிறது.

இன்னலும் இடரும் ஏற்ற தமிழ் குற்றுயிராய்க் குறை உயிராய்ச் சில ஆண்டுகள் இருந்து, இன்று ரோஷமிக்க நல்லதமிழாய் வெல்லமென இனிக்கும் வல்ல தமிழாய் விளங்கும் முயற்சியில் ஈடுபட்டுக்கொண்டிருக்கிறது. ஆம், நம் அன்னைபெற்ற அருஞ் சிறப்பை பாவேந்தர் விழைந்த 'ஊரறியும்' சிறப்பைப் பல்வகையிற் பகுத்துக் காணுதல் வேண்டும்.

கற்றவர்கள் என்று சொல்லப்படும் சிலர் அயன்மொழியின்மீது ஆராக்காதல் கொண்டு, பேசும்போதெல்லாம் வலிந்து பிறமொழிச் சொற்களை மட்டுமின்றிப் பிறமொழித்தொடர்களையே இணைத்துப் பேசுவதைக் கேட்குந்தோறும் மனம் வேதனைப்படுகிறது.

அவ்வாறு பேசுவது பெருமை என்றும் மதிப்பென்றும் தவறாக எண்ணுகிறார்கள் இவர்கள். இவர்களிடம் தமிழ்க்கலையைக் காண்பதற்கு வழியில்லை; மாறாகத் தமிழ்க்கொலையினையே காணமுடிகிறது.

தாம் அணிந்துள்ள ஆடையிலே வீதியிலுள்ள சேறுபட்டுவிடுமென்றால் உயிர்போவது போல் பதற்றமுறும் பலர், பண்பாட்டின் பெட்டகமாம் தொட்டில்தொட்டுத் தொடர்ந்துவரும் மொழியை – நம் விழியை – மட்டும் கலப்போடு கறைபடியவிட்டு வழங்குகின்றனரே என்று நாம் இனியும் சிந்தித்துச் செயற்படாது இருக்கக்கூடாது.

கண்ணாடி முன்நின்று ஆகக் குறைந்தது கால்மணியளவு நேரமாயினும் நாளை உதிரப்போகும் தலைமயிரை நறுமண நெய்இட்டுச் சுருள்படியுமாறு அணிபெற ஒப்பனை செய்வதிற்கவனஞ் செலுத்தும் இவர்கள் செந்தமிழின் தூய்மைதனைக் காக்க வாழ்நாளில் ஒரு மணித் துளியையேனும் ஒதுக்கிடாரோ?

வறுமையுடையவனுக்குப் பெருஞ்செல்வம் கிடைத்தமை போல், தாய்முகங்கண்ட தளிர்முகச் செல்வம் போல் கிராமப்புறத்திலே வாழ்கின்ற எளியமக்கள் பேசுகின்ற நல்ல தமிழ், தமிழ் ஆர்வலர்க்கு நெஞ்சத்தில் நிறைவுதருகின்றது.

அம்மக்கள் பேச்சில் பிறமொழிச்சொற்கள் தமிழ்மையுடன், தண்ணீர் பட்டபாடாகப் பயின்று வழங்கும் 'Towel' என்னும் ஆங்கிலச் சொல்லானது 'துவாலை' என்றும், 'Heaing' 'ஈரங்கி' என்றும், 'Form' 'பாரமாகவும்' 'will' 'உயில்' என்றும், 'Lantern' 'விளாந்தர்' என்றும், தமிழோடு தமிழாய் இணைந்துவிட்டன. இவர்களே தமிழ் மரபைப்பேணும் தகைமையில் சான்றோர் என்று கூறினால் மிகையாகாது.

நகர்வாழுநர் பரபரப்பான வாழ்க்கை நடத்துபவர். அவர்களோ பெரும்பாலும் மொழியின் சிறப்பை உணரார். அவர்களைச் சிறப்புச் சொற்களை அறிந்து உபயோகிக்கும் ஆற்றலோ நினைவாற்றலோ அற்றவர் என்றே கூறிவிடலாம். ஆனால் கிராமத்தில் வாழ்ந்துவரும் தமிழர் இன்னும் பல சிறப்புச்சொற்களையும் மரபுச்சொற்களையும் மறவாது போற்றி உபயோகித்து வருகின்றனர்.

''அணில்பிள்ளை, கிளிப்பிள்ளை, எருமைக்கன்று, நெல்நாற்று, பனைவடலி, கோழிக்குஞ்சு'' என்று பிஞ்சுப்பெயர்களைப் பேசும் போது 'தென்னங்குரும்பை, மாவடு, பலாமுசு, வாழைக் கச்சல்' என்றும் வழங்குவர்.

இதனைச் சிறிது ஆழமாக நோக்கும்போது கிராமத்தவர்களுக்கு நகரத்தவர்களைக் காட்டிலும் ஓய்வும் அமைதியும் ஓரளவு மிகுதியாக இருப்பதினாலும் பிறமொழிக் கலப்புக்கான வாய்ப்புக்கள் குறைந்து இருப்பதினாலுமே அவர்களால் 'சேவல்' 'பேடை' என்ற சிறப்புப் பெயர்களை நினைவில் வைத்துப் பேசமுடிகிறது என அறியக்கூடியதாயுள்ளது.

நகரமக்களாலோ இத்துணை தூரம் நினைவில் இருத்திவைக்கக்கூடிய ஓய்வும் அமைதியும் கிடையாது.

கூட்டத்தைக் குறிக்கும் சொற்கள் தனித் தனியே உள்ளன. நாட்டுப்புறத்தில் வேறுபாடு அறிந்து வேறு வேறு தொகுதிச்சொற்களைப் பெய்து பேசுவது அவர் தம் இயல்பாம். ஆட்டு மந்தை, தென்னந்தோப்பு, நாற்கண்டு, ஒளிக்கற்றை, பழக்குலை, பூங்கொத்து, பூஞ்சோலை, மலைத்தொடர் என்றெல்லாம் வழங்குகின்றனர்.

''எப்பொருள் எச்சொலின்
எவ்வாறு உயர்ந்தோர்
செப்பினர் அப்படிச்
செப்புதல் மரபே''—

என்னும் நன்னூல் வழக்கிற்கு நாட்டுப்புறத் தமிழ் நல்லதோர் எடுத்துக்காட்டாகும்.

எனினும் சில தமிழ்ச் சொற்கள் உண்மையிலேயே உருச்சிதைந்து வழங்கிவருவது தெரிந்ததே. அவற்றினையும் கண்டுணர்தல் பயன்பயக்கும்.

ஆற்றங்கரையினை 'ஆத்தங்கரை' என்றும் இளநீர் 'இளனி' என்றும் 'ஊருணி' 'ஊரணி' என்றும் 'ஒன்றியாய்' ஒண்டியாய்' என்றும் 'ஒருகால' 'ஒருக்கா' என்றும் சிதைந்து வழங்குகின்றன.

இவையும் வழக்கில் மருவி வழங்கும் நற்றமிழே ஆகும்.

பிறமொழிச் சொற்களைப் பேச்சிடைக்கலந்துமிடைந்தும் பேசும்போது தமிழ் ஒலிநெறியுணர்ந்தே பயன்படுத்துவதனை இன்றும் காணமுடிகிறது. 'Biscuit' என்பதனைப் 'பிசுக்கோத்து' என்று உபயோகிக்கப்படுகிறது.

தமிழில் உள்ள மரபுச் சொற்கள் அழிந்து வருகின்றன. ஆனால் பிறமொழிகளினின்றும் பெற்றவை பல. அவை நன்மையும் செய்துள்ளன, தீமையும் விளைத்துள, சான்றாக ஒன்று மொழிப் பெயர்த்தெழுவதாகும்.

''We have little hope'' என்ற தொடரை மொழி பெயர்ப்பவர் 'எங்களுக்குக் கொஞ்சம் நம்பிக்கையுண்டு' என்றே பெரும்பாலும் கூறுவர்.

'Little' என்ற சொல் ஓர் எதிர்மறைச் சொல். எனவே அச்சொல்லின் எதிர்மறைக் கருத்தானது வெளிவரவேண்டுமானால் அதனை ஓர் உடன்பாட்டு வாக்கியத்திலேயே உபயோகிக்கவேண்டும். 'எங்களுக்கு நம்பிக்கை அதிகமில்லை' என்பதே சரியானது. இலக்கணத்திலும் இத்தீமை பதிந்துவிட்டது.

'முயல்' என்ற வினைப் பகுதி 'முயன்றான்' 'முயல்கின்றான்' 'முயல்வான்' என்றாகும். ஆனால் இதற்கு மாறாகவும் வேறாகவும் 'முயற்சித்தான்' 'முயற்சிப்பான் என்று பழவுடன் எழுதுகின்றனர்.

பின் வினைமுடிவுகளை நாம் நம் தமிழ் மரபுப்படி பின்பற்றுவதில்லை. மொழி ஒன்றைப்பெற்ற பின்பே முன்னிருந்ததை இழக்கும். எதையும் பெறாமலே இருந்ததை இழக்காது. 'வரவில்லை' 'செய்யவில்லை' முதலிய சொற்களைப் பேச்சுத்தமிழ் இழந்துள்ளன.

எழுத்து நடையிலேனும் இம்மரபு இடைவிடாது சிலரால் பின்பற்றப்படுவதனால் தான் பழந்தமிழ்ப்பண்பு கெடாது நின்று நிலைத்து வருகின்றது. இன்னும் மொழிபாக்கம் செம்மைப் படல்வேண்டும்.

'I have done well in the exmination' என்ற தொடரை 'நான் சோதனையில் நன்றாகச் செய்திருக்கிறேன்' என்று மொழிபெயர்க்கின்றனர். இங்கே 'சோதனை' என்ற சொற்பதம் மிகவும் பிழையானது.

'சோதனை' என்ற சொல்லுக்குப் பதிலாக 'தேர்வு' என்ற சொல்லை உபயோகித்தாலும் கூட வசன ஆக்கம் வழுவுடையதாகவுள்ளது.

'நான் தேர்வினை நன்றாக எழுதியிருக்கிறேன்' என்று எழுதுவதே நம் மொழி மரபாகும். எனவே கற்றோர் மொழியாக்கம் செய்யும் போது இம்மொழி மரபினையும் கருத்தூன்றிக்காத்தல் நன்று.

தவறுபட ஒலிக்கும்முறை, நாவின் வழு முதலிய காரணங்களால் சொற்கள் பலவாறு திரியவும் நேர்கின்றது' 'உரித்து' என்பதனை 'உருத்து' என்றும் 'பொன்னாம் காண் நீ'யைப் 'பொன்னாங்காணி' என்றும் 'அமர்க்களம்' 'அமக்களம்' என்றும் 'உணர்த்துதல்' 'உணத்துதல்' என்றும் 'கூரைவேய்ந்தாயுற்றா' என்பதனைக்'கூரைமேஞ்சாச்சா' என்றும் 'திறவுகோலை'த் 'துறுவோல்' என்றும் 'திறப்பு' 'துறப்பு' என்றும் 'தேவை' என்பது 'தேள்வை' என்றும் 'திறப்புக்கோவை'ஐ 'துறப்புக்கோர்வை' என்றும் திரித்து உபயோகித்து வருகின்றோம். ★

**- கந்தையா நவரேந்திரன் -**

## பிரசவம்!

பேனாவே!
கடதாசியுடன் நீ
உடலுறவு
கொண்ட போது
உனது முனையிலிருந்து
எழுத்துக்கள்
பிரசவிக்கப்படுகின்றன.
நீ
பெறுகின்ற
பிள்ளைகள்
எத்தனை ஆயிரம்
இது எப்படி
உன்னால் முடிகின்றது
ஆனால்
உன் உதிரம்
குழந்தைகளாக
உருப்பெற்றதும்
உன் பிரசவம்
முற்றும் முடிகின்றது
வாழ்வும்
முற்றுப்பெறுகின்றதே!
ஓ ........
பிரசவத்துக்கென்றே
நீ
பிறந்தவளா?

- எஸ். கமலநாதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உலகைச் சுற்றி வரும் இரண்டு ரஷ்ய 'ஹெலி'கள்

□ உலகைச் சுற்றி இரண்டு ஹெலிக்கொப்டர்கள் ஆராய்ச்சியில் ஈடுபடுத்தப் படவுள்ளன.

இந்த ஆராய்ச்சியில் ஈடு படவுள்ள ஹெலிக்கொப்டர்கள் எம். ஐ - 20 ரகத்தைச் சேர்ந்தவை.

ஒரு ஹெலிக்கொப்டர் ஆராய்ச்சிக் கூடமாக உப கரணங்களுடன் செல்லும்.

இரண்டாவது ஹெலிக் கொப்டரில் பத்திரிகையாளர்கள், கலைஞர்கள் மற்றும் விஞ்ஞானிகள் செல்வர்.

நான்கு மாதங்கள் இப் பயணம் நீடிக்கும். இரண்டு ஹெலிக்கொப்டர்களும் 75 ஆயிரம் கிலோ மீற்றர் தூரத்தைக் கடக்கும்.

ஜப்பான், கொரியா, சீனா, பிலிப்பைன்ஸ், ஆஸ்திரேலியா, சிங்கப்பூர் ஆகிய நாடுகள் ஊடாக இந்த ஹெலிக்கொப்டர்கள் செல்லும்.

இந்த ஆராய்ச்சிப் பணியை சோவியத் விஞ்ஞானிகள் மேற்கொள்கின்றனர். ★

## ஜப்பானில் காணப்படும் மஞ்சள் இனவாதம்

□ ஜப்பானிலும் 'நிறவேற்றுமை தலை தூக்கியுள்ளதாம்.

இதற்கு மஞ்சள் இனவாதம் என்று பெயர் சூட்டப்பட்டுள்ளது.

ஜப்பானில் உள்ள 'நிப்போன்' இனத்தினர் இந்த இனவாதத்தைப் பிரசாரஞ் செய்து வருகின்றனர்.

இது ஏனைய ஆசிய இனத்தவர்களுக்கு எதிராகச் செயல்படுத்தப்படுகிறது.

மஞ்சள் நிறத்தைச்சேர்ந்தவர்களேயே நிப்போன் இனத்தவர் ஆதரிக்கின்றனர்.

அயல்நாட்டு மக்களையும் இந்த 'மஞ்சள் இனவாதம்' தாக்கியுள்ளது'.

இக்கொள்கையைக் கண்டிக்கும் முகமாகத் தென் கொரிய ஜனாதிபதி ரொ - டே - வூ தனது ஜப்பானிய விஜயத்தையே ரத்துச் செய்து விட்டார். ★

## 'சைவப்' பறவைகளுக்கு தனி மருத்துவமனை!

□ மாமிசம் சாப்பிடாத பறவைகளுக்கான மருத்துவமனை உலகிலேயே இந்தியாவில்தான் இருக்கிறது.

புதுடில்லி, சாந்தி சௌக் பகுதியில் 1926 ஆம் ஆண்டு ஜைனர்களால் ஒரு ஜெயின் கோயில் கட்டப்பட்டது.

கோயிலுக்குள் திரிந்த பறவைகள் ஒரு முறை உடல் நலமில்லாமல் வருந்தின.

அவற்றைப் பார்த்த ஜைனத்துறவிகள் அவற்றுக்குச் சிகிச்சை அளித்தார்கள்.

அதன் தொடர்ச்சியாக மாமிசம் சாப்பிடாத பறவைகளுக்காக ஒரு மருத்துவமனையை ஏற்படுத்தினார்கள்.

ஜைனர்கள், மாமிசம் சாப்பிடாதவர்கள். மாமிசம் சாப்பிடாத பறவைகளுக்கு மட்டுமே சிகிச்சை அளிக்கும் இந்த மருத்துவமனை ஏற்படுத்தப்பட்டது.

இந்த மருத்துவமனையில் வெளிநோயாளர் பிரிவு, அவசர சிகிச்சைப் பிரிவு, தங்கிச் சிகிசசை பெறும் பிரிவு போன்றவை இருக்கின்றன.

ஆண்டிற்கு சுமார் பத்தாயிரம் பறவைகளுக்கு இலவசமாகச் சிகிச்சை அளிக்கப்படுகிறது. ★

## அணுகுண்டின் அழிவில் இருந்து தப்பும் வழி!

● முதலாவது அணுகுண்டின் சிருஷ்டியை மேற்பார்வையிட்டு வந்த டாக்டர் ரொபர்ட் ஒப்பன் ஹீமர், அமெரிக்க காங்கிரஸ் கமிட்டி முன் ஆஜராகி, அது குறித்த விவரங்களை விளக்கிக் கொண்டிருந்தார்.

மக்களும் பெருங்கூட்டமாக கூடியிருந்தனர்.

அப்போது, 'இந்தக் கருவியிலிருந்து தப்பித்துக்கொள்ள ஏதாவது வழி இருக்கிறதா?' என்ற கேள்வி இவரிடம் கேட்கப்பட்டது.

'நிச்சயமாக இருக்கிறது,' என்றார் அணு விஞ்ஞானி.

'அது என்ன?'

அணு விஞ்ஞானி, ஒரே நிசப்தமாய் ஆவலுடன் தன்னையே நோக்கிக் கொண்டிருந்த பெருங்கூட்டத்தை நோக்கினார்.

தமக்கு முன் இருந்த ஒலி பெருக்கியில், 'அதுதான் சமாதானம்' என்று மெல்லச் சொன்னார். ★

## வடதுருவத்தை நோக்கித் தனிமைப் பயணம்!

● வடதுருவத்துக்கு சோவியத் பிரசை ஒருவரை அனுப்ப ஏற்பாடு செய்யப் பட்டுள்ளது.

தன்னந் தனியனாக இப் பயணத்தை மேற்கொள்ள உள்ள அவரது பெயர் பிய்தர் கன்யூகவ்.

சோவியத் யூனியனிலுள்ள தூரகிழக்கு நகர் ஒன்றைச் சேர்ந்த இவர் ஓர் ஓவியர் ஆவார்.

இவர் செல்லும் தூரம் 230 கிலோ மீற்றராகும்.

இதற்கு முன்பு ஜப்பான் நாட்டைச்சேர்ந்த நயோமி உயேமூனாவும் பிரெஞ்சு நாட்டைச் சேர்ந்த பெரஸ் என்பவர்களே வடதுருவம் சென்று திரும்பினர்.

வடதுருவம் செல்லவுள்ள மூன்றாவது நபர் என்ற பெருமை சோவியத் பிரசைக்கு கிடைக்கின்றது.

மூன்று விமானங்கள் இவருக்கு உணவுப் பொருள்களை கொண்டுசென்று வழங்கும்.

இவரது பயணம் 65 நாட்கள் நீடிக்கும்.

அதேவேளை இவரது ஆராய்ச்சிக் குறிப்புக்களையும் புகைப் படங்களையும் வடதுருவத்தில் இருந்து எடுத்துவரவும் இவ்விமானங்கள் உதவும். ★

## குன்றின் உச்சியில் வாழும் மூக்குக் கண்ணாடிக் குரங்கு

□ குரங்குகளிலே பல வகை உண்டு.

மூக்குக் கண்ணாடி குரங்கு என்று ஒரு வகை இந்தியாவில் திரிபுரா மாநிலம், பங்களாதேஷ், பர்மா, தாய்லாந்து ஆகிய நாடுகளில் காணப்படுகின்றன.

Spectacled Monkey என்று ஆங்கிலத்தில் அழைக்கப்படும் இக்குரங்கு சுமார் 60 சென்ரி மீற்றர் உயரமுள்ளது.

அதன் வால் 75 சென்ரி மீற்றர் உள்ளது.

பாயரின் இலைக் குரங்கு (Phayres Leaf Monkey) எனவும் இது அழைக்கப்படுகிறது.

இதன் தலையும் வாலும் கறுப்பாக இருக்கும். தோள் முதல் இடுப்புவரை வெள்ளையாக இருக்கும்.

முகத்தில் மூக்குக் கண்ணாடி அணிந்திருப்பதைப் போன்ற தோற்றமுடையதால், இதனை மூக்குக்கண்ணாடிக் குரங்கு என்று அழைப்பர். குன்றுகளிலும் உயர்ந்த மரங்களின் உச்சியிலும் சிறு சிறு கூட்டங்களாக இவை வாழுகின்றன.

இவை அரிதாகவே தரைக்கு வரும். ★

## எது அநீதி?

● செய்யக் கூடாததைச் செய்வது அநீதி. செய்ய வேண்டியவற்றைச் செய்யாமல் விடுவதும் அநீதியே!

— மார்க்ஸ் அரோலியஸ்

# 'பொன் முக்கோணம் - பொன் இளம்பிறை'

## உலகை அழிக்கும் 'டைம்பொம்'

● பொன்முக்கோணம்—
● பொன் இளம்பிறை—

இப்பெயர்களின் பின்னால் உலகின் போதைவஸ்து சாம்ராஜ்யங்கள் இருக்கின்றன.

பொன் முக்கோணம்பொன் இளம்பிறை- இரண்டும் ஆசியாவில் உள்ளன. இவை மிகவும் பிரசித்தமானவை.

முன்னது தாய்லாந்து, பர்மா மற்றும் லாவோஸ் நாடுகளின் எல்லைப்புறங்கள் சந்திக்கும் இடத்தில் உள்ளது.

ஈரான், ஆப்கனிஸ்தான் மற்றும் பாகிஸ்தான் ஆகிய நாடுகளின் எல்லைப்புறத்தில் 'பொன் இளம்பிறை' உள்ளது.

'பொன்முக்கோணம்' உலகின் மிகப்பெரிய போதைவஸ்து உற்பத்தி செய்யும் பிரதேசமாக அடையாளங் காணப்பட்டுள்ளது.

இங்கிருந்து மட்டும் 4,200 கோடி டாலர் பெறுமதியான அபின் மற்றும் போதை வஸ்துக்கள் உலகின் பல நாடுகளுக்கு 1989 இல் கடத்திச் செல்லப்பட்டன.

பொன் முக்கோணத்தை தோற்கடித்து முதல்இடத்தை பிடிக்கக்கூடிய அளவுக்கு 'பொன் இளம்பிறை' பிரதேசம் முன்னேறிவிட்டதாக நிபுணர்கள் கருதுகின்றனர்.

'பொன் முக்கோணம்', 'பொன் இளம்பிறை' -இரண்டும் மனித நாகரிக வளர்ச்சியின் நடுவே வைக்கப்பட்டுள்ள 'டைம்பொம்' ஆகும் என்று ஐ. நா. பொதுச்செயலர் பெரெஸ் டி குயிலர் வர்ணித்துள்ளனர்.

'அது வெடிக்காமல் பார்த்துக்கொள்ள வேண்டும்' என்று கூறும் ஐ. நா. ஸ்தாபனம் 1991-200 ஆண்டுகளை போதைதடுப்பு தசாப்தமாக பிரகடனப்படுத்தியுள்ளது. ★

## சிந்தனைக்கு விருந்தளிக்கும் நகைச்சுவைக் கதைகள்!

● பிரபல இந்தியப் பத்திரிகையாளர் குஷ்வந்த்சிங்கின் எழுத்துக்கள் பிரபலமானவை.

நகைச்சுவையாக குட்டிக் கதை ஒன்றை அவர் எழுதியிருந்தார்.

கதையை வாசியுங்கள்...

ரயில் தண்டவாளத்தில் ஒருவன் கையில் கோணிப்பை ஒன்றுடன் அமர்ந்திருந்தான்.

அவ்வழியே சென்றுகொண்டிருந்த வழிப்போக்கன் ஒருவன்—

'என்னப்பா தண்டவாளத்தில் உட்கார்ந்திருக்கிறாய்?' என்று விசாரித்தான்.

'வாழ்க்கை கசந்துபோச்சுது' சாகிறதுக்காக வந்து உட்கார்ந்திருக்கேன்' — என்றான் அவன்.

வழிப்போக்கன் திகைப்புற்று அவன் வைத்திருக்கும் கோணிப் பையைக் கவனித்தான்.

'ஆமா...சாகவந்தேன் என்கிறாய், அப்புறம் கையோடு ஏன் பையையும் கொண்டுவந்திருக்கிறாய்?' என்று வழிப்போக்கன் கேட்டான்.

அதற்குத் தற்கொலை செய்யவந்தவன்—

'பையை ஏன் கொண்டு வந்தேனா? நல்லா இருக்கு நீ கேட்கிறது. ஒருவேளை ரயில் பிந்திவந்திட்டால் நான் பட்டினி கிடந்து சாகச்சொல்றியா? அது தான் சோறு கொண்டுவந்திருக்கிறேன்' —என்றான் தண்டவாளத்தில் உட்கார்ந்திருந்தவன்.



கல்கி

இப்படி குலுங்கிக் குலுங்கி சிரிக்கவைக்கும் நகைச்சுவையைத் தருவதில் கல்கியும் திறமைசாலியாக இருந்தார்.

கல்கியின் நகைச்சுவை ஒன்றை இனி வாசியுங்கள்

'என்ன டாக்டர் சௌக்கியமாக இருக்கிறீர்களா?' —என ஒருவர் டாக்டரிடம் நலம் விசாரித்தார்.

நோயாளியே வராமல் எரிச்சலாக இருந்த டாக்டர் சொல்கிறார், 'நான் மட்டுமா? ஊரில இருக்கிறவர் எல்லாரும் சௌக்கியமாகத்தான் இருக்கிறார்கள்போலிருக்கே?'—

டாக்டரின் எரிச்சலும் நமக்கு சிரிப்பூட்டுகிறது அல்லவா?

சிரிப்பும் நல்ல மருந்து தானே! ★

## மேடைப் பேச்சுக்களில் சிறந்து விளங்க அறிஞர் கூறும் வழி!

● மேனாட்டு அறிஞர் ஒருவர் சிறந்த சொற்பொழிவாளராக விளங்கினார்.

இவ்வளவு சிறப்பாகப் பேசுகிறாரே! எப்படி இத்திறமையைப்பெற்றார்? என்று பலரும் அதிசயப்பட்டனர்.

ஒருநாள் பத்திரிகையாளர் ஒருவர் அந்த அறிஞரை நேராகச் சந்தித்துக்கேட்டார்.

'ஐயா, ஒரு பொருள்பற்றி பேச வேண்டுமானால் முன் கூட்டியே தயார்செய்து கொள்வீர்களா?'

அறிஞர்:- ஆம் பேசவேண்டிய பொருள் குறித்து முன் கூட்டியே வேண்டிய தகவல்களை அறிந்துகொள்கிறேன்'

'ஐயா, அப்படியானால் ஒரு பொருள் பற்றி 5 நிமிடம் பேசுவதற்கு ஆயத்தம் செய்ய எவ்வளவு காலம் எடுக்கிறீர்கள்?'

அறிஞர்;- ஐந்து நிமிடங்கள் பேச ஒரு வாரகாலம் தயார் செய்வேன்.

'அப்படியானால் 15 நிமிடங்கள் பேச...

அறிஞர்:- அதற்குத் தயார் செய்ய 3 நாட்கள் அவகாசம் தேவை.

பஞ்சாமிர்தம் பலரசஅமிர்தம்

'ஓகோ! சரி அரை மணி நேரம் பேசவேண்டுமானால்,

அறிஞர்:- 'அரை மணி நேரம் பேச ஒரு நாள் அவகாசம் தேவை.'

'அப்படியானால் ஒருமணி நேரம்பேச...'

அறிஞர்:- 'சில மணித்தியாலங்களுக்கு முன்னால் கூறினால்போதும், பேசிவிடுவேன்'—

'சரி, இரண்டு மணி நேரம் பேசப்போவது என்றால்...

அறிஞர்:- 'அதற்கு கால அவகாசமே தேவையில்லை. இப்போதே தலைப்பைச் சொல்லுங்கள் இதோ பேச ஆரம்பித்துவிடுகின்றேன்.

சுருங்கச் சொல்லி விளங்க வைப்பதுதான் சொற்பொழிவில் சிரமமான காரியம் என்பது அந்தப் பத்திரிகையாளருக்கு அப்போதுதான் புரிய ஆரம்பித்தது. ★

## இருட்டுச் சிறையில் உருவாகும் ஒளிதரும் இலக்கியங்கள்!

□ சிறைவாசம் பல பெரிய எழுத்தாளர்களை உருவாக்கி உள்ளது.

உலக இலக்கியங்களைப் படைக்கவும் சில எழுத்தாளர்களை ஊக்குவித்தது சிறைக் கூடமே!

எந்த நிலையிலும் மனங் குலையாத வீரர்கள் இருட்டுச் சிறைகளில் வாழும்போது உலகிற்கு ஒளிதரும் விதமாய்ச் சிந்தித்து எழுதியிருக்கிறார்கள்.

நேருஜியைப் பற்றி அறிஞர் பெர்னாட்ஷா 'இந்த மனிதரை இன்னும் கொஞ்சக் காலம் சிறையிலே வைத்து இருக்கக் கூடாதா?'— என்று சொன்னார்.

இப்படிக் கூறியதற்கு பெர்னாட்ஷா காரணமும் சொன்னார்.........

'நேருஜி மேலும் சிலகாலம் சிறையிலே இருந்திருந்தால் இன்னும் பல நல்ல இலக்கியங்களைப் படைத்திருப்பாரே'— இது தான் ஷா கூறிய காரணம்.

ஆம்... நேருஜி எழுதிய நூல்கள் அனைத்தும் அவர் சிறைவாசத்தின் போது கிடைத்த தனிமையில் எழுதப்பட்டவையே!

தற்சமயம் தமிழக முதலமைச்சராக இருக்கும் கலைஞர் கருணாநிதி கூட தனது சிறைவாசத்தின் போது பல நூல்களை எழுதியிருக்கிறார்.

பல திரைப்படங்களுக்கு அவர் வசனங்கள் எழுதியது சிறைவாசத்தை பயன்படுத்தியதேதான்.

அவர் கடைசியாக சிறைவாசத்தின்போது எழுதிய புத்தகம் 'சிறையில் பூத்த சின்ன, சின்ன பூக்கள்'— என்பது தான்.

தமிழகத்தில் பிரபல கம்யூனிஸ்ட் தலைவராக விளங்கியவர் பாலதண்டாயுதம்.

அவர் தனது சிறைவாசத்தின்போது கையெழுத்துப் பத்திரிகை ஒன்றையே சிறையினுள் நடத்தினார்.

பத்திரிகைக்குப் பெயர் 'துடைப்பம்' என்பது. அப் பத்திரிகையில் கைதிகள் மட்டுமன்றி, சிறை அதிகாரிகளும் எழுதினார்கள்.

கவியரசு கண்ணதாசன் சிறையில் இருந்தபோது 'மாங்கனி' காவியத்தைப் படைத்தார்.

கல்லக்குடி போராட்டத்தில் பங்குபற்றியதற்காக சிறை சென்ற சமயம்தான் கண்ணதாசனின் 'மாங்கனி' பிறந்தது. ★



கருணாநிதி



கண்ணதாசன்

## சோவியத் லொறிகள்

□ சோவியத் யூனியனில் தயாரிக்கப்படும் லொறிகளுக்கு அமெரிக்காவில் பலத்த கிராக்கி ஏற்பட்டுள்ளது.

சோவியத் மாநிலங்களில் ஒன்றான பியாலோ குடியரசில் இந்த லொறி தயாரிக்கப்படுகிறது.

110 தொன் பாரத்தை எடுத்துச் செல்லக்கூடிய இந்த லொறியின் பெயர் 'பிலாஸ்' ★

## மூன்று வேளைகள் செய்ய வேண்டியது

□ எந்தவேளையும் இறைவனை நினைக்க வேண்டும். அது ஆரம்பத்தில் முடியாவிட்டாலும், மூன்று வேளைகளில் தவறாமல் நினைக்கவும்.

காலை எழுந்தவுடன், 'இறைவனே! இன்று நல்ல வழியில் நிற்க அருள் புரி, என்று தொழுங்கள்.

உணவு உட்கொள்ளும் பொழுது, இறைவனே, இந்த உணவினால் எனக்கு நல்ல அறிவும், அன்பும் உண்டாக அருள் புரி,' என்று தொழுங்கள்.

இரவில் படுக்கப் போகும் போது, இறைவனே! இந்த உறக்கத்திலே, உன் எண்ணமே நிற்க அருள் புரி,' என்று தொழுங்கள்.

-வாரியார் உரையிலிருந்து

## கண்ணைத் திறந்து மூடும் நேரம்

□ கண்களை எப்போது திறந்து எப்போது மூடவேண்டும்?

அறிஞர் பெஞ்சமின் இதற்குப் பதிலளித்திருக்கிறார்.

திருமணத்திற்கு முன் கண்களை அகலத் திறந்திருக்க வேண்டும்.

திருமணத்திற்குப் பின்னர் கண்கலளக் கொஞ்சம் மூடிக் கொள்ளவேண்டும்.

— இப்படிப் பெஞ்சமின் கூறுகிறார். ★

## ஆந்தையின் பார்வை

□ நள்ளிரவில் 1,312 அடி தொலைவில் எரிந்துகொண்டிருக்கும் ஒரு சிறிய மெழுகுவர்த்தியின் ஒளியைப் பார்க்க மனிதனின் கண்களால் முடியுமா?

முடியாது, ஆனால் பறவை ஒன்றின் கண்களுக்கு அந்த மெழுகுவர்த்தியின் ஒளி துல்லியமாகத் தெரியும்

ஆந்தைதான் அந்தப் பறவை.

மனிதனின் கண்களைவிட 100 மடங்கு கூர்மையானது ஆந்தையின கண்கள்.

அதனால்தான் 'ஆந்தைப் பார்வை' என்று நம்மவரில் சிலரைப்பார்த்தவுடன் கூறப்படுகிறதோ! ★

## சந்தன மரம் தனித்து வளருமா?

□ சந்தன மரத்தைத் தனியே வளர்க்க முடியாது என்று கூறப்படுகிறது.

காரணம், சந்தன மரத்தின் வேரினால் தனக்குத் தேவையான ஊட்டச்சத்துக்களை தரையிலிருந்து நேரடியாகப் பெறமுடியாது.

இதனால், சந்தன மரங்களின் அருகே வேறு மரங்களும் வளர்க்கப்படவேண்டும் என்று சொல்லப்படுகிறது. ★

## இங்கிலாந்தில் சைக்கிள் மோகம்

□ இங்கிலாந்தில் சைக்கிள் மீது மோகம் அதிகரித்து வருகிறது.

செல்வந்தர்கள் கூட சைக்கிளில் பயணம் செய்வதையே இப்போது விரும்புகின்றனர்.

இதனால் அங்கு சைக்கிள் விற்பனை அதிகரித்து இருக்கிறது.

1989 இல் 28 லட்சம் சைக்கிள்கள் விற்பனையாகியுள்ளன.

1986 ஐ விட இது 30 சதவீதம் அதிகம் ஆகும்.

சைக்கிளில் செல்வதால் உடல் பருமன் குறையும். இதனால் சைக்கிளையே பெரும்பாலோர் விரும்புவதாகச் சைக்கிள் ஓட்டுவோர் சங்கத்தலைவர் பிரெண்டர் மொரிஸன் கூறுகிறார். ★

## உலகின் முதலாவது லொத்தர் சீட்டு

□ பதினைந்தாம், பதினாறாம் நூற்றாண்டுகளில்தான் உலகில முதன்முதலாக லொத்தர் சீட்டுமுறை ஆரம்பிக்கப்பட்டது.

இத்தாலியின் தலைநகரம் ரோமில் முதலாவது லொத்தர் குலுக்கல் இடம்பெற்றது.

முதலாவது பரிசாக கப்பல், வீடுகள், அடிமைகள் அப்போது வழங்கப்பட்டன

இப்போது நம்மவர்கள் லொத்தர் சீட்டுக்குத்தான் அடிமைகளாகிவிட்டனரே! ★

## உலகின் முதன்முதலாக நடந்த போராட்டம்

□ உலகில் 'போராட்டம்' என்பது எப்போது ஆரம்பித்தது தெரியுமா?

கிறிஸ்துவுக்கு முன் 280 ஆம் ஆண்டில் கிரேக்க நாட்டில் முதலாவது போராட்டம் இடம்பெற்றது.

ஜுபிடர் கோவில் ஒன்று கிரேக்கத்தில் இருந்தது.

அங்கு இசைக் கச்சேரி ஆண்டுதோறும் நடைபெறுவது வழக்கமான ஒன்று.

அந்தக் கோவிலில் இசைக் குழு ஒன்று கி. மு 280 இல் ஒருநாள் இசைக் கச்சேரி நடத்தியது.

இசைக்கச்சேரியின் பின்னர் அந்தக் குழுவைச் சேர்ந்தவர்கள் கோயிலில் சாப்பிட அனுமதிக்கப்படவில்லை.

உடனே கலைஞர்கள் கோவிலுக்கு வெளியே கூடி நின்று பெரும் ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தி, இறுதியில் வெற்றிகண்டனர். ★

## ஆறுமுகனுக்கு 2 கால்கள் எதற்காக உள்ளன?

□ ஆறுமுகனுக்கு எத்தனை கண்கள்? முகத்துக்கு மூன்று வீதம் பதினெட்டுக் கண்கள்.

இந்தப் பதினெட்டுக் கண்களைக் கொண்டும் அவன் தன்னை வந்தடையும் பக்தர்களைக் கண்குளிரப் பார்ப்பான். பிறகு அருள் பாலிப்பான், சரி,

ஆறுமுகனுக்கு எத்தனை கைகள்?

முகத்துக்கு இரண்டு கைகள் வீதம் பன்னிரண்டு கைகள்.

இந்தப் பன்னிரண்டு கைகளைக் கொண்டும் அவன் பக்தர்களுக்கு வாரி, வாரி வழங்குவான் சரி,

ஆறுமுகனுக்கு எத்தனை கால்கள்?

அவனுக்கு இரண்டு கால்கள் தான.

நியாயமாகப் பார்த்தால் பன்னிரண்டு கால்கள் இருக்க வேண்டும்?

ஏன் பன்னிரண்டு கால்கள் இல்லை?

ஏனெனில் அவன் கால்களைப் பற்றவரும் பக்தர்களுக்கு இரண்டு கைகள் தானே உள்ளன?

இரண்டு கைகளைக் கொண்டு அவர்கள் இரண்டு கால்களைத்தானே பற்ற முடியும்?'' ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஐக்கிய நாடுகள் சபையின் தோற்றமும் வளர்ச்சியும்

(சென்ற வாரத் தொடர்ச்சி)

அமைவிருக்கும் உலக நாடுகள் ஸ்தாபனத்தில், 'வீட்டோ' என்ற ரத்து அதிகார உரிமை மேற்கூறிய ஐந்து வல்லரசு நாடுகளுக்கு மட்டுமே உண்டு என்பதை 1945 பெப்ரவரி 4 முதல் 11 வரை யால்ட்டாவில் கூடிய ரூஸ்வெல்ட், சேர்ச்சில், ஸ்டாலின் ஆகிய வல்லரசுத் தலைவர்களும் ஊர்ஜிதம் செய்தனர்.

பின்னர் உலக நாடுகள் ஸ்தாபன அமைப்புக்கான முதல் பொது மாநாட்டை, அமெரிக்காவில் உள்ள 'ஸான் பிரான்ஸிஸ்கோ' நகரில் நடத்துவதென முடிவுசெய்தனர்.

இந்த முடிவின்படி இங்கிலாந்து, அமெரிக்கா, சீனா, ரஷ்யா நாடுகளின் நிர்வாக உலகிலுள்ள எல்லா நாடுகளுக்கும், ஸான் பிரான்ஸிஸ்கோ மாநாட்டில் வந்து கலந்துகொள்ளும்படி அழைப்புகள் அனுப்பப்பட்டன.

அதுசமயம் இந்தியா சுதந்திரமடையவில்லையாதலால், முன்பு சர்வதேச சங்கத்தில் பிரிட்டிஷ் மன்னர் கலந்து கொண்டதுபோலவே, இந்த ஸான்பிரான்ஸிஸ்கோ மாநாட்டிலும் இந்தியாவின் பிரதிநிதியாக சர். ஏ. ராமசாமி முதலியார் கலந்து கொண்டார்.

**சபையும் நிர்வாக உறுப்புகளும்**

இந்த மாநாடு 1945 ஏப்ரல் 25 முதல் ஜூன் 25 வரை இரண்டு மாதங்கள் நடைபெற்றது.

இதில் கலந்துகொண்ட 51 நாட்டுப் பிரதிநிதிகளும் போரினால் ஏற்பட்ட அழிவுகளை வேதனையோடு எடுத்துக்கூறி, உலக நாடுகள் சபைக்கு 'ஐக்கிய நாடுகள் சபை' என்ற பெயரையும், இதன் நிர்வாக உறுப்புக்களாக விளங்கும் பொதுச் சபை, பாதுகாப்புச் சபை, பொருளாதார சமுதாயக் கவுன்சில், ட்ரஸ்டி கவுன்சில், சர்வதேச நீதிமன்றம், காரியாலயம் ஆகிய ஆறு அங்கங்களையும் ஏகமனதாக ஏற்றுக்கொண்டு, 1945 அக்டோபர் 24ந் தேதி கையெழுத்திட்டு முடித்தனர்.

இந்த நாளைத்தான் உலக மக்கள் ஐக்கிய நாடுகள் தினமாகக் கொண்டாடி வருகின்றனர். ஆரம்பத்தில் சொந்தக் காரியாலயம் இல்லாததால், ஐக்கிய நாடுகள் சபைக் கூட்டங்கள் லண்டன், பாரிஸ், நியூயார்க் போன்ற நகரங்களில் நடைபெற்றுவந்தன.

பின்னர், அமெரிக்கக் கோடீஸ்வரரான ஜோன் ரொக்பெல்லர், நியூயார்க் நகரில் 18 ஏக்கர் நிலத்தை ஐக்கிய நாடுகள் சபைக்குக் காரியாலயம் கட்டிக்கொள்ள நன்கொடையாக வழங்கினார்.

இதில் கட்டடம் கட்டுவதற்கான செலவுத் தொகையை அமெரிக்க அரசு வட்டி இல்லாக் கடனாக வழங்கியது.

இந்த இடத்தில் 1949 அக்டோபர் 24ந் தேதி கால்கோள் விழா செய்யப்பட்டு 1951 இல் கட்டட வேலைகள் பூர்த்திசெய்யப்பட்டன.

அதுமுதல் 505 அடி உயரத்தில் 39 மாடிகளைக் கொண்ட தனது சொந்தக் கட்டடத்தில் ஐக்கிய நாடுகள் சபைக் காரியாலயம் செயற்படத்தொடங்கியது.

இதன் முதல் பொதுச்செயலாளராக நோர்வே நாட்டைச் சேர்ந்த 'ரிக்-வி-லை' என்பாரும்—

இவருக்குப்பின், ரோமுலோ டாக்டர் ஹாமர்ஷீல்டு, பர்மாவைச் சேர்ந்த ஊதாண்ட் போன்றவர்களும் இந்தப் பொறுப்பில் இருந்து வந்தனர். இப்போது பெரேஸ் டி குயேர் பொதுச்செயலாளராக உள்ளார்.

ஆரம்பத்தில் '51 நாடுகளால்' ஆரம்பித்துவைக்கப்பட்ட இந்த ஐக்கிய நாடுகள் சபையில் இன்று சுமார் 170 நாடுகள் அங்கம்வகிக்கின்றன. இதற்கும் நெருக்கடிகளும், சோதனைகளும் ஏற்படாமல் இல்லை. ஏற்படத்தான் செய்தன.

சில சந்தர்ப்பங்களில் பாதுகாப்புச் சபையில் நாடுகளுக்கிடையே ஏற்பட்ட கடுமையான வாக்குவாதங்களால் ஐக்கிய நாடுகள் சபை கலைந்துவிடுமோ என்ற ஐயப்பாடு கூட எழுந்ததுண்டு.

இருப்பினும், அதையெல்லாம் சமாளித்து இந்த 45 ஆண்டு காலமாக உலக மக்களின் அமைதிச் சின்னமாக ஐக்கிய நாடுகள் சபை இருந்து வருகிறதென்பது ஒரு மறுக்க முடியாத வரலாற்று உண்மை ஆகும். ★

(முற்றும்)




## இயற்கை அழிவைக் குறைக்கும் சர்வதேச தசாப்தம்

- ஜே. ஜே. அற்புதராஜன் -

இயற்கையில் விளையும் பேராபத்துக்களைக் குறைப்பதற்கான சர்வதேச சகாப்தமாக 1990 ம் ஆண்டுகள் ஐ. நா. சபை பிரகடனப்படுத்தியுள்ளது.

இம் முயற்சியால் வெள்ளப்பெருக்கு, காட்டுத்தீ, வெட்டுக்கிளிகளால் ஏற்படும் அழிப்புக்கள், சேற்றுச்சரிவுகள், புவிநடுக்கங்கள், வரட்சி, எரிமலை வெடிப்புக்கள், சுடுமணல்கள், மண்சரிவுகள் போன்ற இயற்கை செயற்பாடுகளால் ஏற்படும் மனித இழப்புக்களையும், நிதிச் சேதங்களையும் குறைப்பதற்குரிய தகவல்களையும் எச்சரிக்கைகளையும் ஒன்று சேர்த்து ஆக்கம் காணக்கூடிய வாய்ப்புக்களை ஏற்படுத்துவதாகும்.

தேசிய தாபனங்களும் சர்வதேச தாபனங்களும் இச் சகாப்தத்தில் பலதரப்பட்ட திட்டங்களையும், செயற்பாடுகளையும் மேற்கொண்டு இயற்கைப் பேராபத்துக்களிலிருந்து எமது சுற்றாடலையும், புவியினையும் பாதுகாப்பதற்கு ஆவன செய்யும்.

ஐ. நாடுகளின் கிளைகளாகிய ஐ. நா. அபிவிருத்தித் திட்டம் (UNDP); ஐ. நா. சூழல் பாதுகாப்புத் திட்டம் (UNEP), உணவு விவசாயத் தாபனம், உலகவங்கி போன்றவை இத்தகைய திட்டங்களை வகுத்து விசேடமாக அபிவிருத்தியடையும் நாடுகளுக்கு உதவும்.

விஞ்ஞானிகளும் பொறியியலாளர்களும் இச் சகாப்தத்தில் பல தொடர்ச்சியான கூட்டங்களினூடு கலந்துரையாடல்களினூடு இப்பிரச்சினை தொடர்பாக ஈடுபடுவர்.

அவர்கள் பல ஆய்வுகளை நடத்தி தமது அறிவினைத் திட்டவட்டமாகப் பல நாடுகளினூடுமுள்ள பொதுப் பாதுகாப்பு உத்தியோகத்தர்களுக்கும், கட்டடக் கலைஞர் ஆகியோருக்கும் அறிவிப்பர்.

இது சம்பந்தமான விஞ்ஞான தொழில் நுட்பத் தகவல்களை நாடுகளுக்கிடையே புரிந்துணர்வுடன் பகிர்ந்து கொள்ள இச்சர்வதேச முயற்சி கூடிய விழிப்புணர்ச்சியுடன் செய்யப்படும். ★

## குழந்தைகளின் மனோ வளர்ச்சிக்கு உதவும் ஆறு முக்கிய அம்சங்கள்

**ஜோன்** டிரெச்சர் குடும்ப நலத்தில் விற்பன்னர் மற்றும் அறிஞர்.

குழந்தைகளின் நலன் ஒட்டி, 'குழந்தைகளுக்குத் தேவையான ஆறு விஷயங்கள்......' குறித்து ஒரு கட்டுரை எழுதியுள்ளார். அதில் ஆரோக்கியமான குழந்தைகளின் வளர்ச்சிக்கு இவை முக்கியமான தேவைகள் என்றும் வர்ணித்துள்ளார்.

இவர் குழந்தைகள் என வர்ணித்துள்ளது நடுத்தர வயதுக் குழந்தைகளையே...'

இனி ஜோன் டிரெச்சர் கூறிய விஷயங்களைப் பார்ப்போம்...

**1. தன்னை மதித்து உயர்வாகக் கருதச் செய்தல்**

ஒவ்வொரு ஜீவனும் செய்ய வேண்டியது இது. மற்றவர்களுக்கு நாம் தேவை, அல்லது மற்றவர்கள் நம்மை விரும்புகிறார்கள் அல்லது சிலருக்கு நாம் அத்தியாவசியத் தேவை என்ற எண்ணம் குழந்தைகளுக்கு உருவாக வேண்டும். அல்லது குழந்தைகளை இதை உணரும்படிச் செய்தால் தானாக முன்னேறும் ஆசை வந்துவிடும்.

குழந்தைகளை வீட்டைச் சுற்றி ஏதாவது காரியம் செய்யச் சொல்லுங்கள். பெரியவர்களிடம் குழந்தைகளை அறிமுகப்படுத்துங்கள். குழந்தைகளைத் தானாகப் பேச விடுங்கள். அவனுடைய அணுகுமுறையையும் எண்ணங்களையும் சந்தர்ப்பம் வாய்க்கும் போதெல்லாம் வெளிப்படுத்த வாய்ப்புத் தாருங்கள்.

குழந்தைகளுக்காக உங்கள் நேரத்தைச் சிறிது ஒதுக்குங்கள். வெறுமனே 'ஊம்...ஊம்' என்பதுடன் நிறுத்தாமல், ஆழமாக குழந்தைகளின் கண்களைக் கூர்ந்து கவனித்துப் பேசுங்கள். அதன் மூலம் குழந்தை தன்னுடைய பெற்றோர் தன் பேச்சைக் கூர்ந்து கேட்கிறார்கள் என அறிந்து மிக்க சந்தோஷமடையலாம்.

**2. அவர்களுக்குப் பாதுகாப்புத் தேவை.**

குழந்தைகளுக்குத் துணிமணிகளும் புத்தகங்களும் விளையாட்டுச் சாமான்களும் வாங்கித் தருவது மட்டும் பாதுகாப்பு இல்லை. குழந்தைகளுக்கு எதிரில் மனைவியிடம் சண்டையிடுவது மிகவும் தவறு.

ஒவ்வொரு குழந்தையும் தன்னுடைய தாயிடம் தந்தை மிகவும் அன்பாக நடந்து கொள்ள வேண்டும் என்றே விரும்புகிறது.

குழந்தையிடம் தங்கள் பெற்றோர் தனக்குப் பாதுகாப்பாக இல்லை என்ற எண்ணத்தை மட்டும் உருவாக்கி விடாதீர். மாறாகத் தன்னைப் பெற்றோர் கவனிக்கின்றனர் எனக் குழந்தைகள் அறியும்போது மேலும் சிரத்தையுடன் செயல்பட அவை வழிவகுக்கும்.

**3. எதையும் ஏற்கும் பக்குவம் தேவை.**

பெற்றோர் நல்ல 'மூடில்' இருக்கும்போது மட்டும்தான் குழந்தைகளின் பேச்சை வரவேற்கிறார்கள்.

மாறாகக் கோபமாகவோ அல்லது மற்ற சூழ்நிலைகளில் இருக்கும் போதோ குழந்தைகளின் சாதாரண பேச்சுக்குக் கூட கடும் சாடல் கிடைக்கிறது. இதனால் குழந்தைகள் துவண்டு போகின்றன.

குழந்தைகளாக இருந்தாலும் சரி பெரியவர்களாக இருந்தாலும் சரி நிஜ வாழ்க்கை வாழவே அனைவரும் விரும்புகின்றனர். அதன் மூலம் மற்றவர்கள் தான் செய்யும் காரியங்களை ஏற்க வேண்டும் என்றும் விரும்புகின்றனர்.

ஆனால் அதற்காகத் தவறான நடத்தையையும் நாம் ஆதரிக்க வேண்டும் என்று அர்த்தம் கிடையாது.

குழந்தைகளிடம் தவறான நடவடிக்கைகள் இருந்தால் அதைக் களைந்து அவனை மற்றவர்கள் போல் மதித்து வாழ்க்கையில் முன்னேற உதவுங்கள்.

ஒவ்வொரு குழந்தையும் வித்தியாசமானது. குழந்தைகள் திறமை அறிந்து ஊக்குவிக்க வேண்டும்.

குழந்தைகளை அதன் திறமையிலேயே சோபிக்க விடுங்கள். குழந்தைகளின் நண்பர்களை மதியுங்கள்.

**4. விரும்புவது அன்பு**

குழந்தைகள் விரும்புவது அன்பு. அன்பு செலுத்துங்கள்! அன்புக்கும் உண்டோ அடைக்கும் தாழ்! கடவுள் நமக்கு அளித்துள்ள அன்பளிப்பு 'அன்பு'.

குழந்தைகளிடம் கனிந்த அன்பைக் காட்டும்போது மனம் மகிழ்ந்து அதே அன்பை அவர்கள் நண்பர்களிடம் பெரியவர்களிடமும் காட்டுவார்கள்.

**5. தேவை பாராட்டு**

இன்று பாராட்டுவதே குறைந்துவிட்டது. பொய்யான புகழ்ச்சிகள் மலிந்துவிட்டன. ஆனால் பொய்யான புகழ்ச்சிகள் குழந்தைகளை மகிழ்விப்பதற்கு பதில் வருத்தம் கொள்ளவே செய்துவிடும்,

உங்கள் பாராட்டு படுகுழியில் தள்ளுவதற்குப் பதில் குழந்தைகளுக்கு வாழ்வதற்கும் வளர்வதற்குமான எருவாக அமைய வேண்டும்.

**6. சுயக்கட்டுப்பாடு அவசியம்.**

குழந்தைகளின் நடத்தையில் சில பொறுப்புகளை நிர்ணயம் செய்ய வேண்டியது பெற்றோரின் கடமை.

குழந்தைகள் சிரித்த முகத்துடன் கட்டுப்பாட்டை வரவேற்பதில்லை.

ஆனால் அதற்காகப் பெற்றோர் குழந்தைகளைக் கட்டுப்பாடு இல்லாமல் வளர்க்க முடியுமா?

அதிக கட்டுப்பாடும் குழந்தையின் மனநிலையைப் பாதித்து விடக்கூடும்.

ஆகவே பொறுமையுடனும் கட்டுப்பாட்டுடனும் குழந்தைகளின் பெற்றோர் நடந்து கொண்டால் குழந்தைகளின் வருங்கால வாழ்வுக்கு அவை மிகவும் உதவும். ★

## சமையல் செய்வோம்



### காரமில்லாத பொடி

**தேவையான பொருட்கள்:**

பொரிகடலை – 100 கிராம்
மிளகாய் வற்றல் – 4
எள் – 1 தே. கரண்டி
உளுத்தம்பருப்பு – 1 தே. கரண்டி
உப்பு – அளவாக.

சுத்தமான எள்ளை நீர் விட்டு நன்றாகக் கழுவி, அதை வறுத்துக் கொள்ளவும். பிறகு, மிளகாய், உழுத்தம்பருப்பை கொஞ்சம் எண்ணெய் விட்டு வறுத்துக் கொள்ளவும்.

அம்மியில் மிளகாய், உப்பு ஆகியவற்றை நன்றாக அரைக்கவும். பின் பொரிகடலை, எள் சேர்த்து மசிய அரைத்து, உளுத்தம்பருப்பைப் பொடி செய்து சேர்க்கவும்.

இக்காரமில்லாத பொடி தோசை, இட்லியுடன் சேர்த்துச் சாப்பிடலாம். சம்பலைக் காரம் என நினைத்துக் கொண்டு உண்ண மறுக்கும் குழந்தைகள் இப்பொடியை விரும்பிச் சாப்பிடுவார்கள்.

சிலர் சிறிது நல்லெண்ணையை இப்பொடியுடன் சேர்த்து தோசை, இட்லியுடன் சாப்பிடுவார்கள். ★




## ஆங்கிலப்படை முகாம்களைத் தாக்க திப்புசுல்தான் பாவித்த ஏவுகணை

(சென்றவாரத் தொடர்ச்சி)

இந்திய வரலாற்றில், மைசூர் மன்னராயிருந்த திப்பு சுல்தான் 1792 இல் சார்ள்ஸ் கோர்ன் வாலிஸின் பிரிட்டிஷ் படைகளுக்கு எதிராக நடத்திய ஸ்ரீரங்கப்பட்டினம் போரில், ஆங்கிலப் படை முகாம்களை ஏவுகணைகளால் தீக்கிரையாக்கினார்.

இந்த யுத்தம் ஆங்கிலேயர் கவனத்தை ஈர்த்தது.

கேர்னல் வில்லியம் கொங்கிரீவ் (Colonel William Congreve) எனும் போர்க் கருவி வல்லுநர் அந்த ஏவுகணைகள் பற்றித் தீவிரமாக ஆராய்ந்து, ஏறத்தாழ 20 கிலோ கிராம் எடையை ஒன்றிரண்டு கிலோ மீற்றர் தொலைவு வரை எறியக் கூடிய புதிய படைக் கருவிகளை அமைத்தார்.

**கற்பனைப் பயணங்கள்**

கி. பி. 1634 இல் பிஷப் கோட்வின் (Bishop Godwin) எழுதிய சந்திரனில் மனிதன் என்னும் நூலும் –

கி. பி. 1656 இல் சைரனோ டி–பெர்ஜெராக்(Cyrano–de–Bergerac) என்னும் பிரெஞ்சு நாவலாசிரியரால் எழுதப்பட்ட ''சந்திர, சூரியப்பயணங்கள்'' – என்ற நாவலும்–

1686 இல் பெர்னாட் டி பொன்டெனெல்லே (Bernard de Fontenelle) எழுதிய 'உலகங்களின் பன்மை எனும் வானவியல் நூலும் —

1752 இல் வால்டேர் எழுதிய ''மைக்ரோ மெகாஸ்'' என்ற நவீனமும் – விண்வெளிப் பயணம் பற்றியும் விண்வெளி பற்றியும் விளக்கின.

ஆயினும் கி. பி. 1870 இல் ஜூலி வெர்ணி (Julie Verne) என்னும் பிரெஞ்சு நாவலாசிரியர் தீட்டிய ''சந்திரனைச் சுற்றி'' என்னும் புதினமே விண்வெளிச் சரித்திரத்தில் ஒரு புதிய மைல் கல்லை நிறுவியது எனலாம்!

கி. பி. 1879 இல் ஜூலி வெர்ணி வெளியிட்ட ஒரு நாவலில் ஒரு ராட்சத பீரங்கி மூலம் சந்திரனுக்குப் பயணிகளைச் செலுத்தும் சில அறிவியல் சூக்குமங்கள், தீர்வுகள் தெளிவாக்கப்பட்டன.

செயற்கைக் கோள்களைப் பூமி வலம் புரிய ஏவிவிடும் நவயுக விஞ்ஞானத்திற்குக் கால்கோள் நாட்டியது அந் நாவல்.

கி. பி. 1837 இல் மாக்ஸ்வெல் (Maxwell) எனும் அறிஞன் மின்காந்த அலைகள் குறித்த கொள்கை வெளியிடவும் மார்க்கோனி என்ற மேதை வானொலி அலை இயல்புகளை விவரிக்கவும் செய்தனர்.

**விண்வெளியும் ரொக்கெட்டும் - 2**

ஹெர்ட்ஸ் (Hertz) என்ற விஞ்ஞானி மின்காந்த அலைகளை உற்பத்தி செய்வித்தார்.

இன்றைய தொலைத்தொடர்பு தகவல் தொடர்பினுக்கு அடிப்படை ஆரம்பம் இது.

**ரஷ்ய இளைஞர்**

அதே காலகட்டத்தில் ரஷ்யாவில் நிலவிய 'நொரோத்நயா வோல்யா' (Norodnaya Volya) என்னும் புரட்சிவாத இயக்கத்தைச் சேர்ந்த நிக்கோலாய் கிபால்சிக் (Nikolai Kibalchich) எனும் விஞ்ஞானியைக் குறிப்பிட வேண்டும்.

வெடிகுண்டு தயாரித்து, ஜார் மன்னர் பயணம் செய்ய விருந்த ரயில் தண்டவாளங்களைப் பிரமு வைக்க முனைந்த குற்றத்திற்காகத் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டவன், அந்த 27 வயது இளைஞன்.

கி. பி. 1881 இல் பீற்றர்ஸ்பக் சிறைச்சாலையில் வைத்துக் கருத்தொன்றைத் தெரிவித்தான்.

காற்றைவிடக் கனமான கப்பல்களாகும் ஏவுகணைகள், வெடிமருந்துகளினால் விண்ணில் பறக்கவிடப்படும் காலம் விரைவில் வரும் என்று திட்டவட்டமாகவே எழுதினான்.

இக்கருத்தை அவன் வெளியிட்ட அதே ஆண்டில் –(1881 மார்ச் மாதம்) தூக்கிலிடப்பட்டான்.

ஆயினும் 'அக்டோபர் புரட்சி' வெடித்துக் கிளம்பும் வரை அந்தத் தீவிரவாதியின் அறிவியல் ஹேஷ்யங்கள் விஞ்ஞானிகளால் அங்கீகரிக்கப்படவே இல்லை.

(வளரும்)

## விடுகதை

1. உயரமானவன் உரித்துத் தின்ன இனிப்பானவன் அவன் யார்?
2. நின்றால் நிற்பான் நடந்தால் நடப்பான் அவன் யார்?
3. ''சட்டத்தில்'' இடம் உண்டு இவனுக்கு. அவன் யார்?
4. குட்டையில் குளிப்பதில் கோடி இன்பம் இவனுக்கு அவன் யார்?
5. சிவனுக்கும் இவனுக்கும் மூன்று கண் அவன் யார்?
6. விடியலை அறிவித்துத் தூங்குவோரை எழுப்புவான் அவன் யார்?
7. அண்ணன் தம்பி இரண்டு பேர் அண்ணன் சுட்டெரிப்பான் தம்பி குளிர்விப்பான். அவர்கள் யார்?
8. கைக்கெட்டாத தூரத்தில் கண்சிமிட்டும் கட்டழகுப் பெண்கள் அவர்கள் யார்?
9. நாளொன்று போனால் தாளொன்று போகும் அது என்ன?
10. வெயிலுக்கும் மழைக்கும் வேண்டியவன் நமக்கு அவன் யார்?

**விடை**

1. கரும்பு
2. நிழல்
3. ''போட்டோ''
4. எருமை
5. தேங்காய்
6. சேவல்
7. சூரியன் – சந்திரன்
8. நட்சத்திரங்கள்
9. காலண்டர்
10. குடை




### தருவாயா?

ஆரம் அணிந்து வருகின்ற
அழகிய பச்சை கிளியக்கா
தாரும் அதனை நான்சூடத்
தந்தால் கொவ்வைப் பழம் தருவேன்!

பட்டுச் சிறகை விரித்தபடி
பறந்து வானில் களிக்கின்ற
சிட்டுக் குருவி எனக்குந்தன்
சிறகை நீயும் தருவாயா?

பாட்டுப் பாடி எங்களைப்
பரவசப் படுத்தும் குயிலக்கா
கேட்போம் இரவல் உன்குரலை
நானும் பாடத் தருவாயா?

நடனம் ஆடும் மயிலக்கா
நல்ல அழகு உன்தோகை
ஒயிலாய் அணிந்து நான்ஆட
ஒருக்கால் அதனைத் தருவாயா?

— நெடுந்தீவு லக்ஸ்மன்

## அறிவியல் வினா-விடை

### நட்சத்திரக் கிரகணம்

● சூரிய கிரகணம், சந்திர கிரகணம் ஏற்படுவதுபோல் நட்சத்திரக் கிரகணம் ஏற்படுவது உண்டா? உண்டெனில் எவ்வாறு ஏற்படுகிறது?

— உண்டு. விண்மீன்களை மற்ற விண்மீன்களோ, துணைக் கோள்களோ, கோள்களோ மறைக்கலாம். விண்மீன்களைச் சந்திரன் மறைப்பதை எளிதில் காண முடியும். ★

● Sun stroke என்றால் என்ன? வெப்பகாலங்களில் இதன் தன்மை அதிகரிக்கக் காரணம் என்ன?

— வெய்யில் காலத்தில் நீர் தவிர உப்புகள், வியர்வை நீர் மூலம் அதிகம் வெளியேறி, உடலில் உள்ள சூடு இயக்கும் தானியக்கிகள் (Thermostat) செயலற்றுப் போகின்றன.

இதனால் உடல் சூடு வேகமாக ஏறி சன்ஸ்ட்ரோக் ஏற்பட ஏதுவாகிறது. ★

● ஹேலி விண்மீனை நெருங்கிப் படம் எடுத்த ரஷ்ய விண்கலம் எது?

– வீனஸ் மற்றும் ஹேலி வால் விண்மீன் ஆய்வுக்குமாக ரஷ்ய (Veha) வீஹா என்ற விண்கலத்தை அனுப்பியது. அது தான் ஹேலி வால் விண்மீனை நெருங்கிப் படம் எடுத்தது. ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"குழல் இனிது யாழ் இனிதென்பர்
தம்மக்கள் மழலைச் சொல் கேளாதோர்"



உங்கள் அன்புச் செல்வங்களின் வளமான
எதிர்காலத்துக்கு என்றென்றும் உற்றதுணை

ஷப்ரு

ஷப்ருவின் முதலீட்டுத் திட்டங்களில் சேர்ந்து கொள்வதன்மூலம் உங்கள் பிள்ளைகளின் எதிர்காலத்தை உறுதிப்படுத்தி வளமாக்குங்கள். ஷப்ரு உங்கள் பணத்திற்குப் பாதுகாப்பு அளிப்பதுடன் கவர்ச்சிகரமான வட்டியையும் வழங்கித் திறமையான சேவையைப் புரிவதன்மூலம். உங்கள் நண்பனுகவும் திகழ்கின்றது.

ஷப்ருவின் அபரிமிதமான வளர்ச்சியும் சிறந்த முகாமைத்துவமும் உங்கள் முதலீடுகளுக்குச் சிறந்த பாதுகாப்பை அளிக்கின்றன.

எமது பிரதான நிதிச் சேவைகள்
- ★ சகலவிதமான வாகனங்களுக்குமான தவணைக் கொள்வனவு நிதி
- ★ வாகனங்களைக் குத்தகைக்கு விடல்
- ★ வர்த்தக மற்றும் இறக்குமதிக் கடன்கள்
- ★ அடைமானக் கடன்கள்
- ★ அபிவிருத்தி நிதியிடல்

CERTIFICATE OF DEPOSIT வைப்புச் சான்றிதழ்

| Period-Months காலம் - மாதம் | Cost of Certificate சான்றிதழின் பெறுமதி | | | | Rate வட்டி வீதம் |
|---|---|---|---|---|---|
| 06 | 4,588/- | 9,175/- | 45,872/- | 91,744/- | 18% |
| 12 | 4,133/- | 8,265/- | 41,323/- | 82,645/- | 21% |
| 24 | 3,379/- | 6,757/- | 33,784/- | 67,568/- | 24% |
| Value at Maturity முதிர்ச்சியில் பெறுமதி | 5,000/- | 10,000/- | 50,000/- | 100,000/- | ● |

நிலையான வைப்பு TERM DEPOSIT

| Period - Months காலம் - மாதம் | Monthly மாதாந்தம் | Maturity முதிர்ச்சியில் |
|---|---|---|
| 03 | - | *7% |
| 06 | 15% | 18% |
| 12 | 19% | 20% |
| 24 | 21% | 23% |
| 36 | 22% | 24% |

நிறுவனத்தின் நிதி நிலை விபரம்

| | 1986/87 | 1987/88 | 1988/89 |
|---|---|---|---|
| மூலதனமும் ஒதுக்கமும் | 11,342,354 | 14,354,927 | 23,306,911 |
| வைப்புகள் | 100,577,492 | 110,897,760 | 116,890,354 |
| வங்கிக் கடன்கள் | 7,718,284 | 6,539,639 | 11,364,064 |
| மொத்தச் சொத்துகள் | 127,175,677 | 143,822,862 | 162,239,787 |
| வைப்பாளருக்கு செலுத்திய வட்டி | 16,880,875 | 20,025,480 | 20,833,024 |
| வரி செலுத்திய பின் தேறிய இலாபம் | 2,330,012 | 3,148,350 | 2,867,657 |
| பகிரப்பட்ட இலாபம் | | 1,775,100 | 1,508,110 |

பணிப்பாளர் சபை

திரு எல். பி. ஈ. கருணரட்ன,
சட்டத்தரணி, சமாதான, நீதவான், தலைவர்
திரு எஸ். பாலசுப்பிரமணியம்,
A. I. B. (Lond.), முகாமைப் பணிப்பாளர்
திரு. ஜே. டி. நவரட்ண.
A.I.B. (Lond.), பொதுமுகாமையாளர்,
திரு. ஏ. எம். எச். பாரி, B.A. (Hons.)
திருமதி. ஆர். பாலசுப்பிரமணியம்

இலங்கை மத்திய வங்கியின் அனுமதி பெற்ற நிதி நிறுவனம்

SHABRA
ஷப்ரு யுனிக்கோ பினன்ஸ் லிமிட்.

61, பௌத்தலோக மாவத்தை, கொழும்பு - 4.
தொலைபேசி - 589310/500576

D. HEYZER

# வல்லரசுகள் வரவேற்கும் 'மகாபாரதம்' படம்!

உலகின் நீளமான காவியம் மகாபாரதம்.

மிகப் பழைமை வாய்ந்ததும் அதுவே.

இதனை தமிழ் மற்றும் இந்திய மொழிகளில் திரைப்படமாக நாம் பார்த்துவிட்டோம்.

இப்போது மகாபாரதம் ஆங்கில மொழியில் தயாரிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஜனவரி மாதம் பிரெஞ்சுத் தலைநகர் பாரிஸில் ஆங்கில 'மகாபாரதம்' திரையிடப்பட்டு வெற்றிகரமாக ஓடிக்கொண்டிருக்கிறது.

அமெரிக்காவில் வருகிற ஏப்ரல் மாதம் 'மகாபாரதம்' படம் திரையிடப்பட இருக்கிறது. ஆங்கில மகாபாரத படம் தயாரிக்கப்பட்டது பற்றி ராய்ட்டர் சர்வதேச செய்தி ஸ்தாபனம் பல தகவல்களை வெளியிட்டிருக்கிறது.

அவற்றின் தொகுப்பு இங்கே தரப்படுகிறது:

கிறிஸ்து பிறப்பதற்கு 4 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே மகாபாரதம் வாய்மூலமாக சொல்லப்பட்டுவந்தது.

கிறிஸ்துவுக்கு பின் 300-400 ஆண்டுகளில்தான் மகாபாரதம் எழுத்துவடிவத்தைப் பெற்றது.

பிரிட்டிஷ் படஇயக்குநர் பீற்றர் புறூக், பிரெஞ்சு நாவலாசிரியர் ஜீன் குளோடி கரேயர் ஆகியவர்கள் பதினொரு ஆண்டுகளாக மகாபாரதக் கதையை துருவித்துருவிப் படித்து, படக்கதையைத் தயாரித்தனர்.

பின்னர் அதனை 3மணிநேர டெக்னிக்கலர் படமாக்க இவர்கள் இருவருக்கும் 5 ஆண்டுகள் எடுத்தன.

பிரெஞ்சு நாவலாசிரியர் ஜீன் குளோடிகரேயர் மகாபாரதத்தை சமஸ்கிருதத்தில் இருந்து ஆங்கிலத்தில் மொழிபெயர்த்திருக்கிறார்.

பின்னர் அவரும் பீற்றர் புறூக்கும் சேர்ந்து மகாபாரதத்தை மூன்று தொடர்களாக 'டெலி' படமாகத் தயாரித்தனர்.

37 நாடுகளில் இந்த மகாபாரத 'டெலி' படங்கள் காண்பிக்கப்பட்டு வருகின்றன.

இப்போது தயாரிக்கப்பட்டுள்ள 'ஆங்கில மகாபாரதம்' படத்தில் சீனா, இந்தியா, இத்தாலி மற்றும் பிரான்ஸ் ஆகிய நாடுகளைச் சேர்ந்த நடிகர், நடிகையர் நடித்துள்ளனர்.

6 கோடி டொலர் செலவில் பாரிஸ் புறநகர்ப் பகுதியில் உள்ள ஸ்ருடியோ ஒன்றில் 14 வாரங்களாக இதன் படப்பிடிப்பு இடம்பெற்றது.

'இந்தியாவில் இந்தப் படத்தைத் தயாரிப்பதற்கு உதவ ஹொலிவூட் முன்வந்தது. ஆனால் இந்தியாவில் இப்படப்பிடிப்பை நடத்துவது தனது படைப்புக்குச் செய்யும் துரோகம் என்று இயக்குநர் பீற்றர் புறூக் கருதினார். இத்தகவலை படத்தயாரிப்பாளர் மிச்செல் புரொப்பர் வெளியிட்டார்.

பீற்றர் புறூக், படத்தின் உச்சக்கட்டமான குருஷேத்திரப் போரைப் பாரிஸிலே வைத்துப் படமாக்கியிருக்கிறார்.

58 வயதான பிரெஞ்சு நாவலாசிரியர் கரேயர் மகாபாரதம் பற்றிப்பின்வருமாறு கூறுகிறார்;

''மகாபாரதக் கதையைப் படிப்பதை நாம் இன்னும் முற்றாக விடவில்லை. அது அள்ள அள்ளக் குறையாத செல்வமாக உள்ளது. மகாபாரதம் எம் உணர்வுடன் ஒன்றி விட்டது.

''இன்றைய காலத்துக்கு ஏற்றதாக மகாபாரதம் உள்ளது.''—

நாவலாசிரியர் கரேயர் பாரிஸில் உள்ள தனது வீட்டில் இருந்து ராய்ட்டருக்கு அளித்த பேட்டி ஒன்றில் இப்படித் தெரிவித்தார்.

பிரெஞ்சு நாவலாசிரியர் கரேயர் மேலும் கூறுகிறார்.

''ஆங்கில 'மகாபாரதம்' படத்தில் அர்ஜுனனுக்குக் கிருஷ்ணர் உபதேசம் செய்யும் காட்சிக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு உள்ளது.

மகாபாரதத்தை வாசித்து முடிந்தவுடன் ஆரம்பத்தை நீங்கள் மறந்துவிடுகிறீர்கள்.

மீண்டும் முதலில் இருந்து நீங்கள் அதனை வாசிக்க ஆரம்பித்து விடுகிறீர்கள்.

> **பிரெஞ்சுத் தயாரிப்பான 'மகாபாரதம்' ஆங்கிலப்படம் பற்றிய தகவல் இங்குபிரசுரமாகிறது.**

அப்போது புதிய, புதிய கருத்துக்கள் வெளிப்படுவதை நீங்கள் உணர முடியும்.

மனிதனின் அறிவு பூர்வமான அம்சங்கள் அனைத்தும் மகாபாரதத்தில் உள்ளன.

தங்களுக்குத் தேவையான அம்சங்களை ஒவ்வொருவரும் மகாபாரதத்தில் இருந்து அறிய முடிகிறது.

நான் மகாபாரதத்தைப் படிக்கத் தொடங்கிய போது இளைஞனாக இருந்தேன். 16 ஆண்டுகளாக மகாபாரதத்தைப் படித்தேன்.



இன்று உலகத்தை உணர்ந்தவனாகி விட்டேன். அதனால் மகாபாரதக் கருத்துக்கள் உள்ளத்தில் நன்றாக ஊன்றி விட்டன.

நாம் அனைவரும் மகாபாரதச் சிந்தனைகளால் மாற்றமடைந்து விட்டோம்''—

இப்படிக் கூறும் திரு. கரேயரின் வீட்டில் உள்ள நூலக அறையில் இருக்கும் அலுமாரியில் 4½ அடி நீளத்திற்கு மகாபாரத நூல்கள் வரிசையாக அடுக்கி வைக்கப்பட்டுள்ளன.

பட இயக்குநர் புறூக் பற்றி தயாரிப்பாளர் புரொப்பர் கூறுவதை வாசியுங்கள்:

''புறூக் கற்பனை செய்வதில் மன்னன். அவர் தயாரித்துள்ள 'மகாபாரதம்' ஒருபடமா அல்லது நாடகமா என்பதைச் சொல்ல முடியாத அளவு உள்ளது. இரண்டுக்கும் பாலமாக தனித்தன்மையுடன் மகாபாரதம்' படம் அமைந்துள்ளது — என்கிறார் புரோப்பர்.

''மேற்கத்திய பாணியில் தயாரிக்கப்பட்ட இப்படத்தை இந்தியாவில் திரையிடுவது ஒரு சவாலாக அமைந்துள்ளது.

ஏனென்றால் இந்திய மக்களின் அன்றாட வாழ்க்கையில் மகாபாரதம் அடிப்படை அம்சமாக இணைந்து விட்டதேயாகும்''—

இப்படி தயாரிப்பாளர் புரொப்பர் கருதுகிறார். ★

வெள்ளித்திரையில்

# மீட்கப்பட்ட 22 படங்கள்

40 ஆவது பேர்லின் சர்வதேச திரைப்பட விழா அண்மையில் நடைபெற்றது.

கிழக்கு ஜேர்மனியில் கம்யூனிஸ்ட் ஆட்சியின் கீழ் கடந்த 25 ஆண்டுகளாகத் தடை செய்யப்பட்டிருந்த பல படங்கள் இவ்விழாவில் திரையிடப்பட்டன.

1960, 1970களில் ஸ்டாலினசத்தை எதிர்த்துத் தயாரிக்கப்பட்ட படங்களே இவை.

இப்படங்கள் அனைத்தும் கிழக்கு ஜேர்மனியின் தேசியச் சுவடிக் காப்பகத்தில் இதுவரை காலமும் பாதுகாப்பாக வைக்கப்பட்டிருந்தன.

பேர்லின் திரைப்பட விழாவில் கலந்து கொண்டவர்களில் முக்கியமானவர் திரைப்பட வசனகர்த்தாவும் விமர்சகருமான ரோல்ப் றிச்றர் ஆவார்.

ஸ்டாலினச ஆட்சிக்காலத்தில் தடை செய்யப்பட்ட படங்கள் எங்கு வைக்கப்பட்டிருக்கின்றன என்பதைக் கண்டுபிடிக்க கிழக்கு ஜேர்மனியில் ஓர் ஆணைக்குழு நியமிக்கப்பட்டிருக்கிறது. அந்தக் குழுவின் தலைவராக திரு. றிச்றர் நியமிக்கப்பட்டிருக்கிறார்.

'கம்யூனிஸ்ட்' அரசால் தடை செய்யப்பட்டு பறிமுதல் செய்யப்பட்ட படங்களை மீண்டும் வெளிக்கொணர நாம் முயற்சித்து வருகிறோம்.''—

இப்படி திரு. றிச்றர் கூறுகிறார்.

தேசியச் சுவடிகள் காப்பகத்தில் இருந்து இதுவரை தடைசெய்யப்பட்ட 22 படங்களை மீட்டு உள்ளோம்''— என்றார் அவர்.

இப்படங்களைத் தயாரித்தவர்கள், இயக்கியவர்கள் பலர் பேர்லின் திரைப்பட விழாவில் கலந்து கொண்டனர்.

அவர்களில் சிலர் கண்கலங்க அப்படங்களைத் தயாரிக்கத் தாங்கள் பட்ட இன்னல்களைத் தெரிவித்தனர். ★

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# அறியாமல் செய்யும் பாவத்தை மன்னித்தருளிய யேசுபிரான்!

யேசுபிரானுக்கு பன்னிரு சீடர்கள் என்பதை யூதர்கள் நன்கு அறிவார்கள்.

இந்தப் பன்னிருபேர் கொண்ட சபைக்கு யூதாஸ் என்னும் சீடன் தனாதிகாரியாக இருந்தான்.

யூதாஸ் சூதாட்டத்தில் மிகவும் விருப்பம் கொண்டவன். ஒருநாள் யேசுவுக்குத் தெரியாமல் சபையின் பணத்தை வைத்து சூதாடினான். அதனால் முப்பது வெள்ளிப் பணத்தை இழந்தான்.

தோற்ற பணத்தை யேசுவுக்குத் தெரியாமல் சபைநிதியில் வைத்துவிட வேண்டும் என்ற அவா காரணமாக யூதாஸ் யேசுவை தேடிக் கொண்டிருக்கும் யூதர்களுக்கு யேசுவைக் காட்டிக் கொடுத்தால், அப்பணத்தைப் பெறலாம் என்ற நப்பாசையால் உந்தப்பட்டு யூத குருக்களிடம் நேரடியாகச் சென்றான்.

யேசுவைக் காட்டித் தருவதாகப் பேரம் பேசி, முப்பது வெள்ளிப் பணத்தையும் பெற்றுக் கொண்டான்.

பணத்தைப் பெற்றபோது யூதாஸ் கூறினான்;

'யேசுவைப்போல் முகச் சாயலுள்ள வேறொரு சீடரும் இருக்கிறார். அதில்நீங்கள் ஆள்மாறாட்டம் செய்துவிடுவீர்கள்; நீங்கள் எல்லோரும் என்பின்னே வந்து ஒரிடத்தில் மறைவாய் இருங்கள்; நான் வழக்கம்போல் யேசுவிடம் சென்று அவரது கன்னத்தில் முத்தமிடுவேன், அப்பொழுது நீங்கள் அவரைக் கைது செய்யலாம்' என்று



கூறிவிட்டு சீடர்கள் சபையில் வந்து சேர்ந்தான்.

### யேசு ஜெஸ்த்தமேனித் தோட்டத்தில்

யேசு சீடர்களை விட்டுப் பிரிந்து தாம் படப்போகும் பாடுகளை நினைத்து ஜெஸ்த்தமேனித் தோட்டத்தில் செபம் செய்தார். நள்ளிரவு சீடர்கள் தூக்கத்தில் இருந்தனர். யேசு அவர்களிடம் சென்று,

'ஒரு மணி நேரமாவது என்னுடன் விழித்திருக்க முடியாமல் உங்களால் போனதோ' என்று கேட்டு, அவர்களை அழைத்து, பந்தியில் அமரச் செய்து சீடர்களின் கால்களைக் கழுவி கால்களை முத்தமிட்டார். யேசுவின் இராப்போசனம் நடைபெற்றது அந்நேரம் யேசு,

'உங்களில் ஒருவன் என்னைக் காட்டிக்கொடுப்பான்' என்றார். அப்பொழுது சீடர்கள் தங்களுக்குள் தாங்கள் சந்தேகத்தில் தடுமாறினர்.

சந்தர்ப்பத்தை எதிர்பார்த்த யூதாஸ் சபையை விட்டு மெல்ல விலகி மறைவாக இருந்த யூதர்களை அழைத்து வந்து யேசுவின் கன்னத்தில் முத்தமிட்டான். அப்போது யூதாசைப் பார்த்து யேசு கேட்கிறார்.

'நேசம் காட்டி வினையம் செய்ய வந்தாயோ, உன் குருவும் ஆண்டவனும் நானல்லவோ' என்றார்.

கைது செய்யத் திரண்டு வந்த யூதர் கூட்டத்தைப் பார்த்து,

'நீங்கள் யாரைத் தேடி வந்தீர்கள்?'— இப்படி யேசு கேட்டார்.

'யேசு நசரேத்தைத் தேடி வந்தோம்' என்றனர் யூதர்கள்.

'நானே அவர்' என்றார் யேசு.

யேசுவைக் கைது செய்த யூதர்கள் அவரின் தோள்மீது பாரமான சிலுவையைச் சுமத்தி நகரின் ஊடாக கல்வாரி மலைக்கு நடத்திச் சென்று, மலையின் உச்சியில் இரண்டு கள்வருக்கு நடுவே சிலுவையில் அறைந்து சித்திரவதை செய்தார்கள்.

சிலுவையிலறையப்பட்ட யேசுபிரான்,

'பிதாவே இவர்கள் அறியாமல் செய்கிறார்கள். இவர்கள் பாவத்தை மன்னித்தருளும்' என்று பிதாவை வேண்டினார். ★

- அ. வென்சஸ்லோஸ் -

# மனிதனின் சபல உணர்வை அடக்கி மாண்புடையவனாக்கும் நோன்பு!

இறைவன் தன் திருமறையில்,

'உங்களுக்கு முன்னிருந்தவர்கள் மீது விதிக்கப்பட்டிருந்த பிரகாரமே, உங்கள் மீதும் நோன்பு நோற்பது விதிக்கப்பட்டிருக்கின்றது. அதனால் நீங்கள் பரிசுத்தவான்கள் ஆகலாம்' என்கிறார்.

இங்கே ஒன்றைக் கவனிக்க வேண்டும். நோன்பு நோற்பதால் மனிதர்கள் பரிசுத்தவான்கள் ஆகலாம் என்று சொல்கிறார் இறைவர். இது நோன்பை சிபார்சித்து அவன் தரும் உத்திரவாதம்.

எதற்காக இந்த உத்திரவாதம்...? மனிதர்களை நோன்பு பிடிக்கச் செய்வதால் இறைவனுக்கு என்ன லாபம்?

ஒரு லாபமும் இல்லை. லாபமெல்லாம் மனிதனுக்குத்தான்.

ஆம், அவர்கள் பரிசுத்தவான்கள் ஆகலாம். உடல் ரீதியாகவும், உணர்வு ரீதியாகவும்.

எப்படி..?

வயிற்றுப் பசி பொறுத்திருந்து உடலுறுப்புகளுக்கு ஓய்வு கொடுத்து உடல் ரீதியாகப் பரிசுத்தமாகிறான்.

உணர்வுப் பசியைப்



பொறுப்பதன் மூலம் உள ரீதியாகப் பரிசுத்தமாகிறான்.

நோன்பு இருப்பவன் பரிசுத்தமுடையவனாகிறான் என்னும் கருத்தை வலியுறுத்தும் நபிமொழி ஒன்றையும் இங்கே நாம் காணலாம்.

எவனொருவன் நோன்பு மேற்கொண்டு தன்னைப் பசித்திருக்க வைப்பானோ, அவனுடைய மனம் நுண்ணறிவை உடையதாகவும், அவனுடைய எண்ணம் மாண்புடையதாகவும் இருக்கும்.

மாண்பு என்பது என்ன?

நல்ல பண்புகளை உடைய மேன்மைமிக்க ஒழுக்கத்திற்கு மாண்பு என்று பெயர்.

நல்ல பண்புகளும் மேன்மையும் எதனால் வருகிறது...?

வக்கிரமான சபலமான பசி உணர்வுகளைக் கட்டுப்படுத்தி ஒழுகுவதால்தான் மாண்பும் மேன்மையும் வருகிறது

அது மனிதனை மாண்புடைய எண்ணமுடையவனாக்குகின்றன. இறுதியாக குர்ஆனின் கூற்றுப்படி அவன் பரிசுத்தமுடையவன் ஆகிறான்.

அடுத்தது நுண்ணறிவு என்றால் என்ன...? சொல்லப்படும் விஷயத்தை நுணுக்கமாக ஆராய்ந்து தெளியக்கூடிய அறிவு.

இந்த நுணுக்கம் ஏற்படுவது பலவகைப் பசிகளையும் பொறுத்திருப்பதால் எல்லாம் இருந்தும் ஒரு குறிப்பிட்டகாலத்திற்கு அவற்றை வெறுத்திருப்பதால்.

- ரசூல்கான் -

எல்லாப் பசிகளையும் பொறுத்து ஒரு மாத காலம் தன்னைத் தானே அடைகாக்கும் மனிதன் எதிர் காலத்தில்தான் கடைப்பிடிக்கவேண்டிய நடைமுறைகளையெல்லாம் உணர்ந்து தெளிவாகிறான்' இனி இப்படித்தான் வாழவேண்டும் முன்பு போல் எப்படியும் வாழக்கூடாது என்ற ஞானம் வரப்பெறுகிறான் அதுதான் நுண்ணறிவு,

ஒவ்வொரு பொருளுக்கும் ஜக்காத் இருக்கிறது. உடலுக்கு ஜக்காத் நோன்பு வைப்பதாகும் என்பது மற்றொரு நபிமொழி

ஆண்டு பூர்த்தியடைந்த நிலையில் தங்களிடமுள்ள சொத்துகளுக்கு 100 க்கு 25 சத விகிதம் ஜக்தாக் (ஏழை வரி) வசதி படைத்த ஒவ்வொரு முஸ்லீமும் கணக்கிட்டுக் கொடுக்க வேண்டும்.

30 நோன்பு நாட்கள் நீங்கலாக ஓர் ஆண்டில் ஒரு நாளைக்கு 3 வேளை என்ற விகிதத்தில் மொத்தம் 1005 வேளை நாம் சாப்பிடுகிறோம் நொறுக்குத்தீனி.

நோன்பு காலத்தில் நாம் பசி பொறுத்திருக்கும் வேளைகள் தான் உடலின் ஜக்காத்.

ஓராண்டு காலம் நம்மிடம் திரண்ட சொத்தில் ஒரு குறிப்பிட்ட சதவிகிதத்தைக் கணக்கிட்டு ஏழை எளியோருக்கு வழங்குவதுதான் ஜக்காத்.

அதுபோலவே நம் ஓராண்டு காலப் பகல் உணவு வேளைகளில் 30 நாட்களின் பகல் உணவு வேளைகளின் நோன்புக்கு வழங்கிவிடுவது உடலின் ஜக்காத்.

அந்த ஜக்காத் நம் உடமைகளுக்குப் பரிசுத்தத்தை அளிக்கிறது.

இந்த ஜக்காத் நம் உடலுக்கும் உயிருக்கும் பரிசுத்தத்தை அளிக்கிறது.

மறுபடியும் அல்லாஹ்வின் வாக்கு ஒலிக்கிறது. நீங்கள் பரிசுத்தவான்கள் ஆகலாம்.

## பொது அறிவுப்போட்டி இல. 37

1. உலகின் இரும்புச் சீமாட்டி என்று வர்ணிக்கப்படுவர் இவர் ... ?
   ... ... ... ... கொரஸோன் அக்யூனோ / மார்கரட் தாட்சர்
2. அண்மையில் தம்மை சுதந்திர நாடாகப் பிரகடனப்படுத்திய நாடு எது?
   ... ... ... லித்துவேனியா / நமீபியா
3. மனிதனுக்குத் தோழனான கடல் பிராணி இது? ... ... சுறா / டொல்பின்
4. தெற்கில் இருந்து வீசும் காற்று எது? ... ... ... தென்றல் / கொண்டல்
5. உலகிலே மிகப்பெரிய ஜனநாயக நாடு எது? ... ... இந்தியா / அமெரிக்கா
6. உலகில் அதிகம் மழைபொழியும் இடம்? ... ... சிரபுஞ்சி / காஷ்மீர்
7. 'புரட்சிக்குயில்' எனப்போற்றப்படும் கவிஞர்?... பாரதிதாசன் / சரோஜினிதேவி
8. அற நூல்களில் இதுவும் ஒன்று? ... ... ... ... மகாபாரதம் / கீதை
9. 'முடியாது' என்ற வார்த்தையை அகராதியில் இருந்தே நீக்க வேண்டும் என்று சொன்னவர் யார்? ... ... ... நெப்போலியன் / அலெக்சாந்தர்
10. உலகில் அதிகளவு கோப்பி உபயோகிக்கும் நாடு? ... ...அமெரிக்கா / ஜப்பான்
11. சமீபகாலமாக மக்களைப் பயமுறுத்தும் நோய் எது?
    ... ... ... ... எய்ட்ஸ் / மூளைக்காய்ச்சல்
12. உலக விந்தைகளில் இதுவும் ஒன்று? ... ... தாஜ்மகால் / அஜந்தாகுகை

பெயர்:- ............... ............... ......
விலாசம்:- ..............., ..........................
...... .......... .....................

பொது அறிவுப்போட்டி இல: 37
சஞ்சீவி,
292/2, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

——————— இங்கே வெட்டுக ———————

### நிபந்தனைகள்

சரியான விடைகளை அனுப்பியவர்களில் மூன்றுபேர்கள் குலுக்கல் மூலம்தெரிவு செய்யப்பட்டு பரிசுகள் வழங்கப்படும். கடிதம் கிடைத்தவுடன் நேரில் வந்து பணத்தைப் பெற்றுக் கொள்ளலாம்.

ஆசிரியரின் தீர்ப்பே முடிவானது. உதயன் / சஞ்சீவி ஊழியர்கள் போட்டிகளில் கலந்து கொள்ள முடியாது.

சரியான விடைகளின் கீழ்க் கோடு இடுக. பின்னர் இப்படிவத்தைக் கத்தரித்து அஞ்சல் அட்டையில் ஒட்டி 18 - 04 - 1990 புதன்கிழமைக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்பவும்.

கடித உறையினுள் வைத்து அனுப்பப்படும் படிவங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

| | |
|---|---|
| முதலாம் பரிசு: | 100 ரூபா |
| இரண்டாம் பரிசு: | 50 ரூபா |
| மூன்றாம் பரிசு: | 25 ரூபா |

# சஞ்சீவி நூல் வரிசை

நூல்:- ''மானிப்பாய் தந்த மாணிக்கம் சேர். முத்துக்குமாரசாமி''
ஆக்கியோன்:- திரு. சின்னத்துரை குமாரசாமி எம். ஏ.,
விலை:- 12 ரூபாய்

1852 ஆம் ஆண்டில் ஸ்ரான்லி பிரபு இலங்கை வந்தபோது அவருக்கு ஒரு பகிரங்க வரவேற்பு அளிக்கப்பட்டது. அப்போது 18 வயது நிரம்பிய முத்து சிறந்த ஆங்கிலச் சொற்பொழிவை நிகழ்த்தினார்.

'தமிழ் சமுதாயத்தின் செழிப்பு' என்ற தலைப்பில் முத்து பேசியதைச் செவிமடுத்த தேசாதிபதி அண்டர்சன் சிவில் சேவையில் ஒரு எழுத்தாளனாகி விரைவில் பொலீஸ் நீதிவானாகினார்.

18 வயது நிரம்பிய நீதவானை மக்கள் (Boy Magistrate) ''நீதிவான் பையன்'' என அழைத்தனர்.

முத்து ஒரு வருடத்தின் பின்னர் இப்பதவியிலிருந்து விலகி சட்டப்படிப்பை மேற்கொண்டு, 22 வயதில் வழக்கறிஞராகத் தேறினார்.

27 ஆவது வயதில் சட்ட நிருபண சபையில் அங்கம் வகித்தார். 1862 ஆம் ஆண்டு தொடக்கம் தாம் இறக்கும் வரை சுமார் 17 ஆண்டுகள் சேர். முத்துக்குமாரசுவாமி தமிழர்களின் பிரதிநிதியாகத் திறம்படச் சேவையாற்றினார்.

முத்து பாரீஸ்டர் ஆவதற்காக இங்கிலாந்து சென்று லிங்கன்ஸ் கல்லூரியை நாடினார். அவருக்கு அனுமதி மறுக்கப்பட்டது.

அக்காலத்தில் கிறிஸ்தவரோ அன்றி யூதரோ மாத்திரமே பாரீஸ்டராகமுடியும்.

முத்து மனம் தளரவில்லை. அந்நாட்டுப் பிரமுகர்களுடன் தமது நிலையினை எடுத்துக் கூறியதன் விளைவாக முத்து பிரவேசச் சீட்டுப் பெற்றார்.

அவரின் நாவன்மை ஆங்கில மக்களை வியப்பில் ஆழ்த்தியது. முத்து சட்டம் படித்து பாரீஸ்டராக வெளிவந்தபோது அவர் ஆசியாவிலேயே முதலாவது பாரீஸ்டர் என்பது குறிப்பிடத்தக்கது.

சேர். முத்துகுமாரசாமி இங்கிலாந்தில் இருக்கும் போது அரிச்சந்திரன் கதையைஆங்கிலத்தில்மொழி பெயர்த்து மகாராணி விக்ரோரியாவுக்கு அந்நூலினைத் தாமே நேரில் சென்று வழங்கினார். மகாராணியாரின் பாராட்டினையும் பெற்றார்.

இவரின் கலைத்திறனுக்காகவும் ஆங்கிலப்பேச்சு வன்மைக்காகவும் மகாராணியார் இவருக்கு 'சேர்' பட்டத்தினைச் சூடிக்கௌரவித்தார்.

ஆசியாக் கண்டத்திலேயே முதலாவது 'பாரீஸ்டர்' பட்டம், முதலாவது 'சேர்' பட்டம் பெற்றவர் என்ற பெருமையை படைத்த இவர் மானிப்பாய் தந்த மாணிக்கமாகும்

மேற்குறிப்பிட்டவை போன்ற சேர். முத்துக்குமாரசுவாமியின் வாழ்க்கைக் குறிப்புகள் பலருக்கு தெரியாது.

அவரின் வாழ்க்கைக் குறிப்புகளை ஆராய்ந்துதொகுத்து 'மானிப்பாய் தந்த மாணிக்கம் சேர். முத்துக்குமாரசுவாமி' என்ற அவரின் வாழ்க்கை வரலாற்றினை எமக்குத் தந்திருக்கிறார் திரு. சின்னத்துரைகுமாரசாமி.

ஆசிரியர் பல ஆராய்ச்சிகளின்பின், இரத்தினச் சுருக்கமாக, எளிய நடையில் இவ்வாழ்க்கை வரலாற்றினைப் படைத்திருக்கிறார். அவரின் முயற்சி பாராட்டத்தக்கது. ★

1990 - 91 ஆம் ஆண்டுக்குரிய பிரமோதூத வருஷ வாக்கிய பஞ்சாங்கம் கிடைக்கப் பெற்றோம்.

யாழ்ப்பாணம் - கொக்குவில் இ. சி. இரகுநாதையர் அவர்கள் சகோதரரின் புத்திரர் திரு. இ. வெங்கடேச ஐயரால் கணிக்கப்பெற்றது.

வரும் பிரமோ தூத வருட
மழை கொஞ்சங்
கரும்பு மிகப்பலிக்குங்
கண்டாய் - திரும்பப்
பயமுண்டு பூமி பலியாது
வேந்தர்
நய முண்ட தாயிருப்பர்
நன்கு.

இப்படி புதுவருடப்பலன் கூறப்பட்டுள்ளது.

இப்பஞ்சாங்கப்படி, பங்குனி 31 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பின்னிரவு ஒருமணி 11 நிமிடங்களில் பிரமோதூத வருடம் பிறக்கின்றது. அன்று இரவு 9 - 10 மணி முதல் காலை 5 - 10 மணி வரை விஷு புண்ணியகாலமாகும் என்று கூறப்பட்டுள்ளது.

அடுத்த நாளாகிய பிரமோதூத வருஷம் சித்திரை முதலாம் திகதி சனிக்கிழமை வைகறையில் துயிலெழுந்து மனத்தூய்மையுடன் கடவுளை வழிபடுதல் வேண்டும் என்றும் கூறப்பட்டுள்ளது.

இப்பஞ்சாங்கத்தில், பிரமோதூத வருடத்தில் வரும் சுபமுகூர்த்தங்கள், தேவாலய மஹோற்சவங்கள், அலங்கார, சங்காபிஷேக பண்டிகை தினங்கள் மற்றும் வழமையான பயனுள்ள அம்சங்களும் விவரமாக இடம் பெற்றுள்ளன. ★

நூல்: பிரமோதூத வருஷ வாக்கியபஞ்சாங்கம்
கணித்தவர்: இ. வெங்கடேச ஐயர் அவர்கள்

# அநாதையாகப் பிறந்து அரசரும் போற்ற வாழ்ந்த கவிஞர்!

இளம் வயதில் தாய் தந்தையரை இழந்து தன்னுடைய உறவினர் ஒருவருடன் வளர்ந்தவர் ஜோன் மேஸ்பீல்ட் (John Masefield).

பதினான்கு வயதிலே கப்பலில் சிறுபணியாளனாகச் சேர்ந்தார். இவர் பாடசாலையில் அதிகம் கற்கவில்லை எனினும், வாசிக்கப் படித்தவுடனே நிறையப் புத்தகங்களை வாசித்து சகமாணவர்களுக்கு அருமையான கதைகளை இனிமையாகச் சொல்லக்கூடிய திறமை பெற்றிருந்தார்.

கடலில் கப்பற் பணியாளனாக வேலை செய்தபோது கடலை நன்கு நேசித்தவர். கடலின் அழுகையும் அதன் குரூரத்தன்மையையும் மாலுமிகளின் போக்கையும் நன்குணர்ந்தவர்.

ஆங்கிலக் கவிஞர் வரிசையில்

கப்பற்பணியாளாகவேலை செய்யும்போது அவருக்கு நிறைய வாசிக்கச் சந்தர்ப்பம் கிடைக்கவில்லை. இது அவருக்கு மிகவும் வேதனையையும் ஏக்கத்தையும் கொடுத்தது.

நிறைய வாசிக்கவேண்டும்; படிக்கவேண்டும் எனில் கப்பலை விடவேண்டியதுதான் என்ற முடிவுக்கு வந்தார்.

கடற்பயணத்தில் விருப்பு அதிகம் இருந்தபோதும் படிக்கவேண்டும் என்ற ஆவலால் வேலையைவிட்டு விலகினார்.

ஒருசில ஆடைகளுடனும் ஐந்தேஐந்து டொலர் பணத்துடனும் 1895இல் நியூயோர்க்கில் இறங்கினார். அங்கு ஏதாவது உதிரிவேலை (Odd Job) கிடைக்கும் என்று அலைந்த அவருக்குக் குதிரை லாயத்திலும் சிறு விடுதிகளிலும் சிறுபணியாள்வேலையும் கூலி (Porter) வேலையும் கிடைத்தது.

அந்த நாளில் நண்பர்கள் இருவருடன் மொட்டைமாடியின் ஓர் அறையில் வசித்து வந்தார்.

ஓய்வாக இருக்கும் இரவு வேளையில் தன் அறையில் இருந்து கதைகளையும், கவிதைகளையும் நிறைய வாசித்தார்; வாசிப்பது மட்டுமல்ல எழுதவும் செய்தார்.

இதேவேளையிற்தான் ஆங்கில மகாகவி சோசர் (Chaucer) என்பவரின் புத்திக் கூர்மையும் ஞானமும் கலந்த கவிதைகளை வாசிக்கும் சந்தர்ப்பம் கிடைத்தது. இவற்றை மிகவும் விரும்பிப் படித்தார். தாமும் ஏன் ஒரு கவிஞனாக வரமுடியாது என்ற எண்ணமும் இவருக்கு ஏற்பட்டது.

1875 இல் இங்கிலாந்திற் பிறந்த இவர் பாடிய கவிதைகளில் அதிகமானவை கடலைப்பற்றியும் கடல் பயணங்கள்பற்றியுமே உள்ளது. தமது கடற் பயணங்களில் அறிமுகமான தீரர்கள் பற்றியும் கவிதைகள் எழுதியுள்ளார்.

இவர் தனது தாய்நாட்டிற்கு தமது இருபத்திரண்டாவது வயதில் 1897 இல் திரும்பிவந்தார்.

இவரது புலமையின்சிறப்பை அறிந்து ஆங்கில அரசு இவரை ஆஸ்தானக் கவிஞனாக்கியது. ஆஸ்தான கவிஞனாக இருந்தபோதிலும் தன் சிறுவயதிற் பெற்ற அனுபவங்களை மறந்தாரல்லர்.

கப்பற் பணியாளராக இருந்த காலத்தை நினைத்து நினைத்துப் பல பாடல்கள் பாடியுள்ளார். இவர் தமது கவிதைகளில் பாய்மரக்கப்பல்களில் அழுகையும் அதன் தூய்மையையும் மிகவும் போற்றித் தற்கால நீராவிக் கப்பல்களின் கரித்தூசு போன்றவற்றினால் ஏற்படும் தூய்மையற்ற தன்மையையும் பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார்.

இறுதிக்காலத்தில் மீண்டும் கடலுக்குச் செல்லவேண்டும் அதன் இன்பத்தை நுகரவேண்டும் என்ற கருத்தில் Sea Fever என்னும் கவிதையை எழுதினார்.

கடல் அன்னையை என்றுமே மறவாத கவிஞர் இவர்.

ஆனால் அநாதை எனினும் அரசரும் போற்ற வாழலாம் என்பதை உலகுக்கு எடுத்துக் காட்டிய பேராசான் ஜோன் மேஸ்பீல்ட் ஆவார். ★

- உதங்கா -

### அதிசயம்

ஆயுதம் களைந்து
அமைதி காக்க
வந்தவர் போயினர்
வந்தது அமைதி!

— இளையவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நட்சத்திரங்கள் மீது மனிதன் ஆளுமை செய்ய சோதிடவியலைப் பயன்படுத்த முடியும்!

## சோவியத் சோதிட விஞ்ஞானி - திருமதி வெரா விலரொவா -

பாதிச்சுவரை அடைத்துக் கொண்டிருக்கும், கால நிலையைக் குறிக்கும் ஓர் உலகப்படம்.

சோதிடவியல் மற்றும் வான்கோள ஆய்வியல் பற்றிய தகவல் குறிப்புப் புத்தகங்கள், அகராதிகள் ஒரு கல்குலேட்டர் — இவை யாவும் இந்த இல்லத்தின் தலைவியான வெரா விலரொவா பயன்படுத்தும் சாதனங்களாகும்.

இவர் மாஸ்கோ பல்கலைக்கழகத்தில் தத்துவவியல் துறையிலும் மொழியியல் துறையிலும் பட்டம் பெற்றவர். இவருக்கு சுமார் 20 அயல் மொழிகள் தெரியும்.

திருமதி வெரா, பிரபல சோவியத் சோதிடர்களில் ஒருவராக விளங்குகிறார்.

அவருடனான ஒரு பேட்டி இங்கு பிரசுரமாகிறது.

- நன்றி: புதுப்புனல்)

● திருமதி வெரா:

— இந்த உலக வாழ்க்கையின்மீது அண்ட சராசரங்கள் செலுத்தும் செல்வாக்கைப் பற்றி ஆராயும் ஒரு விஞ்ஞானமே சோதிடக்கலை.

நான் ஒரு பொருள் முதல் வாதி. இன்னும் சொல்லப் போனால் முழுமையான மார்க்ஸீயவாதி.

எனது நம்பிக்கைகள் அறிவையே சார்ந்திருக்கின்றன.

● மனிதர்களின் கதிப் போக்குகளில் கிரகங்கள் செல்வாக்கு செலுத்துவதை எவ்வாறு விளக்குகிறீர்கள்?

— ஆண்டின் பல்வேறு பருவங்களில் பிறப்பவர்கள் உடற்கூறு ரீதியிலும் முக்கிய உளவியல் ரீதியிலும் கூட மாறுபட்டிருக்கிறார்கள் என்பதை நீங்கள் ஒப்புக்கொள்கிறீர்களா?

உதாரணமாக, ஊட்டச் சத்துக்கள் குறைவாக உள்ள பருவமான இளவேனில் காலத்தில் பிறக்கும்குழந்தை, கோடைக்காலத்தில் பிறக்கும் குழந்தையைக் காட்டிலும் சில குறிப்பிட்ட இயல்புகளில் மாறுபட்டிருக்கிறது.

அதேபோல் கோடையில் பிறக்கும் குழந்தை குளிர் காலத்தில் பிறக்கும் குழந்தையைக் காட்டிலும் மாறுபட்டிருக்கிறது.

ஆண்டில் பல பருவங்களில் மட்டும் இந்த மாற்றங்கள் ஏற்படுகின்றன என்பதில்லை.

பூமி சுற்றிக்கொண்டிருப்பதின் காரணமாக பூமியின் மேற்பரப்பில் உள்ள எந்த ஒரு பகுதியும் ஒருகணம்கூட விண்வெளியில் ஒரே இடத்தில் இருப்பதில்லை.

'பிறப்புக் கணங்களின்' எண்ணிக்கையைப்போலவே குணாம்சங்களும் கதிப் போக்குகளும் பெருமளவு மாறுபட்டுள்ளன.

கிரகங்கள், சூரியன், சந்திரன் முதலியவற்றின் நிலைப்பாடு புதிதாகப் பிறக்கும் குழந்தையின் கதிப் போக்கை நிர்ணயிப்பது மட்டுமல்லாமல்,குறிப்பிட்ட கணத்தில் தோன்றும் எல்லாவகையான அண்டகோள நிலையையும் முடிவுசெய்கிறது.

● நல்லது. நட்சத்திரங்களின் நிலைப்பாடுகள் மனிதனின் கதிப்போக்கை முடிவு செய்கின்றன என்று கூறுகின்றீர்கள். அவனைப் பொறுத்தவரை பிறப்பில் இருந்து இறுதிவரை அவனது கதிப்போக்கு முன்கூட்டியே தீர்மானிக்கப்பட்டுவிடுகிறது. எதையும் நம்மால் மாற்ற முடியாது என்றால் சோதிடக் கலையின் நோக்கம் தான் யாது?

— ஒருவன் பிறக்கும் போதே எது, எங்கே, எப்போது நடைபெறவேண்டும் என்பதை அவனால் தீர்மானிக்கமுடியாது என்பது உண்மைதான்.

ஆனால் அவன் திருமணம் செய்துகொள்வது, நகருக்கு வெளியே ஒரு கிராமத்தில் வளர்ந்து ஆளாவதற்குப் பதிலாககாரில் அடிபட்டிச் சாவது போன்ற எல்லாவற்றுக்குமே அவனது சோதிடவியல் ரீதியிலான அறியாமையே காரணமாகும்.

'நட்சத்திரங்கள் நம்மை திசைவழிப்படுத்துகின்றன. ஆனால் நிர்ப்பந்திப்பதில்லை.'

'முட்டாள்கள் நட்சத்திரங்களால் ஆளப்படுகிறார்கள். ஆனால் ஒரு புத்திசாலி நட்சத்திரங்களையே ஆளுகின்றான்'—

இப்படிப் பண்டைக்காலத்தவர்கள் சொல்வது வழக்கம்.

கிரகங்களின் செல்வாக்கு நமது பல்வேறு இயல்புகளைத் தாண்டுகிறது. இவற்றாலேயே அன்றாட வாழ்க்கையிலும் சரி, முக்கியமான முடிவுகளை எடுப்பதிலும் சரி நாம் வழி காட்டப்படுகிறோம்.

இதுதான் நட்சத்திரங்கள் உண்மையில் நம்மை ஆளுமை செய்கின்றன என்பதாகும்.

ஆனால் நமது உந்துணர்வுகளை அறிவு பூர்வமாகப் பயன்படுத்தினோமேயானால், இந்த உலகத்திலேயே மிகவும் சக்தி வாய்ந்த ஜனனியான மனித மூளையைச் சரியாகப் பயன்படுத்துவதன் மூலம் நட்சத்திரங்கள் மீது நாம் ஆளுமை செய்யலாம்.

ஒரு சமயம் நான் அறுவைச் சிகிச்சைப் பிரிவில் பணிபுரியும் தாதி ஒருத்தியிடம் சோதிடவியலின்படி அறுவைச் சிகிச்சை செய்யக் கூடாத நாட்களில் செய்யப்படும் அறுவைச்சிகிச்சைகளை ஆராயும்படி அவளிடம் கூறினேன்.

பல மாதங்கள் கூர்ந்து கவனித்த பிறகு அந்தக் குறிப்பிட்ட தினங்களில் மேற்கொள்ளப்பட்ட எண்ணற்ற அறுவைச் சிகிச்சைகள் தோல்வி அடைந்ததாக அத்தாதி வியப்புடன் கூறினாள்.

தனது முடிவுகளை அவள் டாக்டரிடம் தெரிவித்தாள்.

அந்த 'மோசமான' நாட்களில் சிறந்த மருத்துவ நிபுணர்களை அந்த மருத்துவமனை நிர்வாகிகள் அழைக்கத் தொடங்கினர். முடிவுகள் முற்றிலும் விபரீதமாகவே இருந்தன. அந்த நிபுணர்கள் மேற்கொண்ட அறுவைச் சிகிச்சைகளும் தோல்வியிலேயே முடிந்தன.

1971 ஜூன் வரையிலும் சோதிடக்கலை குறித்து நான் ஐயப்பாடு கொண்டு இருந்தேன். அப்போது நான் பிரான்ஸில் பணி புரிந்து வந்தேன்.

பிரான்ஸில் அப்போது ஒவ்வொரு மாதமும் சோதிடவியல் ரீதியான முன்கணிப்புக்களை பிரசுரித்து வந்தனர்.

இன்னும் ஒரு மாதத்தில் ரஷ்யா துயரத்தில் மூழ்கும் என்று 1971 மேமாதம் வாசித்தேன்.

தாயகம் திரும்பிய நான் அத்துயரத்தில் பங்கு கொண்டேன். மூன்று ரஷ்ய விண்வெளி வீரர்கள் தரையிறங்கும் போது இறந்தனர்.

பாரிசுக்குத் திரும்பியவுடன் முதல் வேளையாக சோதிடக் கலை புத்தகங்களை வாங்கினேன். அவற்றில் மறை அம்சங்கள் ஏதுமில்லை. அவை யாவும் முற்றிலும் இயற்பியலையும் கணிதவியலையுமே அடிப்படையாகக் கொண்டவை.

● சோதிட அறிவை எல்லாராலும் பெறமுடியுமா?

— ஓ. நிச்சயமாக முடியும். பல ஆண்டுகாலம் இடைவிடாது ஆராய்ச்சி செய்த பின்னரே இத்துறையில் உயர் நிலையை எட்ட முடியும். எனினும் எவரும் சோதிடத்தின் அடிப்படைகளைக் கற்றுக் கொள்ளவும் அவற்றை நடைமுறையில் பயன்படுத்தவும் முடியும். ★

---

## அன்பினில் உலகம்

அன்பினிலே இருப்பவன் இறைவன்
அன்பே வாழ்வின் அணையாத ஜீவன்
— (அன்)

வளரட்டும் வளரட்டும் அன்பினில் உலகம்
சிறக்கட்டும் சிறக்கட்டும் மானிடர் நெஞ்சம்
வாழ்வே வாழ்வே மேன்மைகள் உனக்கே
வருமே வருமே நிம்மதி தினமே.
— (அன்)

தீராத இன்னல் தானாகத் தீரும்
ஆறாத துன்பம் தேனாக மாறும்
சாந்தியும் அமைதியும் உண்மையும் வளரும்
சாபங்கள் கோபங்கள் பாவங்கள் மாளும்.
— (அன்)

- திருமகன்

## தினமும் வாழ்வு செழிக்கட்டுமே!

சிந்தனை ஆயிரம் மலரட்டுமே
சீரிய வாழ்வு அலரட்டுமே
நிந்தனை என்றும் ஒழியட்டுமே
நிம்மதி எங்கும் வழியட்டுமே!

பொறுமையு மன்பும் பொலியட்டுமே
பொய்யும் புன்மையும் நலியட்டுமே
சிறுமையு மேக்கமும் செல்லட்டுமே
சீர்த்தியும் மேன்மையும் வெல்லட்டுமே!

துன்பமும் துயரமும் போகட்டுமே
தூய்மையும் வாய்மையும் ஆகட்டுமே
இன்பமும் எழிலும் இணையட்டுமே
இனிமையும் இரக்கமும் பிணையட்டுமே!

செல்வமும் கல்வியும் சிறக்கட்டுமே
சிந்தனை ஆயிரம் பிறக்கட்டுமே
இல்லமும் வாழ்வும் இனிக்கட்டுமே
ஈகையும் இரக்கமும் பனிக்கட்டுமே!

ஈரமும் நெஞ்சத்தில் நிறையட்டுமே
இன்னலும் எளிமையும் மறையட்டுமே
வீரமும் விறலும் விளங்கட்டுமே
வித்தையும் ஞானமும் துலங்கட்டுமே!

தர்மமும் நீதியும் தழைக்கட்டுமே
தாபமும் கோபமும் பிழைக்கட்டுமே
வர்மமும் வஞ்சமும் போகட்டுமே
வர்க்கமும் சாதியும் சாகட்டுமே!

எண்ணமும் நன்மையும் சேரட்டுமே
ஏக்கமும் பேதமும் பாறட்டுமே
திண்ணமும் திறமையும் திகழட்டுமே
தினமும் வாழ்வு செழிக்கட்டுமே!

— சிங்கையாழியான்

---

# அருட்பார்வை மூலம் ஆத்மீக பணி புரிந்த ஈழத்துச் சித்தர் யோகர் சுவாமிகள்!

## வண்ணை - ந. சண்முகரத்தினம் -

நாங்கள், நண்பர்கள் நால்வர், யாழ் இந்துக்கல்லூரி காங்கேசன்துறை முகப்பிலே படிக்கட்டிலிருந்து பலவாறாகப் பேசிக்கொண்டிருந்தோம். அப்பொழுது சிவலிங்கப் புளியடியில் யோகசுவாமிகள் வந்து கொண்டிருந்ததைக் கண்ட ஒரு நண்பர் —

'வாறார் சுவாமியார். எங்க வீடுகள் அவருக்குத் தெரியாது; பணக்கார வீடுகள் தான் தெரியும்' என்று வெந்து புழுங்கினான்.

அவன் சொன்னதை ஒட்டியும் வெட்டியும் நாங்கள் விவாதிக்கச் சுவாமியாரும், நாமிருக்கும் இடத்தை வந்தடைந்தார்.



யோகர் சுவாமிகள்

வந்தவர் குறை கூறிய நண்பனை விரலாற் சுட்டி —

'நாளைக்கு மத்தியானம் இந்தப் பரதேசிக்கு உன்ரை வீட்டிலே சாப்பாடு. இல்லை என்று சொல்லப் போறியோ?' —

என்றொரு போடு போட்டார்.

'ஏன் இல்லை என்று சொல்லப்போறன். நீங்கள் எங்கள் வீட்டிற்கு வரக் கொடுத்திருக்கவல்லோ வேணும்'

சுவாமியாரும் 'சரி' என்று சொல்லிவிட்டுப் போயிட்டார்.

'உன்ரை வாய்க்கொழுப்பால் வந்தவினை' போய்ச் சோத்தைப் போடு. நாளை மாலை நடந்ததை எங்களுக்கு வந்து சொல்லு' என்று சொல்லி வழியனுப்பி விட்டோம்.

அடுத்த நாள் மாலை அதே இடத்தில் நால்வரும் சந்தித்தோம். அன்று மத்தியானம் நடந்ததை நண்பன் சொன்னவாறே தருகிறேன்.

திட்டமிட்டபடி பகல் 12 மணிக்கு சுவாமியார் வீட்டுக்கு வந்தார். சில உபசார வார்த்தைகள் சொல்லி, வீட்டிலுள்ளோரை அறிமுகப்படுத்திக் களைப்பாற வைத்து சாப்பாட்டிற்கு அமர்த்தினேன். சாப்பாடு படைத்ததும் உணவுப்பதார்த்தங்களைச் சுற்றிப் பார்த்தார். பருப்பு, நெய், பொரிக்கறி, வடை, பாயாசம், பலாப்பழம், ......இப்படித் தடல்புடலாய்.

'இந்தப் பரதேசிக்குச் சாப்பாடு போட நீ எவ்வளவு சிரமப்பட்டிருப்பாய். டாக்டர்...... வீட்டை போனேனென்றால் எனக்கு எந்த நேரமும் ஒரு பிடி சோறு இருக்கும்' என்றார் சுவாமியார்.

'களவெடுக்கும் பொழுது கையும் மெய்யுமாய்ப் பிடிபட்டமாதிரி ஒரு மனத் தளர்ச்சி எனக்கேற்பட்டது நான் குறை கூறியது எவ்வாறோ சுவாமிக்குத் தெரிந்திருக்க வேணும் என்ற நம்பிக்கையை என்னால் தவிர்க்க முடியவில்லை.

'இல்லைச் சுவாமி நீங்கள் குறைகுற்றங்களைப் பொருட்படுத்தாது அடிக்கடி இங்கே வந்து போகணும்' என்றேன். 'கவலைப்படாதே, நான் அடிக்கடி வருகிறேன்' என்று சொல்லிவிட்டு சாப்பிடத் தொடங்கினார்.'

★ ★ ★

திருப்பெருந்திரு ஆறுமுக நாவலரின் மறைவின் பின் தம்மை நெறிப்படுத்த சான்றோரில்லாது நம் நாட்டுச் சைவத் தமிழ் மக்கள் திகைத்திருந்த வேளையில் யாழ்ப்பாணத்திலே ஒரு சித்தர் பரம்பரை தோன்றி அண்மைக் காலம் வரை சைவமக்களின் சமயப் பற்றை உறுதிப்படுத்தியது.

இச் சித்தர் பரம்பரையை உருவாக்கியவர் கடையிற் சுவாமிகள் ஆவார். அவருடைய சீடர்களுள் செல்லப்பாச் சுவாமிகள் முக்கியமானவர். யோக சுவாமிகள் செல்லப்பா சுவாமிகளின் சீடர்.

கடையிற் சுவாமிகளும் செல்லப்பாச் சுவாமிகளும் செய்த சித்துக்களும் எதிர் வருவனவற்றை ஏற்கனவே அறிந்து சொன்ன அற்புத வாக்கியங்களும் நம்மவரிடத்திலே செவி வழக்காக வந்த கதைகளாக நிலவியிருக்கின்றன.



ஈழத்துச் சித்தர் பரம்பரையை உருவாக்கிய கடையிற்சுவாமிகள்.

யோக சுவாமிகளும் இவர்களைப் போல் செயற்கரிய செயல்களைச் செய்தாரென்றும், சாதாரண மக்களால் அறிதற்கரியனவற்றை அறிந்து செயற்பட்டார். ★

சமயம்

---

## பொது அறிவுப்போட்டி இல. 36

### பரிசுபெற்றவர்கள் விவரம்:

**முதலாவது பரிசு.**

பி. நித்யா,
'சிவாகி டியூசன்' 05, சிவன் கோயில் தெரு,
சாவகச்சேரி.

**இரண்டாவது பரிசு:**

யோ. பரமேஸ்வரி,
தம்மளை, அளவெட்டி தெற்கு,
அளவெட்டி.

**மூன்றாவது பரிசு:**

சி. கலா,
''ஸ்ரீகாந்தி'' முதலி ஒழுங்கை,
கொக்குவில் மேற்கு, கொக்குவில்.

**பொது அறிவுப்போட்டி இல: 36 சரியான விடைகள்:**

1. சுத்தானந்த பாரதி, 2. சனி, 3. சீனா, 4. புது டில்லி, 5. ஆபிரிக்கா, 6. அம்பு, 7. தக்காளிவிதை 8. பெண், 9. பாரி, 10. நமீபியா, 11. இங்கிலாந்து 12. கோர்ப்பச்சேவ்.

---

# நடமாடும் தெய்வம்

## - கந். தர்மலிங்கம் -

சிறுகதை

அன்று புதன்கிழமை. டாக்டர் சுகுமார் அந்த வயோதிபர் மடத்துக்கு வருகைதரும் நாளாகும். வாரத்தில் மூன்று நாட்கள் அவர் அங்கே வருவார். அவர் வருவதென்றால் அங்கேயுள்ள வயோதிபர்களின் உள்ளங்கள் சிரிக்கும். தகப்பன் பிள்ளை உறவு மலரும்.

''ஐயா, சந்தோஷந்தானே!'' என்று கேட்பார். அந்த வார்த்தைகளில் நிரம்பியிருக்கும் கருணையினால் அவர்களும் தங்களுடைய வேதனைகளை மறந்து.

''ஆம் ராசா'' என்பார்கள்.

வாசலில் மோட்டார் சைக்கிளின் சத்தம் கேட்கிறது. சுமதி என்னும் பெயருடைய தாதி [illegible] டரின் அறைக்கதவுகளைத் திறந்துவிட்டாள்.

சுகுமார் அறைக்குள் சென்று முதலில் அங்கேயுள்ள விநாயகர் சிலைக்கு முன்னால் சில நிமிடங்கள் கண்களை மூடி நின்றிருந்தான்.

பின்னர் மக்கள் சேவையே மகேசன் சேவையாகக் கருதிய சுவாமி விவேகானந்தரின் படத்தையும் வணங்கிவிட்டு கதிரையில் உட்கார்ந்தான்.

மேசையில் இருந்த மணியை அடித்துவிட்டு அன்றைய பத்திரிகையின் தலைப்புச் செய்திகளை மேலோட்டமாக வாசித்தான்.

''கெதியாய் நட. சாகப் போற ஆள்மாதிரிக் கிடக்குது.''

அந்த வார்த்தைகள் கூரிய ஆயுதங்களாக அவனுடைய இதயத்தைத் துளைத்தது. ஆத்திரத்தில் அவனுடைய முகம் சிவந்தது.

சுமதி ஒரு வயோதிபரின் கையைப் பிடித்து இழுத்து வந்து சுகுமாருக்கு முன்னால் போடப்பட்டிருந்த கதிரையில் உட்கார வைத்தாள், பின்னர் சற்றுத்தள்ளி நின்றிருந்தாள்.

சுகுமார் அவளை நோக்கியபடி,

''யாரைப் பார்த்து சாகப் போகிற ஆள்மாதிரிக் கிடக்குது என்று சொன்னீர்?

பண்பாக நோயாளிகளோடு பழகத் தெரியாவிட்டால், அல்லது விருப்பமில்லாவிட்டால் இந்த வேலையை விட்டுவிட்டுப் போகவேண்டியதுதானே.

பிறக்கும்போது உறவு முறை சொல்லி நெருங்கி வந்தவர்கள் இறக்கும்போது உறவு சொல்லாமலே தூர நிற்கும் கொடுமைக்கு ஆளாக்கப்பட்டிருக்கும் இவர்களின் நிலையை ஒரு கணம் நீர் யோசித்துப் பார்த்தீரா?

அப்பா, அம்மா என்று பிள்ளைகள் அழைப்பதை காதுகுளிரக் கேட்டு மகிழ்ந்தவர்கள், அந்தப் பிள்ளைகள் இவர்களை சுமையாகக் கருதி துரத்திவிட்ட ஏக்கங்கள் இவர்களின் உள்ளத்தில் எத்தனை பாரமாக இருக்கும் என ஒரு கணம் யோசித்துப் பாரும்.

ஆண்டவனுக்கு அடுத்தபடியாக மனிதன் கையெடுத்துக் கும்பிடுவது வைத்தியர்களைத்தான். அந்தப் புனிதமான தொழிலுக்கு வக்கிரமான உணர்வுகளால் களங்கம் ஏற்படுத்திவிடக்கூடாது. நோயாளிக்கு மருந்துகளை விட நாம் காட்டுகின்ற அன்புதான் அவசியமானது இனிமேலாவது இரக்கசிந்தையுடன் நடந்துகொள்ளும்''.

சுமதியின் கண்களிலிருந்து நீர் பொலபொலவெனச் சொரிந்தது. டாக்டர் ஏசியதற்காக அவள் அழவில்லை. ஒரு நடமாடும் தெய்வத்தை கண்ட ஆனந்தக்கண்ணீர் தான் அது.

(யாவும் கற்பனை)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தான்சன் கல்வி நிலையம்**

தெல்லிப்பழை.

ஆண்டு 11, 10, 9 புதிய பிரிவுகள்

நடைபெறுகின்றன.

விஞ்ஞானம் — திரு. J. R. சூரி
கணிதம் — திரு. மகேந்திரன், மதி
தமிழ் — திரு. கணேஷ்
சமூகக்கல்வி — திரு. திருக்குமார்
வர்த்தகம் — திரு. வரதன்
ஆங்கிலம் — திரு. ஹரிதாஸ்



# சஞ்சீவி சஞ்சிகை

07 - 04 - 1990 சனிக்கிழமை



**தான்சன் கல்வி நிலையம்**

தெல்லிப்பழை

A/L DAY CLASS

நடைபெறுகின்றன.

பொருளியல் — திரு. சண்
வர்த்தகம் — திரு. சிவா
கணக்கியல் — திரு. யோகன்
— திரு. வாசன்
அளவையியல் — திரு. சயந்தன்
தமிழ் — திரு. கணேஷ்
இந்து நாகரீகம் — திரு. MR.


# கிழ.ஐரோப்பிய ஜனநாயக எழுச்சி அலையில்

# காஸ்ரோவின் கியூபா தப்பிப் பிழைக்குமா?

## அன்று புரட்சியை 'ஏற்றுமதி' செய்த நாடு இன்று உலக அரங்கில் ஒதுங்கி வாழும் நிலை

சோவியத் யூனியனிலும் அதன் தோழமை நாடுகளான ஏனைய கிழக்கு ஐரோப்பிய நாடுகளிலும் ஏற்பட்டுவரும் ஜனநாயக எழுச்சி அலையினால் கம்யூனிஸம் ஆட்டம் கண்டுள்ள இந்த வேளையில் கியூபாத் தலைவர் பிடல் காஸ்ட்ரோ (Fidel Castro) தமது நாட்டில் பெரும் அரசியல் சவாலை எதிர்நோக்க நேரிடும் என்று அரசியல் அவதானிகள் கருதுகிறார்கள்.

பூகோளரீதியில் கிழக்கு ஐரோப்பிய நாடுகளின் எல்லையில் கியூபா அமைந்திருக்குமானால் ஏற்கனவே கிழக்கு ஜேர்மனியையும் ருமேனியாவையும் மற்றும் கிழக்கு ஐரோப்பிய நாடுகளையும் உலுக்கிய ஜனநாயக எழுச்சி அலைக்குள் கியூபாவும் இதுவரை சிக்குண்டிருக்கும்.

எழுச்சி அலையின் தாக்கம் நீண்ட அத்வாண்டிக்கைக் கடந்து வரவேண்டியிருப்பதால் கியூபாவில் தற்போதுதான் சிறு சலசலப்பு ஆரம்பித்திருக்கிறது.

பிடல் காஸ்ட்டோ இறக்கும்வரை அவரைப் பதவியில் இருந்து வீழ்த்த முடியாது. என்ற நிலை கடந்தவருடம் இருந்தது. ஆனால் தற்போது இது கியூபாவில் கேள்விக்குரியதாக விவாதத்துக்குரியதாகமாறிவருகிறது.

### அமெரிக்காவுக்கு தலையிடி

1959 ஆம் ஆண்டு கியூபாவில் கம்யூனிஸ ஆட்சி ஏற்பட்ட நாளிலிருந்து அமெரிக்காவுக்குத்தலையிடிகொடுத்து வரும் நாடாக கியூபா இருந்து வருகிறது. தனது நாட்டுடன் திருப்தி அடையாமல் மூன்றாவது உலக நாடுகளுக்கும் லத்தீன் அமெரிக்க நாடுகளுக்கும் புரட்சியை ''ஏற்றுமதி', செய்துவந்தார் காஸ்ட்ரோ.

காஸ்ட்ரோவின் சகாவான சேகுவேரா பொலிவியாவில் கொல்லப்படும் வரை அமெரிக்கா பெரும் நெருக்கடியைஎதிர்நோக்கியிருந்தது. 1962 இல் கியூபா ஏவுகணை நெருக்கடியின்போது அமெரிக்காவும் சோவியத் யூனியனும் போர் விழிம்புக்கு தள்ளப்பட்டதும் ஞாபகமிருக்கலாம்.

சோவியத் யூனியனிலும் மற்றும் கிழக்கு ஐரோப்பிய நாடுகளிலும் ஏற்பட்டுவரும் மாற்றம் குறித்து கியூபா கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய



பிடல் காஸ்ரோ

கமிட்டி கூடி ஆராய்ந்துள்ள போதிலும், ஜனநாயக சீர்திருத்தங்கள் தொடர்பாக கியூபாவின் கொள்கையில் உடனடி மாற்றம் ஏற்படும் அறிகுறி எதுவும் தென்படவில்லை. தற்போது கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் ஏற்பட்டுவரும் அரசியல் மாற்றங்களால் கியூபா தனித்து விடப்படலாம் என்று கருதப்படுகிறது.

அமெரிக்கக் கரையான தென் புளோரிடாவிலிருந்து சில மைல்கள் தூரத்தில் உள்ள கியூபாவின் பொருளாதாரம் நீண்டகாலமாக கிழக்கு ஐரோப்பிய நாடுகளின் தயவிலேயே இருந்து வருகிறது.

கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் இருந்து கியூபா பெரும் உதவிகளைப் பெற்றுவருகிறது. அதே சமயம் கிழக்கு ஐரோப்பிய நாடுகளுக்கும் கியூபாவுக்கும் இடையிலுள்ள சாதகமான வர்த்தக ஒழுங்குகளே, அமெரிக்காவின் பொருளாதாரத் தடைகளுக்கு மத்தியிலும் கியூபாவின் பொருளாதாரத்தைத் தாக்குப்பிடித்து வைத்திருந்தன.

இந்த சாதகமான வர்த்தக ஒழுங்குகளுக்கு அமைய சர்வதேச சந்தைவிலையை விட நான்கு மடங்கு அதிக விலைக்கு சோவியத்யூனியன் கியூபாவிடம் இருந்து சீனியை வாங்குகிறது. அதேபோன்று தனது எண்ணெய்யை சர்வதேச சந்தைவிலையைவிட மிகக்குறைந்த விலையில் கியூபாவுக்கு விற்கிறது.

சீனி ஏற்றுமதிமூலம் சோவியத் யூனியனில் இருந்து குறைந்தவிலைக்கு வாங்கும் எண்ணெய்யை உலகநாடுகளுக்கு கூடிய விலைக்கு விற்பது மூலமுமே கியூபா தற்சமயம் உயிர் வாழ்ந்துவருகிறது.

### பொருளாதார வீழ்ச்சி

1980 ஆம் ஆண்டு சர்வதேசச் சந்தையில் எண்ணெய் விலையில் வீழ்ச்சி ஏற்பட்டதால் கியூபா தனது வருமானத்தில் பலகோடி டாலர்களை இழக்க ஆரம்பித்தது. அத்துடன் கியூபாவில் பிரதான உற்பத்தியான சீனியும் உலக சந்தையில் அதிகவிலை போகவில்லை.

1980 ஆம் ஆண்டு கியூபாவின் பொருளாதாரம் ஆட்டம் காண ஆரம்பித்தபோது பிடல் காஸ்ட்ரோ வர்த்தகத் துறையில் சில சீர்திருத்தங்களைக் கொண்டுவர நடவடிக்கை எடுத்தார். 1986ஆம் ஆண்டு இது கைவிடப்பட்டது. இத்திட்டம் விலைவாசி உயர்வுக்கும் ஊழல்களுக்கும் வித்திடுவதாக காஸ்ட்ரோ அறிவித்திருந்தார்.

### காஸ்ட்ரோ எதிர்ப்பாளர்

கடந்த ஆண்டு ஜூலை மாதம் கியூபாவில் இராணுவ உயர் அதிகாரி ஒருவருக்கும் மற்றும் மூன்று அதிகாரிகளுக்கும் மரண தண்டனை விதிக்கப்பட்டது. போதைப் பொருள் கடத்தல், ஊழல் ஆகியவற்றில் இவர்கள் சம்பந்தப்பட்டனர் என்று கியூபா அரசு குற்றஞ்சாட்டி இருந்தது. ஆனால் இவர்கள் நால்வரும் காஸ்ட்ரோவுக்கும் அவரது சகோதரருக்கும் எதிரானவர்கள் என்று வெளிநாடுகளில் அஞ்ஞாதவாசம் புரியும் கியூபன் பிரஜைகள் தெரிவிக்கின்றனர். காஸ்ட்ரோவின் சகோதரர் ராவுல் காஸ்ட்ரோ தற்போது கியூபாவில் பாதுகாப்பு அமைச்

**உலகஉலா**

சராக இருக்கிறார். ஜனாதிபதி காஸ்ட்ரோவின் அரசியல் வாரிஸாக அவர் தற்போது கருதப்படுகிறார்.

கியூபா ஒரு அயன மண்டல நாடாக உள்ள போதிலும் அங்கு போதிய மரக்கறி, பழவகைகள் கிடையா. கோதுமைமா, பாண், ரேசர் பிளேட், டெலிவிஷன் ஆகியவற்றுக்கு அங்கு பெரும் தட்டுப்பாடு நிலவுகிறது.

கியூபாவுக்கு தற்போது 700 கோடி டாலர் வெளிநாட்டுக்கடன் இருந்து வருகிறது. கியூபாவின் 90 சத வீதமான ஏற்றுமதி - இறக்குமதி தொடர்புகள் கிழக்கு ஐரோப்பிய நாடுகளுடன் இருப்பதால் கியூபாவின் கடன்சுமை மேலும் அதிகரிக்கும் ஆபத்து உருவாகி வருகிறது.

கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் தற்போது ஏற்பட்டுள்ள அரசியல் மாற்றங்கள் காரணமாக கிழக்கு ஐரோப்பிய நாடுகள் இனி அமெரிக்காவுடனும் மற்றும் மேற்கு நாடுகளுடனுமே கூடிய வர்த்தகத் தொடர்புகளை ஏற்படுத்தும் என்று கருதப்படுகிறது.

ஏற்கனவே பொருளாதாரத்துறையில் முடங்கிப்போய் உள்ள கிழக்கு ஐரோப்பிய நாடுகள் கியூபாவுக்கு தொடர்ந்து சலுகை அடிப்படையில் பொருள்களை விற்கும் நிலையில் இல்லை.

சோவியத் யூனியன் இராணுவ உதவியாகவும் நேரடிப் பொருளாதார உதவியுமாக கியூபாவுக்கு வருடா வருடம் 550 கோடி டாலர்களைச் செலவிடுகிறது.

சோவியத் யூனியனும் ஏற்கனவே பொருளாதாரத் துறையில் நலிவுற்றிருப்பதால் கியூபாவுக்குத் தொடர்ந்து உதவுவதில் சோவியத் அதிபர் மிக்கெய்ல் கோர்பச்சேவ் சில நிர்ப்பந்தங்களை எதிர்நோக்கலாம் என்று அவதானிகள் நம்புகின்றனர்.

அமெரிக்காவின் தென் புளோறிடாவில் மட்டும் தற்போது 7 லட்சம் கியூபன் அகதிகள் தங்கியுள்ளனர்' கடந்த காலங்களில் காஸ்ட்ரோ ஆட்சியில் வெறுப்புக் கொண்டு இவர்கள் கியூபாவை விட்டு வெளியேறியவர்கள்.

எனினும் முன்னால் கிழக்கு ஜேர்மன் தலைவர் கொனேக்கர் (Honecker), கொலை செய்யப்பட்ட ருமேனியத் தலைவர் சிசெஸ்கு (Ceausescu) ஆகியோருடன் ஒப்பிடுகையில் கியூபா ஜனாதிபதி காஸ்ட்ரோ நாட்டு மக்களுடன் ஓரளவு நெருக்கமான உறவுகளை வைத்திருக்கிறார், சோஷலிசத்தில் உறுதியான நம்பிக்கை வைத்திருக்கிறார்.

தற்போதைய ஜனநாயக எழுச்சி அலையில் கடைசியாக நின்று பிடிக்கக்கூடிய நாடுகளில் கியூபாவும் ஒன்று என்று கருதப்படுகிறது. ★

## சொற்சிலம்பம்



இங்கே வெட்டுக

சொற்சிலம்பம் இல: 111
சஞ்சீவி,
292/ 2, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

பெயர்: ..............................................
விலாசம் ..............................................
..............................................

## போட்டி இல: 111

**இடமிருந்து வலம்:**

1. கற்பனையில் கட்டப்படுவது 5. துப்பரவு செய் 6. கொடு 7. நாடகமேடை 8. ஊழல்களுக்குக் காரணமானது இது 9. உலகம் 10. துன்பம் 11. காற்று 13. ஆழமான கிடங்கு 14. புத்தமதத்தை அறிமுகப்படுத்தியவர் 16. மலை உருவாக உதவுகிறது 17. சனி.

**மேலிருந்து கீழ்:**

1. தேன் நிரம்பிய மலர் 2. தேன் கூட்டுக்கு முதல் எழுத்து இல்லை 3. கோயிலுக்குக் கம்பீரம் தருவது 4. தடி (கட்டத்தினுள் 4 இருப்பதாக எடுத்துக் கொள்க) 6. கடல் 7. அறியாமைப் பெருக்கம் 10. சந்திரன் 11. இரவென்றால் இதுவும் இருக்கும் 12. அரசன் 13. கடைசிச் சொல் சேர்த்தால் மயில் போடும் சத்தம் 15. வில்.

**நிபந்தனைகள்**

சரியான விடைகளை அனுப்பியவர்களில் மூன்று பேர் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்பட்டு பரிசுகள் வழங்கப்படும். கடிதம் கிடைத்தவுடன் நேரில் வந்து பணத்தைப் பெற்றுக் கொள்ளலாம்.

ஆசிரியரின் தீர்ப்பே முடிவானது. உதயன் / சஞ்சீவி ஊழியர்கள் கலந்து கொள்ள முடியாது.

படிவத்தைக் கத்தரித்து அஞ்சல் அட்டையில் ஒட்டி அனுப்பினால் மாத்திரமே ஏற்றுக்கொள்ளப்படும்.

முடிவு திகதி: 11 - 04 - 1990

## புனிதப் பயணம்

நட்சத்திரங்களோடு
வாழும் நண்பனுக்கு,
உனது நம்பிக்கைகள்
பொய்த்துப் போகவில்லை!
பார்த்தாயா
நானும் நீயும்
உணர்ந்தவற்றை
இந்த
உலகமும்
உணரத் தொடங்கிற்று!
நானும் நீயும்
தேடியதை
இந்த உலகமும்
தேடுகிறது...
எங்கள்
இலட்சியப் புத்தகத்தின்
நம்பிக்கைப் பக்கங்கள்
மறுபதிப்புச்
செய்யப்படுவதை
பார்த்தாயா?
வரலாறு
தனது தீர்ப்பினை எழுத
உனது பக்கங்களையும்
புரட்டிப்பார்க்கும்!
காலம் தனது
ஒட்டோகிராபில்
உன்னையும் என்னையும்
எழுதி வைக்கும்!
உனது
அடிச்சுவடுகளில்
நான் எடுத்து வைக்கும்
ஒவ்வொரு அடிகளும்
எத்துணை
புனிதப் பயணங்கள்...

— நல்லூர் தாஸ்.

# விளையாட்டுத் துறை

## ஓராண்டில் 150 கோடி ரூபா வருமானம் பெற்ற வீரர்

● 1989 ஆம் ஆண்டில் உலகிலேயே அதிக வருமானம் பெற்ற விளையாட்டு வீரன் என்ற பெருமை சுகர்ரே லெனார்டுக்கு கிடைத்துள்ளது.

இவருக்கு சென்ற ஆண்டு மூன்று கோடி டாலர் (இலங்கைப் பணத்தில் 150 கோடி ரூபா) வருமானமாகப் பெற்றார்.

இவர் நடுத்தர உலக குத்துச் சண்டைச் சாம்பியன் ஆவார்.

இரண்டாவது இடத்தை மைக் டைஸன் பெறுகிறார். இவருக்கு ஒருகோடி 40 லட்சம் டாலர் வருமானம் சென்ற ஆண்டு கிடைத்தது.

இத்தகவல்களை அமெரிக்கச் சஞ்சிகை 'இன்ஸைட்றிப் போர்ட்ஸ்' வெளியிட்டது. ★

## 'இன்றும் நானே பெரியவன்' முகமது அலி கூறுகிறார்

● உலக அதிபாரக் குத்துச் சண்டைச் சாம்பியன் மோதலில் மைக்டைஸனை தோற்கடித்ததன் மூலம் பஸ்டர் டக்ளஸ் உலகப் புகழ்பெற்றார்.

யார் இந்த டக்ளஸ்? இப்படி கேட்டனர். அந்த அளவிற்கு அவர் பெயர் முன்னர் அறிமுகமாகவில்லை.

முன்னாள் சாம்பியன் முகமது அலியின் விசிறி இவர்.

மைக்டைஸனை தோற்கடித்த பின்னர் டக்ளஸ், அலியைச் சந்தித்தார்.

அலி சொன்னார்: 'டக்ளஸைச் சந்தித்ததே பெரும் கௌரவம். சிறந்த குத்துச் சண்டை வீரனை டக்ளஸ் தோற்கடித்ததே ஒரு சாதனை.

குத்துச்சண்டையில் இன்று யார் பெரியவன்?

டக்ளஸின் மனேஜர் ஜோன்சன் கேட்டார்.

டக்ளஸ்: 'இன்று நானே பெரியவன்'

முகமது அலி: 'நான் என்றைக்குமே பெரியவன்' ★

## மீண்டும் ஓடப்போகும் பென் ஜோன்ஸன்!

● பென் ஜோன்ஸனை விளையாட்டு ரசிகர்கள் மறந்திருக்கமாட்டார்கள்!

போதைவஸ்து பாவனையால் 1988 இல் சோல் ஒலிம்பிக்கில் 100 மீற்றர் ஓட்டப் பந்தயத்தில் கிடைத்த தங்கப் பதக்கத்தைப்பறிகொடுத்தவர் அவர்.

'அடுத்த ஒலிம்பிக்கில் மீண்டும் ஓடி, எனக்கு ஏற்பட்ட அவமானத்தை துடைப்பேன்' —இப்படி பென் ஜோன்சன் மேற்கு ஜேர்மன் டெலிவிஷனுக்கு அளித்த பேட்டியில் தெரிவித்தார்.

'இப்போது பயிற்சிபெற்று வருகின்றேன். 60 மீற்றர் தூரத்தை இப்போது 6 வினாடிகளில் ஓடி முடிக்கின்றேன்' —என்றும் பென் ஜோன்சன் கூறுகிறார். ★

## உதைப்பந்தாட்ட உலக கிண்ணப் போட்டிகள்

□ முதலாவது உதைபந்தாட்ட உலகக் கிண்ணப் போட்டி 1930 இல் உருகுவே நாட்டில் நடந்தது.

மொத்தம் பதின்மூன்று நாடுகளே இப்போட்டிகளில் கலந்து கொண்டன.

போட்டி எங்கே நடத்தப்படுவது என்ற பிரச்சினை காரணமாக ஐரோப்பிய நாடுகள் சில இதில் கலந்து கொள்ளவில்லை.

ஆர்ஜென்ரினா, பெல்ஜியம், பொலிவியா, பிரேஸில், பிரான்ஸ், இத்தாலி, மெக்ஸிகோ, பரகுவே, பெரு, ருமேனியா, உருகுவே அமெரிக்கா, யூகோஸ்லேவியா ஆகியவைதான் பங்குபற்றின.

இவை நான்கு குழுக்களாகப் பிரிந்து போட்டியிட்டன.

இப்போட்டியில் 18 ஆட்டங்கள் நடந்தன. எல்லாமாக எழுபது கோல்கள் போடப்பட்டன.

முதலாவது அரை இறுதிப் போட்டியில் ஆர்ஜன்ரீனா அமெரிக்காவை 6 — 1 கோல்களால் தோற்கடித்தது.

உருகுவே, யுகோஸ்லாவியாவை 6 — 1 கோல்களால் தோற்கடித்தது.

இறுதிப் போட்டியில் உருகுவே, ஆர்ஜென்ரீனாவை 4 — 2 கோல்களால் தோற்கடித்து, முதலாவது உலக கிண்ணத்தைச் சுவீகரித்தது.

இரண்டாவது உதைபந்தாட்ட உலகக் கிண்ணப் போட்டி 1934 இல் இத்தாலியில் நடைபெற்றது.

இப்போட்டியில் 16 நாடுகள் பங்குபற்றின.

இப்போட்டிகள் நொக்அவுட் முறையில் நடைபெற்றன.

முதலாவது சுற்றில் இத்தாலி அமெரிக்காவைத் தோற்கடித்தது.

செக்கோஸ்லேவேகியா, ருமேனியாவை வென்றது.

மேற்கு ஜேர்மனி, பெல்ஜியத்தைத் தோற்கடித்தது.

ஆஸ்திரியா பிரான்ஸையும் ஸ்பெயின் பிரேஸிலையும், சுவிட்சர்லாந்து தற்போதைய நெதர்லாந்தையும், ஸ்வீடன் ஆர்ஜென்ரீனாவையும், ஹங்கேரி எகிப்தையும் வென்றன.

கால் இறுதிப் போட்டியில் செக்கோஸ்லேவேகியா சுவிட்சர்லாந்தையும், ஆஸ்திரியா ஹங்கேரியையும், மேற்கு ஜேர்மனி சுவீடனையும், இத்தாலி ஸ்பெயினையும் தோற்கடித்து அரை இறுதிப் போட்டிக்குத் தெரிவாகின.

அரை இறுதிப் போட்டியில் இத்தாலி ஆஸ்திரியாவை வென்றது. செக்கோஸ்லோவேகியா ஜேர்மனியைத் தோற்கடித்தது.

இறுதிப்போட்டியில் இத்தாலி 3-2 கோல்களால் செக்கோஸ்லேவேகியாவை வென்றது.

மூன்றாவது இடம் ஜேர்மனிக்குக் கிடைத்தது.

நடைபெற்ற 17 போட்டிகளில் போடப்பட்ட கோல்களின் எண்ணிக்கை 70 ஆகும். ★

தகவல்:
**- செ. தெய்வசீலன் -**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org